சக்தி மலர்

சொற் பொழிவுகள்

புறநானூறும் தமிழரும்

“நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நமக்கு நாட்டுப்பற்று என்பது போய்விட்டது. வீரம் தீரம் என்பனவெல்லாம் அகராதியிற் காணும் சொற்களாய் முடிந்தனவே யன்றி, அவற்றிற்கும் நமது வாழ்க்கைக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமற் போய்விட்டது. நமது நாடு நலம் பெற வேண்டுமாயின், இந் நல்லுணர்ச்சிகளை நாம் மீண்டும் பெறுதல் வேண்டும். இங்ஙனம் பெறுதற்குப் புறநானூற்றுச் செய்யுட்களைவிட நமக்கு உற்ற துணைவேறு யாதுமில்லை.”

ச. வையாபுரிப் பிள்ளை

சக்தி

(317) 16)

புறநானூறும் தமிழரும்

சொற்பொழிவாளர் :

எஸ். வையாபுரிப் பிள்ளை

மு. அருணாசலம்

கி. வா. ஜகந்நாதன்

அ. ச. ஞானசம்பந்தம்

மு. சண்முகம் பிள்ளை

த. தம்பித்துரை,
நியூஸ் ஏஜண்ட். யாழ்ப்பாணம்.

சக்தி காரியாலயம்

ராயப்பேட்டை :: சென்னை-14

முதற் பதிப்பு: நவம்பர் 1, 1943.
இரண்டாம் பதிப்பு: ஜூலை 15, 1950.

உரிமை பதிவு செய்யப்பெற்றது

விலை ரூபாய் ஒன்றரை

குமரி மலர் அச்சகம்—சென்னை-18.

பொருளடக்கம்

			பக்கம்
	தலைமையுரை		
	இராவ் சாகிப் ச. வையாபுரிப் பிள்ளை		1
1.	இலக்கியப் பண்பு		
	அ. ச. ஞானசம்பந்தம்	...	16
2.	சரித்திரம்		
	கி. வா. ஜகந்நாதன்	...	37
3.	சமயம்		
	மு. சண்முகம் பிள்ளை	...	64
4.	தமிழர் பண்பாடு		
	மு. அருணசலம்	...	89

பதிப்புரை

புகழ்எனின் உயிரும் கொடுக்குவர், பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்;

தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே;

யாதும் ஊரே யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா;

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வாணிகன் ஆய்அலன்;

என்றவை முதலான தமிழர் கொள்கைகளைத் திறம்பட விளக்கும் புறநானூறு ஆகிய பழந்தமிழ் இலக்கியத்தைப் போற்றும் நோக்கத்தோடு, இளம் மாணவர்களைக் கொண்ட தியாகராய நகர் வள்ளுவர் குழுவினர் 31-10-'43, 1-11-'43 ஆகிய இரண்டு நாட்களிலும் சிந்தாதிரிப்பேட்டை உயர்தரக் கலாசாலையில் சென்னைச் சருவகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவர் இராவ்சாகிப் ச. வையாபுரிப் பிள்ளையவர்கள் தலைமையில் புறநானூற்று விழா ஒன்று நடத்தினார்கள். அவ்விழாவில் பேசிய நால்வர் பேச்சுக்களும் தலைவர் பேச்சும் இந்நூல் வடிவாக வெளி வருகின்றன. இந்நூல் தமிழருக்கு இலக்கிய விருந்தாக அமைவதாக.

சென்னை
நவ. 1, 1943

சக்தி காரியாலயத்தார்.

தலைமையுரை

இராவ் சாகிப் ச. வையாபுரிப் பிள்ளை

புறநானூற்றிலுள்ள செய்யுட்கள் இயற்றப்பெற்றுச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்து விட்டன. இந் நீண்ட காலத்தை எளிதாகச் சொல்லிவிட்டோம். ஆனால் இதன் பெருண்மையை அத்தனை எளிதாக உணர்ந்து கொள்ளமுடியாது. பலவேறு துறையிலும் தமிழ் நாட்டில் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகள் மூலமாகத்தான் இதனை ஒருவாறு அறியமுடியும்.

கால மென்பது கறங்குபோற் சுழன்று
மேலது கீழாய்க் கீழது மேலாய்
மாற்றிடுந் தோற்றம்

என்றனர் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை. அரசியல் துறையை நோக்குவோம். தமிழ் நாட்டு மூவேந்தர் வமிசங்களும் பல நூற்றாண்டுகள் அரசுபுரிந்து மாய்ந்தன. பல்லவ வமிசம், சாளுக்கிய வமிசம், எத்தனையோ குறுநில மன்னரது வமிசங்கள், விஜயநகரத்து அரச வமிசம், நாயக்கர் வமிசம், பாளையக்காரர் வமிசங்கள் இவை அனைத்தும் ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிபுரிந்து கழிந்தன.

இருங்கடல் உடுத்தஇப் பயங்கெழு மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட ஏமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடுபதி யாகப் போகித்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தனரே (புறம்–363)

என்றனர் ஒரு புலவர். சமயத் துறையைக் காண்போம். பௌத்தம் மிக்க சிறப்புடன் பல நூறு ஆண்டுகளாக

வழங்கிவந்து பின் எக்காரணத்தினுலோ மறைந்து விட்டது. ஜைனமும் அப்படியே வெகுகாலம் வழங்கி இப்போது அங்கங்கே அருகிநின்றுள்ளது. பாசுபதம், காளாமுகம், காபாலிகம் முதலிய மதங்களும் இப்போது ஆராய்ந்து இயல்பு காணவேண்டிய பண்டைப் பொருள் களாய்விட்டன. இவையெல்லாம் போக, சைவ சமயத் திலும் சமயாசாரியர்கள் நால்வர், நாயன்மார்கள், நீல கண்ட சிவாசாரியார், மெய்கண்டதேவர் முதலிய பெரி யார்கள் அனைவரும் தங்கள் அருட்செயல்களை நிகழ்த்தி இறைவனது திருவடி நீழலை யடைந்தனர். இவ்வாறே ஆழ்வாராதியரும் நாதமுனி முதலிய ஆசாரியர்களும் இராமாநுஜரும் தங்கள் அருள் விளங்கும்படி பூவுலகில் நிலவிப் பரமபதம் அடைந்துவிட்டனர். இவர்கள் அனை வர்க்கும் முன்புள்ள ஓர் காலத்தில் சமயவுணர்ச்சி யர்தா யிருக்கக்கூடும் என்று நம் மனம் கலக்கமடைகின்றது.

குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை
வெறுங்கூடு காவல் கொண்டாள் (முத்தொள்ளாயிரம்)

என்று ஒரு பிற்காலப் புலவர் கூறுகிறுர். இதுபோல, தமிழ் மக்கள் வாழ்க்கைச் சரித்திரத்தில் மேற்கூறிய அருட்பெருஞ்செல்வர்கள் வாழ்வையும் அவர்கள் இயற் றிய அரிய தொண்டுகளையும் சிறிது மறந்துவிட்டால், நாம் வெறுங்கூடு காவல் கொள்பவர்களாய்த்தான் இருப்போம் என்று கருதத்தோன்றுகிறது. இனி நமது இலக்கியச் சரிதத்தை எடுத்துக்கொள்வோம். வள்ளு வர், இளங்கோவடிகள், கொங்குவேள், திருத்தக்க தேவர், சேக்கிழார், கம்பர்: இப்பெருங்கவிகள் அனை வரும் என்றும் அழியாத இலக்கியச் செல்வங்களை நமக்கு அளித்து, தங்கள் வாழ்வின் பயனை முற்றுவித் துப் போயினர். இவர்களுடைய திருநாமங்களையும் இவர்கள் இயற்றியளித்துள்ள கவிதைப் பெருங்கோயில்

களையும் சற்று மறக்க முயலுவோம். யாது எஞ்சியுள்ளது என்று நினைப்பதற்கு முன் நம் உள்ளம் பகீரென்கின்றது. வெறுங்கூடுதானும் உள்தோ என நம்மை ஐயுறச் செய்கின்றது. ஒரு புலவர்,

திருத்தக்க மாமுனி சிந்தாமணி கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்—உருத்தக்க
கொங்குவேள் மாக்கதையைக் கூறேம் குறளணுகேம்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கு

என்று கூறினர். இவரது மனப்பான்மையைத்தான் நாமும் அடைந்துவிடுவோம். இனிச் செய்யுட் சரிதத்தை நோக்குவோம். இதன்கண்ணும் எத்தனையோ வேறுபாடுகள் நிகழ்ந்துவிட்டன. யாப்பருங்கலவிருத்தியை நோக்கினால் எத்தனைச் செய்யுள் வகைகள் மறைந்து போயின என்று ஒருவாறு அறியலாம். புதியனவாகச் சில செய்யுள் வகைகள் பெரும் புலவர்களாற் கையாளப் பட்டுப் பெருமையடைந்து பின் ஒளியிழந்து மங்கின.

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியால்
ஞாலம் முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவஎல் லாம்அளந்தார் ஓர்ந்து

என்பது திருவள்ளுவமாலைச் செய்யுள். இங்ஙனம் புகழப்பட்ட குறள் வெண்பா வள்ளுவராலேயே சிறப்பெய்தி விளங்கிப் பின் வாழ்விழந்தது. விருத்தக்கவித் திறங்களெல்லாம் சுமார் கி. பி. 7-ம் நூற்றுண்டளவில் தோன்றியவையே. அகப்பொருளுக்குச் சிறப்புரிமையுடையதாகப் போற்றப்பட்டுள்ள கட்டளைக் கலித்துறையும் பிற்காலத்துப் புதிதாய்ப் புகுந்ததுவே. இங்குக் குறித்தன போன்ற செய்யுளினங்களால் இயன்ற பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்களும் பிற்பட்டு இடைக் காலத்தில் தோன்றியனவே. பிள்ளை என்ற சொல்லை மக்களின்

இளமைக்கு வழங்குதல் மரபன்று என விதித்துள்ளார் தொல்காப்பியர்:

> குழவியும் மகவும் ஆயிரண் டல்லவை
> கிழவ அல்ல மக்கட் கண்ணே

என்பது மரபியற் சூத்திரம். மக்களின் இளமைக்கு 'குழவி' 'மகவு' என்ற இரண்டே சொற்கள்; பிள்ளை முதலிய ஏனைய சொற்கள் அப்பருவத்துக்கு உரியன வல்ல. 'பிள்ளையாட்டு' என்பது தொல்காப்பியத்துள் வந்துள்ளது. அங்கே அச் சொல்லுக்கு வீரன் என்று பொருள். இங்ஙனமிருப்ப, மக்களின் குழந்தைக்குப் பிள்ளை எனப் பெயரிட்டு அப்பருவத்துச் செயல்களைப் பிரபந்தமாகச் செய்தல் பிற்கால வழக்கென்று சொல்லவும் வேண்டுமோ? எனவே பெரும்பான்மையாய் வழங்கிய செய்யுளினங்களும், பிரபந்த வகைகளும் இடையிலே தோன்றி இக்காலத்து வாழ்வு முடியும் நிலையிலுள்ளன. பண்ணத்தி முதலிய பல செய்யுள்-நூல்கள் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே வழக்கொழிந்தன.

இனித் தமிழ்மொழியிலே ஏற்பட்டுள்ள வேறுபாடுகளைக் கூர்ந்து நோக்குவோம். முதலாவது நாம் கவனிக்கத் தக்கது திராவிட மொழிகளிற் பலவும் புறநானூற்றுக்குப் பின் இவ் இரண்டாயிரம் ஆண்டுகளிற் பல்வேறு காலங்களில் தோன்றியன. மலையாளமொழி சுமார் கி. பி. 1100-ல் தமிழிலிருந்து கிளைத்தது. இதற்கு 5, 6 நூற்றாண்டுகட்கு முன்னே கன்னடமும் தெலுங்கும் கிளைத்தன. தமிழுக்கும் இவற்றிற்கும் இடையே உள்ளது தாய்மைத் தொடர்பா அல்லது தங்கைத் தொடர்பா என்ற வியவகாரம் இப்போது அவசியமில்லை. ஆசிரியர் சுந்தரம்பிள்ளை,

> கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமுந்துளுவும்
> உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்

என்று கூறியது பெரும்பாலும் உண்மையேயென நடு நிலையாளர் யாவரும் ஒப்புக்கொள்வர். இதனால் தாய்மை என்னும் பெருமை காரணமாகப் பிற திராவிட மொழிகளின் இளமை குறித்து நமது தமிழணங்கு நகுகின்றாள் என்று கருதல் தவறு. மொழி வரலாறு அறிந்தவன் இங்ஙனம் ஒருபொழுதும் கருதான். இம்மொழிகளெல்லாம் தோன்றுவதற்கு முன்பு புறநானூற்றுச் செய்யுட்கள் தோன்றியனவென அச் செய்யுட்களின் தொன்மையும், அத்தொன்மையின் அளவும் தெளிவாகப் புலப்படுதற்கு மாத்திரமே இங்கு இச்செய்தி கூறப்பட்டதாகும். இரண்டாவது கவனிக்கத்தக்கது தமிழ் மொழியின் சொற் செல்வம். தொல்காப்பியனார் தாமே,

> இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொலென்று
> அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே

என்று கூறினர். ஒருசில வடசொற்களும் ஒருசில திசைச் சொற்களும் பண்டைப் பாடல்களில் காணப் படுகின்றன. ஆனால் அவைகளிலுள்ள வட சொற்கள் வடமொழியினின்றும் நேரே வந்தனவல்ல. பாகதவழியில் தமிழில் வந்து புகுந்தனவாம். உதாரணமாக, பாசி, ஊசி என்பன 'பாசிச் செல்லாது ஊசி முன்னாது' (229) எனப் புறநானூற்றில் வருகின்றன. இச்சொற்கள் முறையே கீழ்த்திசை, வடதிசை என்று பொருள்படும்; பிராசி, உதீசி என்பன இவற்றிற்குரிய வடசொற்கள். திசைச் சொற்களும் மிக அருகியே வந்துள்ளன. 'நெய் யுலை சொரிந்த மையூன் ஓசை' (261) என்ற இடத்து 'ஓசை என்றது ஆகுபெயரான் ஓசையையுடைய கறியை; இஃது ஒரு திசைச்சொல்' என்று உரைகாரர் எழுதினர். பிற்பட்ட காலத்திலே அளவற்ற வடசொற்கள் குடி புகுந்தன. தேவாரத்தில் ஒரு பக்கம் திருப்பிப் பார்த்தால் போதுமானது; 100-க்கு 20 விழுக்காடு வட சொற்கள் காணப்படும். எனவே முதலில் சமயம் பற்றிய

சொற்களே மிகுதியாய் ஆளப்பட்டன. பின்னர், தத்துவநூல் பற்றிய சொற்கள் இன்னும் மிகுதியாய்க் கொள்ளப்பட்டன. வர வர வட சொற்கள் மிகுந்து மணிப்பிரவாள நடையென ஒன்று கி. பி. 9-ம் நூற்றாண்டளவில் தோன்றத் தொடங்கிற்று. கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளை வடமொழி விழுங்கிவிட்டதுபோல் தமிழ் மொழியை அது விழுங்கி விடவில்லை. இது தமிழின் இயற்கை யாற்றலையும் நம் மூதாதையரது அறிவின் திட்பத்தையும் நன்குணர்த்துகிறது. திசைச் சொற்களும் வரவரப் பெருகி விட்டன. அக்கம்பக்கத்திலுள்ள கன்னடம், சிங்களம், தெலுங்கு, துலுக்கு, போர்த்துகீசியமொழி, டச்சு மொழி, பிரஞ்சு, ஆங்கிலம் முதலியவற்றுக்குரிய சொற்களும் தமிழில் வந்து புகுந்தன. புறநானூற்றுச் செய்யுட்கள் தோன்றியபின் இரண்டாயிரம் ஆண்டுகளாக இத்தனை மொழிச் சேர்வுகளும் ஏற்பட்டுள்ளன. இச்சொல்-தொகுதியேயன்றி வாக்கிய அமைதியும் சிறிது சிறிதாக மாறியுள்ளது. உதாரணமாக 'அருங்கேடன்' என்பது கேடு அரியன் அதாவது கேடு இல்லாதவன் என்று பொருள்படும். இத்தொடர் வடமொழி வாக்கிய அமைதியைப் பின்பற்றியது. பள்ளிச் சிறுவர்கள் 'நான் உடைத்தாயிருக்கிறேன்' என்று பாடம் படிப்பதை நாம் அடிக்கடி கேட்கிறோம். இது ஆங்கில வாக்கிய அமைதியைப் பின்பற்றியது. யாழ்ப்பாணத்து உலக வழக்கில் வழங்கும் வாக்கிய அமைதி நமக்குப் புதுமையாகவே இன்றும் உள்ளது. தமிழிற்கு இயல்பாயுள்ள வாக்கிய அமைதியினின்றும் வேறுபட்டுப் பல புத்தமைதிகளும் இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தோன்றி வந்திருக்கின்றன.

மேலே பல மொழிகளுக்கும் உரிய சொற்களைக் குறித்தோம். அந்தச் சொற்கள் எல்லாம் நமது நாட்டிற்கும் பிற நாடுகளுக்கும் இருந்த தொடர்பினால் ஏற்பட்டன.

அத்தொடர்பிற்கு அறிகுறியாகவும் உள்ளன. இத் தொடர்புகளும் பல காரணங்களால் உண்டாயின. வாணிகம், குடியேற்றம், சமயம், அரசாட்சி, கூலிப் படை முதலியன இக்காரணங்களுள் ஒருசில. இங்ஙன முள்ள கூட்டுறவுகளெல்லாம் கால-அடைவில் வர வர நிகழ்ந்தனவாகும்.

இங்கே கூறினவெல்லாம் சுமார் இரண்டாயிரம் ஆண்டு களாகப் புறத்தே கண்கூடாக நிகழ்ந்த நிகழ்ச்சிகள். கண்ணுக்கு அப்பாற்பட்டதாய் அகத்தே—உள்ளத் திலே-கருத்துலகிலே நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை வரை யறை செய்து கூறுதல் அருமையினும் அருமை. ஆங்கி லேயராட்சி நிலைபெற்றதன் பின்னர் நமது உள்ளப் பாங்கில் ஏற்பட்டுள்ள வேறுபாடுகளைக் கவனித்தால் நான் சொல்வதன் உண்மை நன்கு புலப்படும். நமது சமயக்கொள்கைகளிலே, சமுதாயக் கொள்கைகளிலே, இல்வாழ்க்கைக் கொள்கைகளிலே, அரசாட்சிக் கொள் கைகளிலே, கூட்டுறவுக் கொள்கைகளிலே, கல்விக் கொள்கைகளிலே, இன்னும் எத்தனையோ வகையான கொள்கைகளிலே நமது மனப்பாங்கு பெரிதும் வேறு பட்டுவிட்டது. இதனை யாவரும் எளிதில் உணரக்கூடும். ஆங்கிலேயராட்சி நமது நாட்டில் நிலைபெறத் தொடங்கி 150 ஆண்டுகளே ஆகின்றன. இச் சுருங்கிய காலத்தில் இத்தனை வேறுபாடுகள் நமது கருத்துலகிலே தோன்றி யனவாயின், இரண்டாயிரம் ஆண்டுகளில் எத்தனை வேறுபாடுகள் இக்கருத்துலகில் தோன்றியிருக்கக் கூடும் என்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

நமது காலத்திற்கும் புறநானூற்றுச் செய்யுட்கள் தோன்றிய காலத்திற்கும் இடைப்பட்ட மிக நீண்ட காலத்தில் புறவுலகிலும் அகவுலகிலும் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை இங்கே சிறிது விரிவாகக் கூறியது ஒரு

பயன் கருதியாகும். 'ஏதோ இரண்டாயிரம் வருஷங் களுக்கு முன்பு' என்று லகுவாகச் சொல்லளவில் உணர்ந்து கொண்டாற் போதாது. காலத்தின் ஒவ் வொரு பகுதிக்கும் பொருண்மையுண்டு. ஒவ்வொரு பகுதியும் அகம் புறம் என்ற இருவகை யுலகிலும் நிகழ்ந் துள்ள நிகழ்ச்சிகளால் நிரம்பியிருக்கின்றது. நூற்றாண் டுக்கு நூற்றாண்டு வேறுபாடு; தலைமுறைக்குத் தலை முறை வேறுபாடு. பின் தலைமுறையிலுள்ளார் முன் னுள்ள தலைமுறையாரினின்றும் விலகி வேறுபட்டு வந்திருக்கிறார்கள். இவ்வேறுபாடு வரவரப் பெரிதாகி வளர்ந்தது. முடிவு யாது? நாம் இப்போது வாழும் உலகம் வேறு; நமது மூதாதையர்களான புறநானூற் றுக் கவிஞர்கள் வாழ்ந்த உலகம் வேறு. இவ்விரண்டு உலகங்களும் தேசம் இடையிட்டவையல்ல; காலம் இடையிட்டவையாகும். புறநானூற்று உலகிற் புகுந்து அக்கவிஞர்களது சித்தவிருத்தியை அறிவதற்கும் அவர்கள் கூறுவனவற்றை நன்கு உணர்ந்து கொள்வ தற்கும் மிக்க முயற்சி இன்றியமையாததாகும். அம் முயற்சியை ஆராய்ச்சியாளர் செய்துவர வேண்டும். அதற்கும் நமக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. நமக்கு வேறு வகையான பயனை இவ் அரியநூல் தர வல்லது. இக்காலத்து இளஞ் சகோதரர்களுக்கு வேண்டுவனவாகிய சில நன்மொழிகளையே, திருவாணை களையே, (Messages) புறநானூற்றிலிருந்து இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்புள்ளவர்கள் கூறும் கருத்துக்கள் நமக்கு எவ்வளவு பொருத்தமாகும் என்று சிலர் நினைக்கலாம். ஆனால் பெருங்கவிஞர்களெல்லாம் எக்காலத்துக்கும் பொதுவான கருத்துக்களை அங் கங்கே கூறிச் செல்வர். பெருங்கவிஞர்க்குரிய இயல்பு கள் பலவற்றில் இதுவும் ஒன்று என்று சொல்வது

தவறாகாது. இப்பொதுக் கருத்துக்களேயன்றி அவர்கள் கூறியன வேறு சிலவும் காலதேச வர்த்தமானங்களையைச் சார்த்தியுணரத் தக்கனவாம். அவற்றினின்றும் நமக்கு நன்மை பயப்பன சில உய்த்துணரத் தக்கனவாயிருக்கும். ஆதலால் இவ் ஐயப்பாடு வேண்டாததாகும்.

முதலாவதாக நாம் கண்டுகொள்ள வேண்டுவது ஒன்று உண்டு. நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நமக்கு நாட்டுப்பற்று என்பது போய்விட்டது. வீரம் தீரம் என்பனவெல்லாம் அகராதியிற் காணும் சொற்களாய் முடிந்தனவேயன்றி, அவற்றிற்கும் நமது வாழ்க்கைக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமற் போய்விட்டது. நமது நாடு நலம்பெற வேண்டுமாயின், இந் நல்லுணர்ச்சிகளை நாம் மீண்டும் பெறுதல் வேண்டும். இங்ஙனம் பெறுதற்குப் புறநானூற்றுச்செய்யுட்களைவிட நமக்கு உற்ற துணை வேறு யாதுமில்லை. பாரி என்னும் வள்ளல் இறந்த பிற்பாடு அவனது பெண்மக்களும் கபிலரும் அவனது குன்றை நோக்கிக் கூறிய செய்யுட்கள் நமக்கு இந்நாட்டுப்பற்றை மீண்டும் தரவல்லன.

அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே! (112)

இச் செய்யுளிலே எத்தனை துன்பம்! தாங்கள் பெண்களாய்ப் பிறந்தமையால் இக்குன்றினை இழந்தோம் என்றுகூடக் கருதுவதுபோல் தோன்றுகின்றது. தாங்கள் இளமை முதல் இன்புற்று விளையாடி வளர்ந்த இக்குன்றை எளிதிற் பிரிய மனம் வரவில்லை.

ஈண்டுநின் றோர்க்கும் தோன்றும் சிறுவரை
சென்று நின் றோர்க்கும் தோன்றும் மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகும் முன்றில்
தேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே (114)

என்ற செய்யுளில் பிரியாவிடை பெற்றுப் பிரிகின்ற தன்மை எவ்வளவு நன்றாகப் புலப்படுகின்றது.

புறநானூற்றுக் காலத்தில் வாழ்ந்தவர்கள் 'ஒரு பகல் வாழ்க்கைக்கு உலமருதல்' (அதர்வது வருந்துதல்) மிகவும் இழிவானதென்று கருதினார்கள். போர் புரிந்து வாழும் வீர வாழ்க்கையே வாழ்வென்று கொண்டார்கள். வீரனுக்கே பேரழகியுரியள் என்ற கொள்கையும் இருந்தது.

திருநயத் தக்க பண்பினிவள் நலனே
பொருநர்க் கல்லது பிறர்க்கா காதே (342)

என்ற அடிகளால் இதை உணரலாம். போரிடை வீழ்தலையே நன்மரணமாக மதித்தார்கள். அம்மரணம் பெறாத விடத்துப் பெறாதவனைத் தருப்பையிற் கிடத்தி வாளால் இருகூறுபடுத்து வீரமரணம் பெறும்படிச் செய்தனர். போரில் முதுகுகாட்ட நேரிட்டால், உண்ணாவிரதமாய் வடக்கு நோக்கியிருந்து உயிர் துறந்தார்கள். ஒருவன் செய்த வீரச் செயலைப் பாருங்கள்:

வேந்துடைத் தானை முனைகெட நெரிதர
ஏந்துவாள் வலத்தன் ஒருவனாகித்
தன்னிறந்து வாராமை விலக்கலிற் பெருங்கடற்கு
ஆழி யனையன் மாதோ என்றும்
பாடிச் சென்றோர்க் கன்றியும் வாரிப்
புரவிற் காற்றாச் சீறூர்த்
தொன்மை சுட்டிய வண்மை யோனே. (330)

இவ்வகை வீரனது புகழுடம்பைத் தமிழ் மக்கள் தெய்வ மாக்கி நடுகல் அமைத்து வணங்கி வந்தனர். ஒவ்வொரு வர்க்குமுரிய கடமைகளைக் கூறும் இச் செய்யுளைக் கவனியுங்கள் :

> ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
> சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
> வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
> நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
> ஒளிறுவா ளருஞ்சமம் முருக்கிக்
> களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (312)

தேசப்பற்றையும் வீரவுணர்ச்சியையும் நாம் மீண் டும் பெறுதற்கு வேண்டும் உள்ளக் கிளர்ச்சி புற நானூறு என்ற இப்பண்டை நூலில் கிடைப்பதுபோல் வேறு எவ்விடத்தும் இல்லை. இரண்டாவதாக, சமூக சேவையை நோக்குவோம். இக்கருத்தை ஓர் அழகிய செய்யுள் மிக அழகாக விரித்துக் கூறுகின்றது:

> உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
> அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
> தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
> துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
> புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
> உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
> அன்ன மாட்சி யனைய ராகித்
> தமக்கென முயலா நோன்றாட்
> பிறர்க்கென முயலுநர் உண்மை யானே! (182)

இச் செய்யுளிலே 'தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்' என்ற கருத்து நயம்பெற உரைக்கப்பட்டுள் ளது. சமூக சேவையில் உயிர்நாடி எதுவோ அதைத் தேர்ந்தெடுத்து அதனை ஓர் ஆணையாக நமக்குத் தந்திருக்கிறார் ஆசிரியர். இவ்வுண்மை எல்லாக் காலத் தார்க்கும் எல்லாத் தேசத்தார்க்கும் பொதுவல்லவா?

இதற்கு இலக்கியமாக நாம் யாரைக் கொள்ளுதல் கூடும்? காந்தியடிகளைத்தான் கூறுதல் வேண்டும்.

இங்குக் கூறிய நெறியிலே சென்றவன் சமூகத்திற்கு உண்மையான தொண்டு இயற்றியவனாவான். ஒன்று மனங்கொள்ளத்தக்கது. நாட்டு மக்கள் பசியால் ஆயிரக் கணக்காய் மடிந்து வருகிறார்கள். அவர்களை நம்மால் இயன்றவரைக் காப்பாற்றுதல் நமது கடமை. இயன்ற அளவு பொருளாலும் பிறபடியாலும் உதவி செய்தலை நாம் மேற்கொள்ளல் வேண்டும். புறநானூற்றுப் புலவரொருவர் இவ்வாறு உதவிவந்த வள்ளலுக்கு ஒரு பட்டம் அளித்திருக்கிறார்: 'பசிப்பிணி மருத்துவன்' என்று.

பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே (173)

இவ் அடிகள் என்றும் நமது ஞாபகத்தில் இருத்தல் வேண்டும்.

சமூகத்தைப் பற்றிக் கூறும்பொழுது சமூகத்துக்கு அச்சுப் போன்றிருக்கும் பெண்களைக் குறித்துச் சொல்லுதல் அவசியம். ஒரு சமுதாயம் பெண்களுக்குக் கொடுத்திருக்கும் உரிமையினின்றும் அதனுடைய நாகரிகத் தன்மையும் பண்புமேம்பாடும் (Culture) உணரப் படும் என்று கூறுவர். நமது நாட்டில் அவர்களை வெகு காலமாக அடிமைகளாகவும் ஆடுமாடுகள் போலவும் நடத்திவந்திருக்கிறோம். புறநானூற்று முன்னையோர் அவ்வாறு கொள்ளவில்லை. அவர்களை மிக்க கௌரவத்தோடு நடத்தி வந்திருக்கிறார்கள்.

மனைக்கு விளக்காகிய வாணுதல் கணவன் (314)

என்று புறநானூற்றுப் புலவரொருவர் கூறுகிறார். இதனால் பெண்களை மிகப் பெருமையோடு போற்றிவந்தார்கள் என்பது விளங்கும். மனைவி கணவன் என்ற

இருவரிடையுமுள்ள அன்பு பற்பல வகைகளில் உணர்த்தப்படுகின்றது. ஏகபத்தினி விரதமே தக்கதென ஒரு புலவர் உய்த்துணர வைக்கின்றனர்.

வடமீன் புரையும் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதென இலை நீ (122)

என்பது ஒரு புறப்பாட்டு. கணவன் இறந்தவுடன் மனைவி இறத்தலை 'சககமனம்', எனப் பெயரிட்டு ஒரு சமுதாய வழக்கமென்று கூறிவிடுவர். ஆனால் ஓர் அரிய செய்யுளில் தன் அரும்பெறல் மனைவி இறந்தும் தான் உயிர் வாழ்ந்திருப்பதை நினைத்து ஒரு கணவன் புலம்புகின்றான்.

ஞாங்கர் மாய்ந்தனள் மடந்தை
இன்னும் வாழ்வல் என்னிதன் பண்பே (245)

என்ற அடிகளில் இச்செய்தி புலப்படுகிறது.
கல்வியின் பெருமை யாவரும் நன்கறிந்ததேயாம்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு

என்றனர் வள்ளுவர். 100க்கு 93 பேர் எழுத்துவாசனையற்றிருக்கும் நம் நாட்டினர்க்குக் கல்வியின் இன்றியமையாமையைப் பின்வரும் செய்யுள் மிகத் தெளிவாகவும் அழுத்தமாகவும் வற்புறுத்திக் கூறுகின்றது.

உற்றுழி யுதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோனாறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்

கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே! (183)

இனி நாம் மேற்கொள்ளவேண்டும் குறிக்கோள் சில வற்றைக் காண்போம். நாம் அறஞ் செய்து வாழவேண்டும் என்று பலவழியாலும் புறநானூற்றுச் செய்யுட்கள் உணர்த்துகின்றன:

சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல (31)

என்று ஒரு புலவர் கூறுகின்றார். இங்கே புலவர் அரசனது குடையை வருணிக்கின்றார். 'பொருளும் இன்பமும் அறத்தின் பின்னே தோன்றும் காட்சிபோல, சேர பாண்டியருடைய இரண்டு குடையும் பின்னாக ஓங்கிய நினது ஒன்றாகிய வெண்கொற்றக்குடை' என்பது கருத்து. இவ் அறத்தின் வழியே செய்யப்படுகின்ற நல்வினை யொன்றுதான் நமக்கு உறுதுணையாவதென்று ஒரு புலவர் வற்புறுத்துகின்றார்.

வாழச் செய்த நல்வினை யல்லது
ஆழுங் காலைத் துணைபிறி தில்லை (367)

என்பது அவர் கூறிய பாட்டு.

இந்த நல்வினையைத் திரட்டியவர்களே 'நல்லவர்' என்ற பெயர்க்கு உரியர். அவர் வாழுமிடமே நல்லதாயிருக்கும் என்று ஓர் கவிஞர் விளக்குகிறார்:

எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (187)

என்பது அக்கவிஞர் நன்மொழி.

இங்ஙனம் நல்லராய் வாழ்ந்தோர்க்கே இவ்வுலகத்துப் புகழுண்டு; ஏனையோர்க்கு மேலுலகத்தும் நற்பேறு இல்லையென்று ஒரு புலவர் பறைசாற்றுகின்றார்:

இவணிசை யுடையோர்க் கல்ல தவணது
உயர்நிலை யுலகத்து உறையுளின்மை (50)

என்ற அடிகள் இவ்வாறு முழக்குகின்றன. இகவாழ்விற் குரிய தத்துவ நன்மொழியை (Philosophy of life) கீழ் வருஞ் செய்யுள் நன்கு உணர்த்துகின்றது.

யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்றும் இலமே முனிவின்
இன்னா தென்றலு மிலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானது
கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை யிகழ்தல் அதனினும் இலமே! (192)

இவ்வாறாக, இப்புறநானூறு பல நூற்றாண்டுகட்கு முன்பு தோன்றியதேயாயினும் இக்காலத்துக்குரிய நெறிகளையும் எக்காலத்துக்கும் உரிய உண்மைகளையும் நமக்குக் காட்டிக்கொண்டு நிற்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்கின்றது. இந்நூலினைக் கற்றுப் பயனடைதல் தமிழ் மக்கள் அனைவர்க்கும் கடனாகும். கற்றற்கு வேண்டும் உள்ளத்தையும் தகுதியையும் தமிழ்ப்பற்றையும் உண்மைத் தமிழுணர்ச்சியையும் இறைவன் நமக்கு அருள்புரிவானாக.

1. இலக்கியப் பண்பு

மன்னு உலகத்து மன்னுதல் குறித்து ஆன்றோர்கள் இயற்றிய நூல்கள் அனைத்தும் இலக்கியமென்றே கூறப்படும். இலக்கியம் என்ற சொல்லின்கண் பாடல், வசனம், நாடகம் என்ற அனைத்தும் அடங்கும். இவை மூன்றும் இதனுள் அடங்குமேனும் இவற்றுள் சிறந்து நிற்பன செய்யுட்களே. ஏனைய இரண்டினையும் விடச் செய்யுட்கள் சிறப்படையப் பல காரணங்கள் உள. சுருங்கக்கூறல், விளங்க வைத்தல், உணர்ச்சி யூட்டல், இராகத்திற்கு ஒத்து வருதல் முதலியன அவற்றுட் சிலவாம். இச்செய்யுட்களையும் இரண்டுவகையாகப் பிரித்தல் கூடும். முதல் வகையைப் 'பாடல்கள்' என்றும் இரண்டாம் வகையைச் செய்யுட்கள் என்றுங் கூறலாம். பாடல்கள் என்று அழைக்கப்படுவனவும், செய்யுட்களும் உருவத்தானும், வடிவத்தானும் ஒத்திருப்பினும் மேலே கூறிய காரணங்களால் தம்முள் மாறுபாடுடையன. முன்னையது பாடவேண்டுமென்றதொரு கட்டுப்பாட்டுக்கு இணங்கிப் பாடப்படுவதன்று. செய்து தீரவேண்டுமென்ற விடத்துச் செய்யப்படுவதே செய்யுளாம். முன்னையது யாம் கூறியபடி அமைவதோடின்றிப் பாடுகின்ற ஆசிரியனது மனநிலையையும் பொறுத்து வெளி வருவதாம். இதனைத்தான் நாவின் வேந்தர் நன்குணர்ந்து 'உளங்கனிந்த போதெலாம் உவந்து உவந்து பாடுமே' என்று கூறினர். எனவே, பெரிதும் கவிஞனின் மனநிலையை ஒட்டி வெளிவரும் இப்பாடல்கள் என்று கூறினமாத்திரையானே, அவை கட்டுப்பாட்டிற்கு அடங்காதவை என்ற உண்மை தானே பெறப்படுகின்றதன்றோ! ஆகவே இப்பாடல்களையும் செய்யுட்களையும்

உணர்வேர்டு படிப்போர்க்கு இவ்விற்றிடையே உள்ள வேற்றுமை தெற்றெனை விளங்கும்.

உணர்வோடு படிப்பதாவது என்னையெனின் பர்டல்களை அவற்றிற்காகவே பயில்வதாம். வேறு பயன் கருதிக் கற்றவழிக் கவிஞனின் உட்கோளை உணர முடியாது போய்விடும். அதாவது சிறந்த பாடல்களைப் படிப்பதால் உண்டாம் இன்பமே படிப்பதன் கைம்மாறும். எனினும், மனப்பண்பை மாற்றியமைத்தல் முதலிய பிறதொழில்களும் பாடல்கட்கு உண்டேனும், சிறந்ததாகக் கருதப்படுவது, படிக்கும்பொழுது தன்னை மறந்து அனுபவிக்கும் இன்பமேயாம். இது மேலை நாட்டாருக்கும் ஒப்பமுடிந்த தொன்றும். இக்கருத்தையே வலியுறுத்துவான் வேண்டிக் கம்பநாடரும் "செஞ்சொற் கவியின்பம்" எனக் கூறியிருத்தல் காண்க.

இத்தகைய பாடல்களைப் பயிலும்போது படிப்போர் மனம், அவர் காலத்திய உலகம், நடை, உடை, பாவனைகளில் ஈடுபட்டிருக்குமேயானல், அப் பாடலுலகிற் புகுந்து முழு இன்பத்தை அடைய முடியாதென்பது ஒருதலை. காவியம் என்பதே ஒரு தனி உலகாக, ஏனைப் புற உலகின் துணை வேண்டப்படாத நிலையில் இருப்பதாகலின், அதன்கட் புகவிரும்புவோர் மனத்தைத் தூய்மைப்படுத்தி அக்காவிய உலகிற் புகினன்றி அதனை அனுபவித்தல் இயலாதாம்.

பாடல்களுக்குரிய மேலே குறிக்கப்பட்ட தன்மையுடைய பாடல்கள் எதுவாயினுஞ் சரி அவை பெருமை பெறுவது எதனல் என்று ஆராயப்புகின், அது சற்று இயலாத காரியமேயாம். உதாரணமாக 'அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்' (112) என்ற புறப்பாட்டை நோக்குவோமாயின், அதன்கண் உள்ள சுருங்கக்கூறி விளங்க வைக்கின்ற அழகும், தந்தையை இழந்து

வருந்தும் மங்கையர் துயரால் அவலச் சுவையும், 'வென் றெறி முரசின் வேந்தர்' என்ற வஞ்சப் புகழ்ச்சியும் படிப் பாரது மனத்திற்பட்டு உருக்காமற் போகா. ஆனால் மேலே கூறிய பொருள், பாடலின் எப்பகுதியில் உள்ளது? சொற்களோ யாரும் அறிந்த மிக எளிய சொற்கள். கூறப்பட்ட செயலோ யாவரும் அறிந்ததே. பெரிய கதையோ, கற்பியப் பொருளோ ஒன்றும் ஆண்டில்லை. அவ்வாறாக இத்தனை அழகும் யாண்டுத் தோன்றியது? அது பாடுவோரின் திறத்திற்றான்றிற்று என்று கூறுவதே ஒரு வகை விடையாம். அவ்வாறின்றி மேலே கூறிய ஒன்றால் இப்பாடல் சிறப்படைந்ததெனக் கொள்ளின் அது தவறும். பாடப்படுகின்ற பொருளால் பாடல் சிறப்படைகின்றது எனக் கூறுவதும் பொருந் தாது. மேலே கூறிய பாடலே இதற்குச் சான்றாம். பெரிய பொருளை வைத்துங்கூடச் சாதாரண மனிதன் சாதாரணச் செய்யுளைத் தான் செய்வான். ஆனால் கவிஞன், பொருளெனப் பிறரால் மதிக்கப் படாத சிறிய பொருளை வைத்தும் யாவரும் வியக்கத்தக்க பாடலைப் பாட இயலும். அதனாலே இத்தகைய பாடல்களில், சொல்லமைப்போ, அன்றி வேறெதுவோ சிறப்பைத் தருவதில்லை. உண்மையைக் கூறுமிடத்து, இப் பாடல் களில் மேலே கூறிய பாகுபாடுகள் செய்வதும் இயலாத காரியம். "இடைப்படக் குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும் நெய்யுடை அடி சில் மெய்பட விதிர்த்தும்" (188) என்ற அறிவுடை நம்பியின் பாடலைப் படிக்கும்பொழுது, உண்மையாகவே குழந்தை இல்லாதவரும் தமக்கு ஒரு குழந்தையைக் கற்பனை உலகிலேனும் உண்டாக்கிக் கொண்டு, அது மேலே கூறியபடிச் செய்வதாக நினைத்து மகிழ்வர். இவ் வெண்ணங்கள் படித்துச் செல்லும்போதே உண்டா கின்றனவேயன்றி ஒவ்வொரு சொல்லையும் படித்துப்

பிறகு கண்ணை மூடிக்கொண்டு அச்சொல்லின் பொருளைச் சிந்தித்து யாரும் உணருவதில்லை. இத்தகைய பாடல்களில் ஒரு சொல்லை மாற்றி யமைத்தோ அன்றி அடியைப் பெயர்த்தோ கூறிப் பார்க்கின் உண்மை விளங்கும். உண்மைப் பாடல்களை நன்கு பழகிய செவிகள் அம்மாற்றத்தை ஏற்றுக் கொள்வதில்லை. இசையில் 'அபசுரம்' என்பது தோன்றும்பொழுது என்ன மனோநிலை உண்டாகிறதோ அதுவே ஈண்டும் உண்டாகக் காணலாம். சொற்களின் ஓசையும் பொருளமைதியும் ஒருங்கே ஈண்டுத் தோன்றுவதனுற்றான் இவற்றைப் பாடல்கள் எனக் கூறுகிறோம். அக்கவிஞனையல்லாது வேறு யாரும் அங்ஙனம் அமைக்க வியலாது என்றும் கூறுகிறோம். அத்தகைய பாடல்களைப் படிக்கையில் கவிஞன் கூறவந்த பொருளைப் பிறர் உணருமாறு கூறி விட்டதான ஒரு உணர்ச்சியும், 'இதுவே நாம் தேடி அலைவது, அதனை ஈண்டுக்காண்கின்றோம்' என்றதொரு உணர்ச்சியும் தோன்றுகின்றன. காரிகை கற்றுக் கவி பாடி, எதுகை மோனைக்கு இடருற்றுச் சதுரகராதியின் உதவியைத்தேடி, அமைக்கப்பட்டதும் செய்யப்பட்டதுமான செய்யுட்கள் பிறரைக் கவராததன் காரணம் இதுவே.

கடவுளைக் கூறவந்த ஒரு கவிஞன், "கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பு" என்று கூறினான். அவனுக்குப் பிறகு 2000 ஆண்டுகள் கழித்துப் படிக்கும் நாம், படித்த உடனே மனத்தில் தேடியதைக் கண்ட மகிழ்ச்சி யடைகின்றோம். மேலே கூறிய நான்கு சீர்களை எத்தனைச் சொற்களாலே வேண்டுமாயினும் கூறிப் பார்ப்போம். அப்பொருளமைதியை, அச்சொல்லமைதியின் பண்பை, நாமடைதல் இயலாத காரியம். அங்கே தான் உண்மைப் பாடலின் பண்பையும், அதனை

இயற்றிய கவிஞனது மன அமைதியையும், காண்கின்றோம். நம்மை ஒத்த மனிதனுகப் பிறர்க்கு அவன் காணப்படினும், உண்மையில் நம்மைவிடப் பல படிகள் மேலே இருப்பவன் அவன் என்ற உண்மை விளங்குகிறது.

இத்தகைய சிறந்த பாடல்கள் அப்புலவன் மனத்தில் முன்னமேயே கருக்கொண்டிருந்த பெருங் கருத்தின் உருவம் எனக் கொள்வோமேயானுல் அது பொருத்தமிலாக் கூற்ருய் முடியும். பாடல்களைப் பாடுவதன்முன் உருவகிக்க முடியாது பனிப்படலம் போன்று, கவிஞன் மனத்துட் கிடக்கின்ற உணர்ச்சியே பிறகு அவனது ஆக்குந் திறத்திற்கேற்ப ஒரு சொற்போர்வை போர்த்து வெளி வருகிறது. முன்னரே அவன் பாடற்பொருளை உணர்ந்திருப்பானுயின் அதனைப் பாடியே இரான். தன்னைச் சிறுவன் என நினைந்து எள்ளி, ஏழு அரசர்கள் தன் நாட்டை வளைத்தனர் என்ற செய்தியைக் கேட்ட அரசக் கவிஞன் மனத்தில் இன்னது பாடவேண்டும் என்ற எண்ணம் கருக்கொண்டிருக்க முடியாது. அவனை உணர்ச்சி ஆட்கொண்டு இருந்தது. ஓரிரண்டு சொல்லும் பொருளும் அவன் மனத்தில் தோன்றி இருத்தல் கூடும். அவ்வுணர்ச்சி சிறிது சிறிதாகச் சொல் வடிவங் கொண்டு வெளிவருகின்ற நிலையில்தான் பின்னர் வர வேண்டிய கருத்துக்கள் தோன்றும். ஆகவே, 'நகுதக்கனரே நாடுமீக்கூறுநர்' (72) என்று கூறியபிறகே அவர்கள் நகுதற்குரிய காரணமும் அவர்கள் கூறிய சொற்களும், அதற்குத் தான் அளிக்கும் விடையும், தான் இனியாற்றவேண்டிய செயலும் ஒன்றன் பின் ஒன்ருய்த் தோன்றுகின்றன. இத்தகைய பாடல்களைப் படித்தவுடன் இவை கவிஞன் உள்ளத்தில் பொள்ளெனப் பொங்கிய பாடல்கள் என்பதும் ஏனையபாடல்களைப்

போல முயற்சி செய்து இயற்றப்பட்டவை அல்லவென்பதும் தெற்றென விளங்கும். இதனை ஷெல்லி என்ற மேலை நாட்டுக் கவிஞர் Spontaneous outburst என்றும் Unpremeditated art என்றுங் கூறுவர். இதனையே Dr. Bradley, 'It is a creation and not a manufacture and they possess the magical effect which decoration cannot produce' என்று கூறுகிறார். எவ்வளவு அணிகளை வைத்தாலும், எதுகை மோனைகளைக் கொட்டினாலும், செய்யுள் செய்யுளே. யமகம் திரிபு முதலிய செய்யுட்களிடத்து இத்தகைய பேரானந்தத்தைக் காணவியலாது. அதற்கு மாறாக ஆசிரியனது வன்மையை வியக்கின்றோம். அதோடு நின்றுவிடுகிறோம். இப்பாடல்களைப் படிக்கையில் ஆசிரியனை மறக்கின்றோம். அப்பாடல்களின் எதிரே தலைகுனிந்து வணங்கி மகிழ்ந்து அதனை ஏற்றுக்கொள்கிறோம்.

இத்தகைய அருங்கருத்துக்களைக்கூட வசனத்தில் கூறின் அவை இத்துணைப் பெருமை அடைய இயலாது. பாடல்கள் மட்டுமே பொங்கி எழும் கருத்துக்களைக் கொண்டுவருகின்றன. உணர்ச்சியைத் தட்டி எழுப்பி உணர்ச்சி வடிவாகவே வெளிவரும் தன்மை பாடல்களுக்கு மட்டுமே உண்டு. மனிதமனம் எவ்வளவு உயரம் செல்ல முடியுமென்பதை அறிய வேண்டின் பாடல் வழியாகவே காண இயலும். பாடல்கள் எனப்படுபவை ஏனையோர் கண்டுங் காணாத பொருள்களைக் காணுமாறு செய்வதாம். எனவே மனப் பண்பை மாற்றம் செய்தல், உணர்ச்சி யூட்டுதல், தளர்ச்சி யடைந்த மனத்திற்கு ஊக்கம் அளித்தல் முதலான தொழில்களைச் செய்வதும் பாடல்களின் இரண்டாவதான தொழில்களாம். இவற்றையெல்லாம் செய்வதால் பாடல்கள் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி எனக் கூறுதல் மிகையாகாது. வாழ்க்கை எத்தகையதாயிருக்க வேண்டும் எனக்கூறும்

பெரும் பாடல்கள் எல்லாம் பாடுவோனது மனத்திட்பத்தால் பெருமை யடைவனவேயாம்.

இதுகாறும் பொதுவாகப் பாடல்களைப் பற்றிய பண்புகளிற் சில கண்டோம். இனிப் புறநானூற்றிற் காணப் பெறும் உண்மைகளிற் சிலவற்றைக் காண்போம். புறத்தைப்பற்றி முன்னர்ச் சில உண்மைகள் அறியப்பட்டுள்ளன. இவற்றிற் காணப்படும் பாடல்கள் எல்லாம் பாடல் வகையிற் சேர்ந்தனவேயாம். இவற்றைப் பாடியவர் பலர். பல ஊர்களைச் சேர்ந்தோர். ஒவ்வொருவரும் காவிய உள்ளம் படைத்தவராயினும் பல காலத்து வாழ்ந்தவராவர். இவருட் சிலரே ஒரு காலத்து வாழ்ந்தவர். இவர்கள் பாடிய அளவாற் சிறியதும் பெரியதுமான இப்பாடல்கள் நாம் என்றுங் கண்டுங் காணாத பொருள்களையும் அவற்றின் தன்மைகளையும் எடுத்து விளக்குவனவாகும். பாடலுண்மை (Poetic Truth) என்று சொல்லப்படும் பண்பு இப்பாடல்களில் யாண்டும் மிளிரக் காணலாம். அதாவது இயற்கையின் தன்மையையோ, அமைப்பையோ, தோற்றத்தையோ, அல்லது மனித மனத்தின் இயற்கையையோ எடுத்து விளக்க வருங்கால் அவற்றின் உண்மைத் தன்மைக்கு மாறுபடாதபடி புலவன் கூற்று இருத்தல் வேண்டுமென்பதாம். இது ஏன் சிறந்ததாகக் கருதப்படுகின்றதென ஆராயின் அதன் உண்மை விளங்கும். பாடல்கள் அடிப்படையில் வாழ்க்கையின் நிறைவு குறைவு கூறும் ஒரு கருவியாய் முடியும். பாடல்கள் பெருமையடைவதெல்லாம் வாழ்க்கையின் ஓயாத வினாவாகிய, எவ்வாறு வாழவேண்டுமென்பதற்குத் தரப்படுகின்ற விடையைப் பொறுத்ததேயாம். அது புலவனுடைய அறிவு, ஆராய்ச்சி, அனுபவம், கருவிற்றிருவுடைய தன்மை (Genius), விசால நோக்கம், மனப்பான்மை, மன ஆழம் முதலியவற்றைப் பொறுத்துள்ளது. ஆகவே இவற்றால்

நிரம்பப்பெற்றவனும் வாழ்க்கையின் சிக்கை அறுக்க முயல்பவனும் ஆகிய ஒருவன் பாடல்கள் இயற்ற முற்படுவானேயாயின் அவை பெருமையுடையனவாய்த் திகழும். மேலும் வாழ்க்கையின் வினு, உலகந் தோன்றிய காலந்தொட்டு இருந்து வருகிறது. இதுகாறும் அதற்கு முடிந்த ஒரு விடைக்கண்டார் யாருமிலர் என்றே துணிந்து கூறலாம். தீர்க்கதரிசிகளும், கவிகளும் அவரவர்கள் தன்மைக்கேற்ப இவ் வினுவின் ஒவ்வொரு பகுதிக்கே விடை தந்து போயினர். எனவே அவருள் சிறந்தவரை எவ்வாறு பொறுக்குவோம் என ஆராயின், அவர்கள் விடை எவ்வளவுக்கெவ்வளவு உண்மையின் பக்கத்தில் வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களது பெருமை விரியும். ஆகவே கால வேற்றுமையால் இவர்கள் பெருமை உண்மையிற் குறைவதில்லை. அதற்கு மாருக, அது என்றும் நின்று தனது பெருமையை எக்காலத்தும், எந் நாட்டிலும் உணர்த்திக்கொண்டே இருக்கும். எனவே, அப்படிப்பட்ட சிறப்புடையன இப் புறப் பாடல்கள் என்னலாம்.

எனவே பலர் இயற்றிய இவற்றை Objective poetry என்று மேலைநாட்டார் கூறும் தொகுதியில் ஒருவகையாகச் சேர்க்கலாம். இப் பாடல்கள் எல்லாம் ஆசிரியப் பாவால் ஆனவை. ஆசிரியப் பாவிற்குள்ள தனிச் சிறப்பென்னவெனின், தாளம் முதலிய கட்டுப்பாட்டிற்கு உள்ளடங்கி நடவாது மனிதனின் எண்ணம் எவ்வாறு விரைந்தெழுகின்றதோ அதன்வழி வருவதாகும். தன் மனத்தில் கருவுற்றிருக்கும் கருத்தை ஆசிரியன் வெளியிட முற்படுகையில் இசைக் கட்டுப் பாடும், தாளக் கட்டுப்பாடும், எதுகை மோனைக் கட்டுப் பாடும், இலக்கணக் கட்டுப்பாடும், அவை தடையின்றி வெளிவருவதற்குத் தடை செய்வனவாய் உள. ஆகவே, அவ்வகைக் கட்டுப்பாடுகள் மிகுதியும் இல்லாததும்,

பெரிதும் எண்ணம் செல்கின்ற வழியே செல்வதுமான ஆசிரியப்பாவால் இப்பாடல்கள் அமைந்தது மிகுதியும் நோக்கத் தக்கது. ஒரோ வழிச் சொல்லடுக்கு முதலி யன காணப்படுமேயன்றி யாண்டும் பொருளழகின் பொருட்டே சொற்கள் அமைந்திருப்பதைக் காணலாம். பிற்காலத்துத் தோன்றிய யமகம், திரிபு முதலிய பாடல் களில் சொல்லழகின் பொருட்டுப் பொருளமைதி இழக் கப்படுகின்றதைக் காண்கிறோம். எனவே, இவையெல் லாம் இல்லாத செவ்விய ஆசிரியப்பாமுறையில் திகழ் கின்றன புறப்பாடல்கள். மேலும் உணர்ச்சிப் பெருக்கும், கற்பனைப் பெருக்கும், விவ்காரப் பெருக்கும் (Narrative) ஆசிரியப் பாவிலேயே இயன்றனவாம். ஏற்ற இடத்தில் ஏற்ற சொல்லை உபயோகிப்பதால் உண்டாகின்ற நிறை வுத்தன்மை (Precision in poetry) பாடல்களில் மிகுதியும் வேண்டப்படுகிறது. இதை நன்கு நோக்குமிடத்து இசையையும் தாளத்தையும் தனதுறுப்பாய்க் கொண்டு நடைபெறும் இசைப்பாடல்களில் இது மிகுதியும் இயலாத காரியம் என்பது நன்கு விளங்கும். உதாரண மாகக் "கெடுகசிந்தை கடிதிவள் துணிவே" (279) என்ற பாட்டை நோக்குவோமாக. தன் தமையனையும் கணவனை யும் அணித்தே இழந்தாளொருதாய் மற்றோர் நாளும் செருப்பறை கேட்கின்றாள். தன் மகனை அழைத்துப் போருக்கு அனுப்புகிறாள். அவ்வடிகள் வருமாறு :

இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிதுவிரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமக னல்ல(து) இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே!

யாண்டும் எளிய சொற்களே காணப்படுகின்றன. எனி னும் என்ன? ஒரு சொல்லை எடுத்துவிட்டுப் பிறிதொரு புதுச் சொற் புணர்த்துப் பார்ப்பின் உண்மைவிளங்கும்.

புலவன் மனோ தத்துவம் நன்குணர்ந்தவன். முன்னொரு நாள் தமையனையும் பின்னொரு நாள் தன் உயிரினுமினிய கணவனையும் இழந்த தாய்க் கன்றோ, மற்றும் ஓர் நாள் செருப்பறை கேட்பதன் மனோநிலை தெரியும். அதனை நன்குணர்ந்த புலவன் இன்றும் என்ற சொல்லில் வைத்த உம்மையால் தாயின் மனோ நிலையைமட்டுமல்ல அப் பாடலைப் பயில்வோர் மனோ நிலையையும் ஒருவாறு விளக்கிவிட்டான். இனி அந்நிலைக்குப் பிறகு தாய் என்ன நினைத்தாள்? வீர மறக்குடி மகளாகலின் போரி டத்து விருப்பங் கொண்டாள். எனினும் தனது கைம் மையையும், ஒரே மைந்தன் குலவிளக்காக உள்ளா னென்பதனையும் நினைத்தாள். உடனே தன்னையுமறியாது ஒரு மயக்கம், மருட்சி கொண்டாள். என்றாலும் என்ன! கடமையின் முன்பு எதுதான் நின்று போராட முடியும்? ஆதலால் மைந்தனை அழைத்து இன்னது சொல்வ தென்று அறியாது வேலைக் கையிற்கொடுத்தாள். மைந்தன் குறிப்பறிந்து செல்லப் புறப்பட்டான். அப் பொழுதுதான் தனது கனவுலகிலிருந்து மீண்ட தாய் அவனது ஆடை புழுதிபடிந்திருப்பதைக் கண்டாள். உடனே 'வெளிது விரித்து' உடுத்தினாள். உடனே தாயினது மனப்பான்மை ஒரு முத்தமிடுமாறு செய் திருக்கும். அதனை ஆசிரியர் கூறாமற் கூறுகிறார். முத்த மிட்ட நிலையில் அவனது குஞ்சி திருத்தப்படாத நிலையி லிருப்பதைக் கண்டாள் போலும். உடனே 'பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவினாள்'. பிறகும் தாழ்ப்பின் தன் மனத்தையே தான் நம்பாதவள் போலத் தன் கலக்கத் தையும் வெளிக்காட்டாது 'செருமுகம் நோக்கிச் செல்க எனக் கூறினாள். இவளது துணிவை மனக்கண்ணால் காணுகின்ற ஆசிரியனுக்கும் கூட இச் செயல் துணுக் கத்தை உண்டாக்குகிறது. தான் நேரே காணுவது போல் நினைந்து 'ஒரு மகனல்லதில்லோள்' என்ற நான்கு

சொற்களாலும் தன் மனத்திற்றோன்றிய அவலச் சுவையைக் கொட்டிவிட்டான். இக் கருத்தையும் இச் சொல்லோவியத்தையும் மனத்துட் கொண்டு பாடலை மறுபடியும் படிப்போமானால் உண்மை விளங்கும். ஓர் எழுத்தையேனும் சொல்லையேனும் மாற்றவோ, எடுத்து வேறு போடவோ இயலாதென்பது தெற்றெனப் விளங்கும். மேலும் கூறப்பட்ட செயல்கள் எல்லாம் மிக மிக்விரைவில் நடைபெறுகின்றன. அதனை ஆசிரியன் இத்தகைய ஓசை நலமுடைய பாட்டானன்றிக் கலி முதலிய ஓசையால் பாட இயலாது. பாடினாலும் இப்பயனை அது விளையாது என்பது திண்ணம். இதனைத்தான் அதன் கண் நிறைவுத் தன்மை என வியக்கின்றோம். இதனை ஆசிரியர் தொல்காப்பியனார் 'நுண்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும், மென்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக் குறித்த பொருளை முடித்தற்கு வரூஉம்' என்ற செய்யுளியற் சூத்திரப் பகுதியால் விளக்கினார். முதுமொழி என்ற பகுதிக்கே மேற்குறித்த இலக்கணஞ் சாலும் எனக் கொள்ள வேண்டுவதின்று.

உலகிடைத் தோன்றிய எல்லாப் பொருள்களையும் நடைபெறும் எல்லாச் செயல்களையும் யாவரும் காண்கிறோம். ஆனால் காணுவோனது மனோநிலைக்கு ஏற்ப அப்பொருள், செயல்களினது உண்மைக் கருத்துத் தோன்றும். பெரியோர்களது பாடல்களும் அத்தன்மையனவே. பயில்வோரது மனப்பண்பு, பரந்த நோக்கம் முதலியவற்றிற்கேற்ப அப்பாட்டல்களின் பொருளும் நயமும் விளங்குகின்றன. ஆகவே சிறந்த கவிஞன் ஒரு செயலைக் காணுவோனாயின் ஏனையோர் காணும் காட்சிக்கும் அவன் காணும் காட்சிக்கும் வேற்றுமை உண்டு. பொருளின் உட்கருத்தைக் காணக்கூடிய வன்மை அவனிடம் உண்டு. காண்பதோடில்லை: தான் கண்ட பேருண்மைகளைப் பிறர் காணுமாறு காட்டும் அரிய

ஆற்றலும் அவன்பாலுண்டு. உலகியலையும், மக்கள் வாழ்க்கையையும், நீண்டகாலம் ஒரு புலவன் காண்கின்றான். அதன்கண் உள்ள நிறைவு குறைவுகளையும் நன்கு ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருகின்றான். தான்வந்த முடிபு இயற்கை வாழ்வோடு ஒத்ததாயிருத்தல் வேண்டுமென்பதே அவனது குறிக்கோள். ஏனைய மக்கள் எல்லோரும் அவனைப் போலவே வாழினும் வாழ்க்கையின் உட்கோளை உணரும் பெற்றி அவர் மாட்டு இல்லை. ஆனால் புலவனிடம் அவ்வன்மை நிரம்பியிருக்கின்றது. ஆதலால் தான் காணும் பேருண்மைகளைப் பிறருக்கு எடுத்துக்காட்ட முற்படுகின்றனன். இன்று உலகம் போர் மயக்கத்தில் மூழ்கி உய்வழியின்றிச் சுழல்கிறது. மனிதமனத்தின் இயல்பு மாறுகின்றவரை உலகிடைப் போர் நிற்கப் போவதில்லை எனப் பலருங்கூறக் கேட்கின்றோம். ஆனால் அம்மனமாற்றத்திற்குரிய வழியைக் கூறும் வீரர் ஒருவரை இதுகாறும் உலகம் காணவில்லை. இத்தகைய போர்களின் அடிப்படையான காரணம் என்ன? எக்காரணம் அறுபடின் அதன் காரியமாகிய இப்போர்கள் ஒழியும் என்ற வினாக்கள் யார்மாட்டும் நிகழாமல் இருப்பதில்லை. சிலர் அது இன்றியமையாத ஓர் செயல் என்றுகூட எண்ணுவர். போர் நிறுத்தம் என்பது பகற் கனவு என்ற எண்ணமும் பலர்மாட்டுத் தோன்றுகிறது. 'இடைக்குன்றூர்கிழார்' என்ற ஒரு புலவர் இத்தகைய எண்ணமுடையார். இது,

ஒருவனை ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவ(து) அன்(று) இவ்வுலகத்(து) இயற்கை (7 6)

என்ற அவரது பாடலால் தெரிகிறது. எனினும் இன்னுஞ் சிலர் அதனினு மேம்பட்ட அறிவு முதிர்ச்சியால் இவ்வுண்மைகளை ஆராய முற்பட்டனர். போர் முதலிய புற நிகழ்ச்சிகட்குக் காரணமாயிருப்பன மனத்துட் டோன்றுகிற வெறுப்பு முதலியவே யாமன்றே! 'யான்

பெரியன்' முதலிய ஆணவ் விளைவால் போர் நிகழலாம். அன்றேல் தனக்குப் பிறர் தீங்குசெய்ததாக் நினைப்பின் அதனை மறுப்பான் வேண்டிப் போர் நிகழலாம். இனிக் கீர்த்தி முதலியன பெறற்குக் காரணம் போரே எனக் கருதியும் போர்நிகழலாம். எனவே மேற்கூறிய மூன்று காரணங்களில் பெரும்பாலும் பகைமையின் வித்துக் களும் அதன் விளைவாகிய போரின் வித்துக்களும் அடங்கக் காணலாம். இவ்வாறு உண்மை இருப்பதைத் தன் கூரிய அறிவால் கணியன் பூங்குன்றன் என்ற புலவர் பெருமான் காண்கின்ருன். இங்ஙனம் உண்மை காணுவதே பிறர் அறிய இயலாத ஒரு சிறப்பாகும். ஆனுல் புலவன் இவ்வுண்மைகளைக் கண்டதோடு நிற்க வில்லை. இவற்றை நீக்குதற்கும் வழி கண்டான். மூன்று அரிய உண்மைகளை எடுத்துக் காட்டி மேலேகூறிய மூன்று காரணங்களையும் அடித்துவிடுகின்ருன். முதலா வதாக உள்ள காரணம் 'யான் பெரியன்', ஏனையோர் ஆளப்பட வேண்டியவர், என் மாட்டு அடங்கி நடத் தற்கு உரியர், என்ற தவருன எண்ணமாகும். இதற்கு விடையாகப் புலவன் "யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்று கூறினன். யாதும் நம்முடைய ஊர் என்ற எண் ணம் நன்கு மனத்தில் பதியுமானல் "இடஞ் சிறிதென் னும் ஊக்கந்துரப்பப்" பிறநாட்டைக் கைப்பற்ற வேண் டும் என்னும் எண்ணம் அற்றுவிடும். மேலும் யாவரும் கேளிர் என நினைக்கும் ஒப்பற்ற மனேநிலை கைவரப் பெறின் கேளிருள் போர் தொடுத்தல் கேவலமானது என்ற எண்ணமுந்தோன்றிப் போர் இல்லாது செய்து விடும். இனி ஒருவேளை கேளிருள்ளும் போர் நிகழக் காண்டுமால், அஃதங்ஙனமாகப் புலவன் இவ்வாறு கூறியது பொருந்துமோவென ஐயுறுவார்க்குப் பின்னடி யால் விடையிறுக்கின்ருன். அக் கேளிருள் போர் நிகழக் காரணம் என்னையோவென நோக்கின் தனக்குத்

தீங்கிழைத்தான் என அது முடியும். பிறன் தீங்கு செய்தான் என நினைத்தமரத்திரத்தானன்றிக் கேளிருள் இப்போர் நிகழ ஏதுவில்லை, ஆதலால் அங்ஙனம் தீங்கிழைத்தான் எனக் கருதும் ஒருவனை நோக்கிக் கவிஞர் பெருமான் "தீதும் நன்றும் பிறர்தர வாரா, நோதலும் தணிதலும் அவற்றோரன்ன" என அமைதி கூறுகின்றார். ஆதலால் உலகில் ஒருவர்க்கொருவர் தீங்கிழைத்தலென்பது இயலாத காரியம் என்பதை உணர்ந்து, வருந் துன்பங்கள் தம் வினைப்பயனாலேயே வருகின்றன என்பதையு முணர்ந்துவிடின் மேலே கூறிய காரணத்தாற் போர் நிகழ்தலும் பகைமை மூளுதலும் இல்லையாம். இனி உடற்கு நேரே ஒருவன் ஊறு செய்வானாயின் அதை விதியின் காரணமாக விளைந்தது என்றல் எங்ஙனம் பொருந்துமென வினவுவாரை நோக்கி, ஊறு விளைப்பினும் அது துன்பஞ் செய்வதாக நினைப்பதும் நினையாது விடுவதும் மனமாகலானும், அம் மனத்தாலதுவும் வினைப்பயன் என உணர்தல் கூடுமாயின் ஆண்டுப் பகைமை விளைதல் இல்லை எனக் கூறுவாராகி 'நோதலுந்தணிதலும் அவற்றோரன்ன' எனக் கூறினார். மேலும் பிறர் விளைத்ததாகக் கருதப்படுந் துன்பம் சாக்காட்டையே பயப்பினும் அதுவும் தனது வினைப்பயனால் விளைந்ததென்று கொளல் வேண்டுமே தவிர வேறு நினைதல் ஆகாதென்றும், அச் சாவும் அஞ்சத்தக்க தன்றென்றுங் கூறுவார் 'சாதலும் புதுவதன்று' என்று கூறுவதோடு அப்பேராசிரியர் அமைந்தாரல்லர். வாழ்க்கையின் மாட்டுத் தோன்றிய அன்பாலேயே சாவில் அச்சம் உண்டாதல் இயற்கை. இப் பேருண்மையைப் பிறர் காணவியலாதிருக்கக் கவிஞர்பிரான் காணுகின்றார். ஆதலின் அதனைப் பரிகரிக்க வேண்டி 'வாழ்தல் இனிதென மகிழ்ந்தன்று மிலமே' எனவும் கூறினார். இனி இவற்றை எல்லாம் நன்கு உணர்ந்த

வழியும் வாழ்க்கையில் வெறுப்பு, கோபம் என்ற உணர்ச்சிகட்கு இடங்கொடுப்பின் பின்னர் மேலே கூறியவற்றைப் பாதுகாத்தல் இயலாது என்பது ஒரு தலை. எத்துணை நீதிகளைக் கற்றிருப்பினும் இவை இரண்டு உணர்ச்சிகளையும் வளரவிடின், பிறகு பகைமையின் காரணங்களை ஆய்ந்து உண்மையில் பகைமை என்பது இருத்தற்கில்லை, என உணரும் அறிவு தன் வேலையைச் செய்ய இயலாதாகலின், அவ்வுணர்வுகளையே அடியோடு கல்ல வேண்டுமென்பார் 'முனிவின் இன்னாதென்றலு மிலமே' என்றுங் கூறினர்.

இனி மூன்றாவதாக் காணப்படுவது கீர்த்தி கருதிப் போர் விளைத்தலாம். கீர்த்தி என்பது ஏனையோரால் தரப்படும் புகழே. ஆதலால் பிறர் ஒருவரைப் பற்றிப் புகழ்ந்து பேசுமளவும் தனிப்பட்ட மனிதன் அப்புகழை அடையவே முயலுவான். ஆதலால் மக்களை நோக்கி ஆசிரியர் யாரையும் அவ்வாறு புகழவும் வியத்தலும் வேண்டாம் எனக் கூறுகின்றார். அவ்வாறு காரணமின்றிக் கூறின் அதனை உலகம் ஏற்றுக்கொள்ளாதாகலின் ஏற்ற காரணங்களைத் தருகின்றார்.

உலகியலை நன்கு உணர்ந்த பூங்குன்றனார் ஏனையோர் கண்டுங் காணாத ஒருண்மையைக் காணுகின்றார். உண்மையாகவே செயற்கருஞ் செய்கை செய்து உலகிற்குப் பெரும்பயன் விளைக்கின்றார் யாதொரு புகழையும் அடையாது போகவும், போலியான செயல்களைச் செய்து மக்களினத்தை ஏமாற்றுகின்றவர் பெரும் புகழ் அடைதலை வியப்போடு காண்கின்றார். அவ்வாறு இருப்பதன் காரணத்தை ஆராய்ந்து ஆசிரியர் ஒரு முடிவிற்கு வருகின்றார். அஃதாவது உலகிடைப் புகழ் பெறுதலும் அதற்கு மறுதலையான இகழைப் பெறுதலும் அவரவர் வினைப்பயனேயாம் என்பதாம். ஆற்றிடைப்பட்ட புணை தன்வழிச் செல்லுமாற்றலின்றி ஆற்று

நீர் செல்லும் வழியிலேகுதல் போல, உயிர்கள் தங்கள் விருப்பம்போல் புகழையும் இகழையும் அடைதல் இயலாதென்றும், வினைப்பயன் உள்ள வழியே அது இயலுமென்றும் கூறுவராயினர். இம்மட்டோ? அருஞ் செயல்கள் செய்து தீருதலும் அவரவர் விருப்பம்போல் இயலுவதன்றென்றும் அதுவும் வினை வழி இயலுவ தாகலின் அங்ஙனம் செயற்கருஞ் செயல் செய்தாரை வியத்தல் ஒருவகையிற் றவறுடையதே என்ற முடிபிற் கும் வருவாராயினர். ஆதலால்தான் 'பேர்யாற்று, நீர் வழிப்படும் புணைபோல் ஆருயிர்'—

முறைவழிப் படூஉ மென்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியிற்
பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை இகழ்தல் அதனினு மிலமே !

என்று ஆணித்தரமாக எடுத்தோதினர். இவ்வுண் மையை நன்கு மனத்திற் பதிப்பார்களாயின் உலகத்தார் வீணாக ஒருவரைப் புகழ்தலினின்றும் தவிர்வார்களாக லாலும் அதன் பயனாகப் புகழ் கருதிப் போரிடும் நொய்மையாளர்கள் போரிடுவதினின்றும் நீங்குவரென் றும் அறிகிறோம்.

எனவே இதுகாறும் கூறியவற்றான் சிறந்த புலவன் ஏனையோர் காணுகின்றதைவிட அப்பாற் காணக்கூடிய வனென்பதும், அவ்வாறு தான் கண்ட பேருண்மை களைப் பிறர் காணுமாறு காட்டும் வன்மையுடையவ னென்பதும் பெற்றாம்.

உலகில் வழங்கும் எம்மொழியாயினும் சரியே, அச் சிறந்த மொழியின் இலக்கிய உலகில் இவ்வளவு அரிய சிறப்புப் பொருந்திய பாடல் ஒன்றைக் காணு வது அருமையினும் அருமையே. அத்தகைய சிறப்புத் தமிழ் மொழிக்கே உண்டு. அதினும் அதன்கண்

வழங்கும் தலையாய இலக்கியங்களிற் சிறந்த புறநானூற்றுத் தொகுதியில், இப் பாட்டிலிருப்பது முற்றிலும் சால்புடைத்தே.

மக்களினத்தின் அறியாமையைப் போக்கி அறிவு கொளுத்தல் முதலான தொழில்களைச் செய்யவேண்டுவதும் பாடல்களின் வேலையே. மேலை நாட்டார் படிக்கும் போது உண்டாம் இன்பத்தையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் பாடல்களை ஒரு பகுதியாகவும் ஒழுக்கம் கற்பிக்கும் பாடல்களை மற்றொரு பகுதியாகவுங் கொண்டனர். பின்னையதை 'Didactic Poetry' என்று கூறுவர். அத்தகைய வேறுபாடு தமிழ்ப் பாடல்களில் காணுவது இயலாததொன்றாம். ஈண்டுக் காணப்படும் எல்லாப் பாடல்களும் இன்பமூட்டல், கற்பித்தல் என்ற இரு தொழில்களையும் செய்வனவாகும்.

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிகன் ஆயலன் பிறரும்
சான்றோர் சென்ற நெறியென
ஆங்குப் பட்டன்(று) அவன்கை வண்மையே (134)

என்ற பாடலின் பாடல் நயமெலாம் ஒருபுறமிருக்க மக்களிற் பெரும்பாலோர் செய்யுந் தவற்றைப் புலவர் எவ்வளவு அழகாகக் கண்டிக்கின்றார் என்பது நோக்கற்பாலது. வண்மைத் தன்மையுடையார் மறுமைப் பயனாய கைம்மாற்றைக் கூட எதிர் பார்ப்பின் அது வண்மையாகாதென்ற பேருண்மையை எடுத்து விளக்கும் அழகு நோக்கற்பாலது. இனி அரசனொருவனை நோக்கி, நால்வகைப் படையும் உடையராய்

மண்கெழுதானை யொண்பூண் வேந்தர்
வெண்குடைச் செல்வம் வியத்தாலோ விலமே
எம்மால் வியக்கப் படுஉ மோரே
சீறூர் மன்ன ராயினு மெம்வயிற்
பாடறிந் தொழுகும் பண்பி னோரே! (197)

எனக் கூறுகின்றார். உண்மைக் கவிஞன் கேவலம் வயிற்றுப் பிழைப்புக்குப் பாடுகின்றவ னலன் என்பது இதனாற்றெளியப்படுகின்றதன்றோ! இனிச் "செல்வத்துப் பயனே ஈதல், துய்ப்பே மெனினே தப்புந பலவே" என்றும் "ஈயென விரத்தல் இழிந்தன்று அதனெதிர் ஈயே னென்றல் அதனினு மிழிந்தன்று, கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன் றதனெதிர் கொள்ளே னென்றல் அதனினு முயர்ந்தன்று" என்றும் வரும் பாடல்கள் தமிழ் நாட்டிற்கு மட்டுமல்ல உலக முழுதுக்கும், எக் காலத்துக்கும், எவ்வகை நாகரிகமுடைய மக்கட் டொகுதிக்கும் பயன்படும் நீதிகளாம்.

இலக்கியத்தில் பெரிதும் விரும்பப்படுவது சுவைகள். அச் சுவைகள் தானும் எண்வகைப்படும். அவை யாவும் இப் பாடல் தொகுதியுள் யாண்டும் பரக்கக் காணலாம். விரிவஞ்சி ஒன்றிரண்டு காட்டிச் செல்கின்றோம். நகையாகிய சுவை பயக்கும் பல பாடல்களுள் "நள்ளி வாழியோ...மாலை மருதம் பண்ணிக் காலைக்-கைவழி மருங்கிற் செவ்வழி பண்ணி—வரவெமர் மறந்தனர்"—(149) என்ற மடமை காரணமாக நகை பிறந்த பாடலும் ஒன்று. அவலச் சுவையில் "பூத்தலை யறு...பாரிமகளிர்"—(200) என வரும் பாடலும் "அளிய தாமே சிறுவெள்ளாம்பல்...அல்லிப் படூஉம் புல்லா யினவே"—(248) என்ற பாடலும் இன்னும் 63 போன்ற பாட்டலும் காணத் தக்கன. இளிவரல் என்ற சுவைக்கு "தொடித்தலை விழுத்தண்டூன்றி"—(243) என்ற பாடலும், மருட்கை என்ற சுவைக்கு "நினைக்குங்காலை மருட்கை யுடைத்தே"—(217) என்ற ஒப்பற்ற பாடலும் உதாரணங்களாம். அச்சமாகிய சுவை "களரி பரந்து... பகலுங் கூவுங் கூகையொடு, பிறழ்பல் ஈம விளக்கிற் பேய் மகளிரொடு, அஞ்சுவந்தன்றிம் மஞ்சுபடு முதுகாடு" (356) என்பதுபோன்ற பாடல்களாலும், பெரு

மிதம் என்ற உயர்ந்த சுவை "இரவலர் புரவலை நீயு மல்லை"—(162) என்பது போன்ற பாடல்களாலும் விளக் கப்படுகின்றன. இனி வெகுளி என்ற சுவை "வரிவயம் பொருத வயக்களிறு போல, இன்னுமாருது சினனே" (100) என்பது போன்ற பாடல்களிடத்தும் இன்னும் 300, 278 என்ற எண்ணுள்ள பாடல்களிடத்தும் பரக்கக் காணலாம். உவகை என்ற சுவை "ஆதல் நின்னகத் தடக்கிச், சாதல் நீங்க எமக் கீத்தனையே...நீலமணி மிடற் றொருவன்போல, மன்னுக பெரும நீயே" — (91) என்பது போன்ற பாடல்களிடத்துக் கிடைக்கின்றது.

இத்தனைச் சுவைக்கும் நிலைக்களனுயுள்ள இப் பாடற் றொகுதியில் இலக்கிய அழகுகள் இன்னும் எத்தனையோ உள. ஓர் இலக்கியம் அக்கால மக்களின் வாழ்க்கையை, வாழ்க்கையின் குறிக்கோளை, மக்கட்பண்பை, எடுத்து விளக்கும் கண்ணுடியாயிருக்க வேண்டுமென்பது இலக் கிய ஆராய்ச்சியாளர் முடிபாம். அம்முறையில் கிறிஸ்து நாதர் தோன்றுதற்குப் பன்னூருண்டுகட்கு முன்னர் வடவேங்கடம் தென் குமரியாயிடை வாழ்ந்த மக்களின் மனோ நிலையை, அத் தமிழ் நாட்டில் பல்வேறிடங்களிற் ருேன்றிய இப் புலவர் பெருமக்கள் நன்கு எடுத்துக் காட்டி யுள்ளனர். அப் பலதிறப்பட்ட படங்களுள் இரண்டை ஈண்டு எடுத்து ஆராய்வோம். இவற்றுள் முதலாவது ஒருசார் சிறுபாலான மக்கள் தொகுதியின் மனோ நிலை. அது உயர்ந்த நிலை என்பதைக் காட்டவர வில்லை. அதன் மறுதலையான தாழ்ந்த மனநிலை யுள்ளா ரின் படமது. இன்னுர் பிறர் துன்பங்கண்டு அதனுல் மகிழ்வும், அத்துன்பத்திற்கு ஒரு சிறிது தாங் காரண ராயின் அதனுல் பெருமிதமுங் கொள்வர். இதனைப் புலவன் ஏற்றுக் கொள்கிருன் எனக் கூறுதற்கில்லை. எனினும் தன் முன் காணும் மக்களுள் ஒரு கூட்டத் தாரின் பண்பைப் படம் பிடித்துக் காட்டவேண்டிச் செய்த செய்யுள் இது எனக் கூறலாம்.

கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்லெயில்
புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத்
தேர் வழங்கினை (15)

என்ற இப் பாடலால் மக்கட் பண்பின் இழிந்தோர் செய்கை வெளியாகின்றது. இவ்வகை மக்கள் அன்றும் இன்றும் என்றும் உள்ளனர். இத்தகையோர் இருப்பதனாலேயே சான்றோர் பெருமை தெற்றென விளங்குகிறது. "எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மின்" எனக் கூறும் சீரிய மரபும் நன்கு விளங்குகிறது.

இனிப் பெரிதும் மேம்பட்ட மக்கட் கூட்டத்தாரின் மனப் பண்பை வெளியிடும் பாட்டு ஒன்றை நோக்குவோம். மனப்பண்பு சிறக்கச்சிறக்க உயிர்த்தொகுதியின் விரிவும், அவ்விரிவில் காணப்படும் ஒற்றுமையும் நன்கு விளங்கும். கேவலம் விலங்கினங்களும், தம்மை ஒத்த உயிரும் இயல்பும் உடையன என நினைக்கும் ஒப்பற்ற மனோநிலையை இப் பாடலால் அறிகின்றோம். அதுவும் எழுத்து வாசனை அறியாத ஒரு வேடுவப் பெண் மனத்துட்டோன்றும் கற்பனைக் காவியத்தை ஈண்டுக் காண்கின்றோம். இப் பாடலின் கருத்து மிகவும் எளிமையானதே. ஒரு வேட்டுவப் பெண் குடிசை வாயிலில் தினை உலர்த்தியுள்ளாள். அதனண்மையில் ஒரு கலைமான் பெடையோடு விளையாடுகிறது. அவளது கணவனும் அதனருகே வேட்டை யாடிய களையால் மெய்மறந்து உறங்குகின்றான். இந்நிலையில் தினையைக் கோழி தின்கின்றது. இத்தினையைத் தவிர (இரவுக்கு) வேறு ஆகாரம் இல்லை. இச் சமயத்தில் கோழியை ஓட்டவேண்டும். ஆனால் அவள் அதனைச் செய்யவில்லை. அதன் காரணத்தை ஆசிரியர் மொழியாலேயே காணுவோமாக.

கைம்மான் வேட்டுவன் கணைதுயின் மடிந்தெனப்
பார்வை மடப்பிணை தழீஇப் பிறிதோர்
தீர்தொழிற் றனிக்கலை திளைத்து விளையாட
இன்புறு புணர்நிலை கண்ட மனையோள்
கணவ னெழுதலு மஞ்சிக் கலையே
பிணவயிற் றீர்தலு மஞ்சி யாவதும்
இல்வழங் காமையிற் கல்லென வொலித்து
மானதட் பெய்த வுணங்குதினை வல்சி
கானக் கோழியோ டிதல்கவர்ந் துண்டென: (320)

எனவே பெண்மானும் ஆண்மானும் இன்பந் துய்த்த லினின்று தவிரும் என அஞ்சிய அவள் தினையைத் தின்னும் கானக் கோழியை வெருட்டாது விட்டுவிட்டாள் என்று ஆசிரியர் கூறுகிறார். சற்று நின்று ஆராய்வோமாயின் செயற்கையில் மூழ்கி வாழும் நமக்கு இப்பாட்டல் எவ்வளவு அறிவு கொளுத்தும் என்பதும், அக்கால மக்களின் உயரிய மனப்பான்மை எந்நிலை யடைந்திருந்த தென்பதும் தெற்றெனை விளங்கும். இதனைவிட உயர்ந்த மனப்பண்பைக் குறிக்கோளாக வேணும் கொண்டிருந்தனர் எனப் பிறநாட்டு இலக்கியங் களில் நாம் காணுமாறிலது.

எனவே இது காறுங் கூறியவற்றான் இலக்கியத் துக் குரிய பண்பும், பாடலுக்குரிய பண்பும் பரந்து மிளி ரும் தன்மையுடையது புறநானூறு என்பது விளங்கும். பொய்யாய நாகரிகத்தே புக்கழுந்தி நாடோறும் உய்வழி யின்றி வருந்துந் தமிழர்க்கு என்றுங் கலங்கரை விளக் காய் நின்று உதவுவது புறநானூறு என்பதும் வெள் ளிடைமலை. இத்தகைய அருநூலைக் காட்சியளவிற் கண்டு மகிழாது தமிழனெனத் தருக்கி வாழும் ஒவ் வொருவனும் இதனைத் தவறாது கற்றல் வேண்டும் என்றுங் கூறி இதனோடு இச்சிறு கட்டுரையை முடித் துக் கொள்கின்றேன்.

2. சரித்திரம்

முன்னுரை

'இந்தியர்களிடம் சரித்திர உணர்ச்சி இல்லை' என்ற குறைபாடு மேல்நாட்டினர் பலரால் அவ்வப்பொழுது சொல்லப்படுவதுண்டு. அல்பெருனி என்னும் அரபியர் வெளிப்படையாக அப்படியே எழுதியிருக்கிறார். மெக் கன்ஸி பிற்காலத்தில் தமிழ் நாட்டிலும் தெலுங்கு தேசத்திலும் கர்ண பரம்பரையாக வழங்கும் செய்திகளைத் தொகுத்து எழுதுவித்தவர். அவர் தொகுத்த கையெழுத்துப் பிரதிகள் இன்று சென்னைச் சருவகலாசாலையினரின் ஆராய்ச்சிக்கு உட்பட்டிருக்கின்றன. அந்த மெக்கன்ஸி துரையும் இந்நாட்டினருக்குச் சரித்திர உணர்ச்சி இல்லை என்று சொல்லியிருக்கிறார்.

இந்தக் குறைபாடு ஓரளவு உண்மையானதே; பிற்காலத்தில், நம் நாட்டின் பழைய மரபுகள் சீர்குலைந்து, கலை, இலக்கியம் முதலிய செல்வங்களையே இழக்கும் நிலைவந்த காலத்தில், நாம் எல்லா உணர்ச்சிகளையும் இழந்து விட்டோம். சரித்திர உணர்ச்சி ஒன்றுதானா? தமிழர் தங்கள் பண்டை இலக்கியங்கள் பலவற்றை இழந்தனர். இசை நாடகக் கலைகளை இழந்தனர். தங்கள் வாழ்க்கையினையே இழந்துவிட்டார்கள். ஆதலால் மெக் கன்ஸி சொல்வதில் உண்மை இருக்கிறதென்று சொல்லலாம்.

ஆனால், எந்தக் காலத்திலுமே இந்தியர் அப்படி இருந்ததில்லை; தமிழர்களோ கலைகளையும் இலக்கியத்தையும் வாழ்க்கையின் உயிர்நாடியாகக் கருதி

ஓம்பி வந்தனர். வாழ்க்கையையும் கற்பனையையும் பிணைத்து உடம்பையும் உள்ளத்தையும் உயிரையும் வளர்த்து வந்தனர். வாழ்க்கையின் உண்மைகளையெல்லாம் பகுத்துப் பகுத்துப் புறப் பொருளாக வைத்துப் போற்றினர். இல்லது இனியது என்று சொல்லப்படும் நிகழ்ச்சிகளை அகப் பொருளென வைத்து ஆயிரமாயிரமாகக் கவி பாடிக் குவித்தனர். அவர்களுடைய புறப் பொருளுக்கு உடலாக அமைந்த செய்திகள் யாவும் உலகியல் நிகழ்ச்சிகளே; அவைகளே சரித்திரம்.

தமிழில் இப்போது கிடைக்கும் பழைய நூல்களுக்குள் கடைச் சங்க நூல்களாகக் கருதப்பெறும் பத்துப் பாட்டு எட்டுத் தொகை என்பவற்றுள் புறப்பொருள் பற்றிய பனுவல்கள் யாவும் பண்டைத் தமிழ்நாட்டுச் சரித்திரத்துக்கு அடிப்படையான மூலப்பொருள்களாம். அவற்றைப் பாடினவர்களுக்கும், அப் பாடல்களைப் போற்றிப் பாதுகாத்தவர்களுக்கும் சரித்திர உணர்ச்சி இல்லையென்று சொல்லுதல் முறையாகுமா? ஊர்பேர் இல்லாமல் புறப் பொருளமைதியுடைய பாடல்களாகப் பாடிச் சென்றிருந்தால் அந்நல்லிசைச் சான்றோர்களுக்கு ஒரு குறைவும் வந்திராது. ஆனால் அவர்கள் அங்ஙனம் செய்திலர். புறத்துறைப் பாடல்களிற் பெரும்பாலானவை, உண்மை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு எழுந்தனவென்றே சொல்லலாம். பண்டைத் தமிழர் சரித்திர மென்னும் கோயிலுக்கு அவற்றில் ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு செங்கல் போன்றதாம். அகத்துறை யமைந்த பாடல்களிலும் சார்த்துவகையால் சங்கத்துச் சான்றோர்கள் பதித்து வைத்த சரித்திரச் செய்திகள் பல உண்டு. பரணரென்னும் நல்லிசைப் புலவர் தாம் பாடும் பாடல்களிலெல்லாம் சரித்திரத் துணுக்குகளைப் பொருத்தியமைக்கும் இயல்புடையவர். அகநானூறு முதலிய நூல்களில் அவர் செய்யுட்களைப் பார்த்தால் இவ்வுண்மை வெளியாகும்.

புறப் பொருள்மைதியையுடைய சங்கப் பாடல்களுள், பத்துப் பாட்டிலுள்ள பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, நெடுநல் வாடை, பட்டினப் பாலை, மலைபடுகடாம் என்பன சரித்திரச் செய்திகள் பலவற்றை நமக்கு அறிவிக்கின்றன. எட்டுத் தொகையுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்து, தனியே சேர அரசர்களைப் பாடிய பாடல்களையுடையது; ஆதலால் சேரர் சரித்திரத்திற்குச் சிறந்த கருவியாக இருக்கிறது. புறநானூறு, தமிழ் நாட்டுச் சரித்திரத்தை அறிவதற்கு இன்றியமையாத தாய்ப் பெரிய சரித்திரக் கருவூலமாய் விளங்குகிறது. இதனைத் தேடிக் கண்டுபிடித்துத் தமிழுலகுக்கு அளித்த என்னுடைய ஆசிரியப் பெருந்தகையாகிய மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள், "பண்டைக் காலத்தே இத்தமிழ் நாட்டிலிருந்த சேரசோழ பாண்டியர்களாகிய முடியுடை வேந்தர், சிற்றரசர், அமைச்சர், சேனைத்தலைவர், வீரர் முதலிய பலருடைய சரித்திரங்களும், கடையெழு வள்ளல்களின் சரித்திரங்களும், கடைச் சங்கப் புலவர் பலருடைய வரலாறுகளும், அக்காலத்தாருடைய நடை முதலியனவும், இன்னும் பற்பலவும் இந்நூலால் நன்கு புலப்படும்" என்று எழுதியிருக்கிறார்கள்.

புறநானூற்றின் காலம்

புறநானூறு கடைச் சங்க காலத்துத் தொகுக்கப் பெற்ற நூல். ஆயினும் இதன்கண் உள்ள பாடல்கள் அனைத்தும் ஒரே காலத்தில் பாடப்பெற்றன அல்ல; பல நூற்றாண்டுகளாகப் பாடப் பெற்றவற்றின் தொகுதி யென்று சொல்ல வேண்டும். சேர சோழ பாண்டிய மன்னர்கள் பலரைப்பற்றிய பாடல்கள் இருக்கின்றன;

கி. பி. இரண்டாவது நூற்றாண்டில் வாழ்ந்த ஆரியப் படை கடந்த நெடுஞ் செழியன் என்னும் அரசனே சிலப்பதிகாரத்தில் வரும் நெடுஞ் செழியனென்று தெரிகின்றது. கடைச்சங்கத்தின் இறுதிக்காலம் அது. அவனுக்கு முன்னரே இருந்த கரிகாலன் முதலியோருடைய காலத்தில் எழுந்த பாடல்களையும் இந்நூலிற் காணலாம்.

இறையனாரகப் பொருளுரையினால், தலைச் சங்கத்துப் புலவர்களில் முரஞ்சியூர் முடிநாகராயரென்பவரும் ஒருவர் என்று தெரிய வருகிறது. தலைச் சங்க காலம் இன்னதென்று வரையறுக்க இயலாவிடினும், மிகப் பழங்காலத்துப் புலவர்களைச் சேர்ந்தவர் அவர் என்று தெரிந்து கொள்ளும் அளவில் நாம் அச்செய்தியைப் பயன்படுத்திக் கொள்ளலாம். புறநானூற்றில் கடவுள் வணக்கத்துக்கு அடுத்தபடி உள்ள முதல்பாட்டு அவருடையதேயாகும். அதில் சேரமான் பெருஞ் சோற்று உதியஞ் சேரலாதனை முடிநாகராயர் பாடியிருக்கிறார். உதியஞ் சேரலாதன் என்ற அச்சேர அரசன் பாரதப் போரில் வீரர்களுக்குச் சோறு அளித்தான் என்று புலவர் பாடுகிறார். பெருஞ்சோறு என்றால் பலருக்கு ஒரே சமயத்தில் இடும் அன்னதானத்துக்குப் பெயர்.

அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்! (2)

என்று வருகிறது பாட்டு. இவ்வாறு பெருஞ்சோறு அளித்த சிறப்பால் அந்தச் சேரனுக்கு, பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனென்னும் பெயர் வழங்கலாயிற்று. பாண்டவர் படைக்கும் கௌரவர் படைக்கும் ஒருங்கே அவன் சோறு அளித்தானாம். வடநாடு முழுவதும்

போர்க்களரியாகி, அந்நாட்டு மக்கள் போரில் ஈடுபட்டு நின்ற பொழுது இந்நாட்டிலிருந்து அரிசி சென்ற தென்றும், அங்ஙனம் அரிசியைச் சேகரித்து அனுப்பி யவன் சேரனென்றும் கொள்வதில் பிழையொன்றும் இல்லை.

366-ஆம் புறப்பாட்டு, 'தருமபுத்திரனைக் கோதம ஞர் பாடியது' என்ற குறிப்புடன் இருக்கிறது. "அற வோன் மகனே" என்று புலவர் பாட்டுடைத் தலைவனை விளிக்கிறார். இதனுள் கூறப்பெற்ற தருமபுத்திரன் பஞ்சபாண்டவர்களுள் மூத்தவனாகிய தருமபுத்திரனோ, அன்றிப் பாரத காலத்துக்குப் பிறகு அறவோன் மகனா கிய அவனுடைய இயல்புகளில் ஈடுபட்டு அவன் பெயரை வைத்துக்கொண்ட தமிழ் நாட்டரசனோ தெரிய வில்லை. அவ்வரசன் பாரத காலத்தை அடுத்து இருந்த வன் என்று கொள்வதற்கு இடமுண்டு.

தலைச்சங்கப் புலவர்களுள் வான்மீகனார் என்பவர் ஒருவர். புறநானூற்றில் 358-ஆம் பாட்டை இயற்றியவர் வான்மீகியார் என்பவர். 'உலகத்தையும் தவத்தையும் தனித்தனியே இரண்டு தட்டில் வைத்து நிறுத்தால் தவத்திற் கடுகளவுக்குக்கூடச் சமானமாக உலகம் நில்லாது' என்று தவத்தைப் பாராட்டுகிறார் அவர்.

வையமுந் தவமுந் தூக்கிற் றவத்துக்
கையவி யனைத்தும் ஆற்றாது.

தவம்புரிந்து இராமாயணமாகிய ஆதிகாவியத்தை வடமொழியில் இயற்றிய வான்மீகி முனிவரை நாம் அறி வோம். அம்முனிவர் பெயரும், தவத்தைப் பாராட்டும் இயல்பும் உடைய இப்புலவர் முரஞ்சியூர் முடிநாகராய ரைப் போலப் பழந் தமிழ்ப் புலவர் வரிசையில் சேர்ந்தவ ரென்றே தோன்றுகிறது.

மார்க்கண்டேயரைப் பற்றிய வரலாறுகள் தமிழ் நாட்டிலே தான் அதிகமாக வழங்குகின்றன. தமிழ் நாட்டுத் திருக்கடவூரில் மார்க்கண்டேயர் காலனை வென்ற கதை புராணமாக வழங்கி வருகிறது. புராண வரலாறு முழுவதையும் நம்பாவிடினும், அப்பெரியார் தமிழ் நாட்டினர் என்று கருதுவதற்கு ஒரு சிறு ஆதாரம் புறநானூற்றில் இருக்கிறது. தமிழ் நூல்களில் மார்க்கண்டேயனுரென்ற புலவரைப் பற்றிய சில குறிப்புக்கள் கிடைக்கின்றன. அவர் இயற்றிய நூல் 'தலையாயவோத்து,' படிக்க வேண்டிய நூல்களில் முதல் வரிசையில் உள்ளது, என்று நச்சினார்க்கினியர் சொல்கிறார். 'மார்க்கண்டேயனார் காஞ்சி' என்ற ஒரு நூற் பெயரும் ஒரு பாடலும் யாப்பருங்கல விருத்தியில் மேற்கோளாக வந்திருக்கிறது. புறநானூற்றில் மார்க்கண்டேயனார் என்னும் புலவர் பாடியதாக உள்ள ஒரே ஒரு பாட்டும் (365) பெருங் காஞ்சியென்னும் துறையைச் சார்ந்தது. மக்கள் அறம் பொருள் இன்பம் வீடென்னும் நான்கு உறுதிப் பொருளையும் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும், அவற்றைத் தெரிவதற்குரிய நூல்களை ஆராய வேண்டு மென்பது நம்மனோர் கொள்கை. அந்நான்கு பொருள்களுள்ளும் வீட்டு நெறி பற்றிய நூல்கள் சிறந்தன. ஆதலின் தலையாய ஓத்தென்று நச்சினார்க் கினியரால் பாராட்டப் பெறும் மார்க்கண்டேயனார் நூல் உலக நிலையாமையை அறிவுறுத்தி வீட்டு நெறியைக் கூறுவதாக இருத்தல் கூடும். காஞ்சி யென்னும் புறத்திணை உலக நிலையாமையைக் கூறும் செய்திகளை உடையது. நச்சினார்க்கினியர் கூறும் தலையாயவோத்து, மார்க்கண்டேயனார் காஞ்சி, புறநானூற்றிலுள்ள பெருங் காஞ்சி என்னும் மூன்றும் ஓரினப் பாடல்களே யாதலால் இம் மூன்றன் ஆசிரியரும் ஒருவரே என்று கொள்ளலாம். தவம் புரிந்த சிவபக்தராகப் புராணத்தில்

கூறப்பெறும் மார்க்கண்டேயரும், நிலையாமையை அறி வுறுத்தி வீட்டு நெறி காட்டும் மார்க்கண்டேயரும் ஒருவரேயோ என்ற ஐயத்தை ஆராய்ச்சியாளருக்கு விட்டு விடுகிறேன்.

பழஞ் செய்திகள்

புறநானூற்றில் நேரே ஒரு நிகழ்ச்சியை அது நிகழ்ந்த காலத்திலேயே பாடிய பாடல்களே பெரும்பாலும் உள்ளன. அப்பாடல்களினிடையே முன் நிகழ்ந்த சில பழஞ் செய்திகள் சார்த்துவகையாற் சொல்லப் பெறுகின்றன. அவை தமிழ் நாட்டுப் பழஞ் சரித காலத்தைச் சார்ந்தவை.

தமிழ் நாட்டின் தென்பகுதியில் குமரியாறு, பஃறுளியாறு என்னும் ஆறுகளும் குமரியென்னும் மலையும் ஒரு காலத்தில் இருந்தன. தலைச் சங்கமும் இடைச் சங்கமும் இருந்த காலத்தில் அப்பகுதி இருந்தது என்பர். பிற்காலத்தில் அத்தென் பகுதி கடலாற் கொள்ளப்பட்டது.

அந்தப் பழங் காலத்தில் கடல் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் என்ற அரசன் ஒருவன் இருந்தான். அவன் பெருமையை மதுரைக் காஞ்சியும், சிலப்பதிகாரமும் கூறுகின்றன. பாண்டியன் பல் யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்த வந்த நெட்டிமையாரென்னும் புலவர், "நீ உன்னுடைய முன்னோனாகிய நெடியோனுக்குரிய பஃறுளி யாற்று மணலைக் காட்டிலும் பலகாலம் வாழ்வாயாக" என்று வாழ்த்துகிறார்.

... ...தங்கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே. (9)

சோழர்களுள் தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் ஒருவனைப்பற்றிய பழஞ் செய்தி ஒன்று வருகிறது. ஆகாயத்தில் தொங்கிய மதிலோடு கூடிய நகரத்தை எறிந்து வெற்றி கொண்டான் அச் சோழன் என்று தெரிகிறது. பிற்காலத்தில் அவுணருக்குரிய மதிலை அழித்தானென்று இச்செயலை மிகையாக்கக் கூறின புலவரும் உண்டு. அக்காலத்தில் ஏதோ உபாயத்தால், வளைந்த மலையைச் சார ஒரு மதிலைத் தொங்கச் செய்து, அதன் கண்ணே பிறர் புகற்கரிய நிலையில் இருந்த பகைவரை, வேறோருபாயத்தால் மதிலையழித்து வென்ற வீரச்செயல் நாளடைவில் இப்படி மாறியிருத்தல் கூடும்.

சிபிச்சக்கரவர்த்தியைப் பல இடங்களில் சோழர்களின் முன்னோன் என்று புறநானூற்றுப் பாடல்கள் சொல்கின்றன. கடலில் சென்ற நாவாயை அலைத்த காற்றை அடக்கிய சோழன் ஒருவனை 'வளிதொழிலாண்ட வுரவோன்' என்று வெண்ணிக்குயத்தியார் குறிக்கின்றார்.

சேரமானுடைய உறவினனும் ஏழு வள்ளல்களில் ஒருவனுமாகிய அதிகமான் நெடுமானஞ்சியைப் பாடும் ஒரு புலவர், அவனுடைய முன்னோர் இந் நாட்டிற்குக் கரும்பைக் கொணர்ந்தனரென்று சொல்லுகின்றார்.

இவற்றையன்றி, மௌரிய மன்னர் இந்நாட்டுக்கு வரும்போது மலைகளைப் பிளந்து வழி செய்தனரென்ற பழஞ் செய்தியை,

> விண்பொரு நெடுங்குடைக் கொடித்தேர் மோரியர்
> திண்கதிர்த் திகிரி திரிதரக் குறைத்த
> உலக விடைகழி யறைவாய் (175)

என்று ஒரு புலவர் பாடுகின்றார்.

இருங்கோவேள் என்னும் சிற்றரசன் ஒருவனைப் பற்றிச் சொல்லும் கபிலர் அவனைப் 'புலிகடிமாஅல்' என்று விளிக்கின்றார். ஹொய்ஸளரென்னும் வமிசத்தைச்சேர்ந்தவன் அவன். தபங்கரென்னும் முனிவர் ஒரு காட்டில் தவம் செய்கையில் ஒரு புலி அவர் மேற்பாய்தற்கு நெருங்க, அதுகண்ட அம்முனிவர் அங்கு வேட்டையாடி வந்த சளனென்னும் யாதவ அரசனை நோக்கி 'ஹொய்ஸள' என்று கூறினாராம். அவன் அப்புலியைத் தன் அம்பால் எய்து கடிந்தமையால் ஹொய்ஸளனென்றும், அவன் வழி வந்தோர் ஹொய்ஸளனென்றும், அவன் வழி வந்தோர் ஹொய்ஸளரென்றும் வழங்கப் பட்டார்.

பாடப் பட்டோர்

புறநானூற்றில் பாடப் பட்டவர்களிற் பெரும்பாலோர் சேர சோழ பாண்டியர்களே; பாரி, காரி, ஆய் முதலிய சிற்றரசர்களும், சில படைத் தலைவர்களும், சில வேளாளர்களும், அந்தணர் சிலரும் புலவராற் புகழப் பெறுகின்றனர். இரண்டாவது பாட்டு முதல் பதினாரும் பாட்டு வரையில் சேரர், பாண்டியர், சோழர் என்ற முறையில் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

அதன்பின் இம்மூவரும் ஒரு முறையின்றிப் பாடப் பெறுகின்றனர். சோழர்களும் பாண்டியர்களுமே பல பாடல்களாற் புகழப்படுகின்றனர். முதல் 85 பாடல்கள் முடி மன்னர்களாகிய இம் மூவரின் புகழைச் சொல்வன. அதன்பின் அதிகமான், பாரி, காரி, ஆய், பேகன், ஓரி முதலிய வள்ளல்களும் நாஞ்சில் வள்ளுவன், பிட்டங்கொற்றன் முதலிய வீரர்களும், பல வேளாளர்களும் புகழப் பெறுகின்றனர். 182 முதல் 185 பாடல்கள் வரை சில மன்னர்கள் தாமே இயற்றிய பாடல்கள் உள்ளன.

186 முதல் 195 வரையில் பொதுவகையில் அமைந்த தனிப் பாடல்களும், 196 முதல் 211 வரையில் பரிசில் துறைபற்றிய பாடல்களும், 212 முதல் 223 வரையில் கோப்பெருஞ் சோழன் வடக்கிருந்த செயலைப்பற்றிய பாடல்களும் அமைந்திருக்கின்றன. 217 முதல் 256 முடிய கையறு நிலையும் பிறவுமாகிய அவலச் சுவையமைந்த துறைப் பாடல்களையும், 257 முதல் ஒரு வரையறை யின்றிப் பல புறத் துறையமைந்த செய்யுட்களையும் காணலாம். இடையிடையே பாண்பாட்டு, பாடாண்டிணை, காஞ்சித்திணை பற்றிய பாடல்கள் பல ஒருசேரக் காணப் படும். பொதுவாகப் புறநானூற்றுப் பாடல்களின் தொகுப்புக்கு உரிய முறை இன்னதுதான் என்று வரை யறுத்துச் சொல்லவியலவில்லை; ஆகவே அந்த முறை பற்றிச் சரித்திரத்தை உணர்ந்து கொள்ளல் இயலாது.

அரசியல் அரசன்

தமிழர் அரசியலில் நடுவண் இருந்து திகழ்பவன் அரசன்தான். அரசன் இல்லாத நாட்டை அவர்கள் கற் பனை செய்து பார்த்தும் இருக்கமாட்டார்கள். நாட்டை உடலாகவும் அரசனை அதன் உயிராகவும் எண்ணி அவ னுக்குச் சிறப்புச் செய்தார்கள்.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே

என்று மோசிகீரனார் பாடுகிறார். அரசன் அறிவு, அன்பு, ஆற்றல் என்பன உடையவனாயிருத்தல் வேண்டும். அறி வினால் நாடு காவலுக்குரியன ஓர்ந்து முறைதவறாது காப்பாற்றுதலும், அன்பினால் குடிமக்கள் நலன் கருதி ஆவன செய்தலும் இரவலருக்கு ஈதலும், ஆற்றலினால்

பகையரசரால் வரும் ஏதத்தைத் தடுத்தலும் போரில் வெற்றி பெறுதலும் அவன்பால் அமைகின்றன.

கிள்ளி வளவனை மாறோக்கத்து நப்பசலையார் என்னும் பெண்புலவர் பாடுகிறார்.

"கிள்ளிவளவனே, அரசர்களுக்கு வேண்டிய ஈகை, அடுதல், நீதி செலுத்துதல் என்பவை நின் பரம்பரைக்கே சிறப்பாக உரியவை; வழிவழி வந்த பிதுரார்ஜித சொத்து. ஆகவே நீயாகச் சம்பாதித்தது ஒன்றும் இல்லை" என்று சொல்லுகிறார். அவனைப் புகழாமல் புகழும் முறை பாராட்டுதற்குரியது.

புறவின் அல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக
ஈதல்நின் புகழும் அன்றே! (39)

'சிபிச்சக்கரவர்த்தி தன் உடம்பையே அறுத்துக் கொடுத்தான்; கடைசியில் தானே தராசுத் தட்டில் ஏறி உட்கார்ந்து கொண்டான். உடலைக் காட்டிலும் கொடுக்கக்கூடிய சிறந்த பொருள் வேறு என்ன இருக்கிறது? நீ கொடுக்கிறாய் என்றால் அது சிபியிலிருந்து வழி வழி வந்த பழக்கம்.'

'பகைவரைக் கொன்று வெற்றி பெறுவது உனக்குச் சொந்தமா? அதுவும் இல்லை.'

சார்தல்
ஒன்னா ருட்குந் துன்னருங் கடுந்திறல்
தூங்கெயில் எறிந்தநின் ஊங்கணோர் நினைப்பின்
அடுதல்நின் புகழு மன்றே!

'உன்னுடைய முன்னோர்கள் வீரம் சாமான்யமானதா? ஆகாசத்தில் தொங்கிக் கொண்டிருந்த மதிலை

அழித்து வென்றுர்கள் ; வீரம் உங்கள் பரம்பரையின ருடன் பிறந்தது. ஆகையால் அதையும் உனக்குப் புகழாகச் சொல்லக்கூடாது.'

'முறைமை? அதுதான் நியாயம் வழங்குதல்.'

கெடுவின்று
மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம்நின்று நிலையிற் ருகலின், அதனுல்
முறைமைநின் புகழும் அன்றே!

'கெடுதலின்றி வீரம்பொருந்திய சோழர்களுக்குரிய உறை யூரில் அறங்கூறவையத்தில் தர்மம் எப்போதும் நின்று நிலவுகிறது. அப்படியிருக்க நீ இன்று புதிதாக முறைமை செய்கிருய் என்று சொல்லலாமா? அதுவும் உனக்குரிய சிறப்பன்று.'

கண்ணுர் கண்ணிக் கலிமான் வளவ!
யாங்கனம் மொழிகோ யானே?

'கிள்ளிவளவனே; உன்புகழை எவ்வாறு நான் வரை யறுத்துத் தனியே எடுத்துச் சொல்ல முடியும்?'

இப்படிக் கேட்கிருர் அந்த அறிவுடை நங்கையாகிய நப்பசலையார். ஈகையும், வீரமும், நீதி வழங்கும் அறிவும் மன்னனுக்குரிய சிறப்புக்களுள் தலைமையானவை என்ற செய்தியை அப்பெண் புலவர் இதன் வாயிலாகத் தெளி வித்திருக்கிருர்.

அரசனுடைய இலக்கணங்களுள் அவனுடைய உயர் குணங்கள் முக்கியமானவையே. அவற்ருேடு நாடு, நகர், ஆறு, மலை முதலிய இயற்கை உறுப்புக்களும், தார், கொடி, முரசு முதலியவையும், மந்திரி, மறவர் முதலிய சுற்றத்தினரும் சேர்ந்தால்தான் அரசு உண்டாகும். அரசன் உயிரானல் நாடு உடல்; ஏனையவை அவ்வுடலின் உறுப்புக்கள்.

நாடு

தமிழருடைய பூகோள அறிவு புறநானூற்றால் ஓரளவு தெரிகிறது. அந்தர் மத்திய பாதலமென்ற புராணப் பகுப்பை "முப்புணரடுக்கிய முறை" என்று குறிப்பிடுவர் பண்டைத் தமிழர். இந்த மூன்று உலகங்களில் இவ்வுலகம், "முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப், பரந்துபட்ட வியன் ஞாலம்" என்பதை உணர்வர். பாரத நாட்டின் எல்லையும் அவர்களுக்குத் தெரியும்.

"தென் குமரி வடபெருங்கல், குணகுட கடலா வெல்லை"யாகிய நாட்டை ஒருவன் ஆள்வதுதான் அவர்களுடைய ஆசைக்கு எல்லை. இந்த் எல்லைக்குளடங்கிய நாட்டை நாவலந்தீவென்று வழங்குவரெனப் பிற நூலால் தெரியவருகின்றது. தென்குமரி என்பதால் இப்போதுள்ள குமரிமுனையையன்றிச் சில பழைய பாடல்களில் குமரியாற்றையும் குறிப்பதுண்டு. வடபெருங் கல்லை, "பனிபடு நெடுவரை" என்று சொல்வதனால் இமாசலத்தைத்தான் குறிக்கின்றனரென்பதில் சந்தேகம் வேண்டாம். அது மாத்திரம் அன்று, இன்று கிஞ்சின்ஜிங்கா என்று நாம் ஆங்கிலப் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொள்ளும் மலைப் பெயரின் மூல உருவமாகிய காஞ்சன சிருங்கம் என்னும் ஒரு பகுதி, அவ்விமயமலையில் உண்டென்பதையும் தமிழர் தெரிந்து கொண்டிருக்கின்றனர். இல்லாவிட்டால், "பொற்கோட் டிமயம்," "பொன்படு நெடுங் கோட் டிமயம்" என்றெல்லாம் சொல்லவாராதே! இமயச் சாரலில் முனிவர் பலர் வாழ்வார்களாம். அம்முனிவர் அக்கினி காரியம் செய்யும்போது பெண்மான்களெல்லாம் அந்த ஆசிரமங்களில் சிறிதும் அச்சமின்றித் தூங்குமாம். புலி முதலிய விலங்குகள் 'முத்தீவிளக்குக்' குப் பயந்து வாராமற் போகும். இமயச்சாரலில் கவரிமான்கள் அதிகமென்று தமிழர் அறிந்திருக்கிறார்கள். ஒரு

சேரன் இமயமளவுஞ் சென்று தன்னுடைய விற் கொடியை அதன் மேலே பொறித்துவிட்டு வந்தான்.

இன்று நாம் வங்காளக்குடாக் கடலென்று வழங்கு வதாகிய குணகடலைப்பற்றி ஒரு புதுமை புறநானூற்றி லும் வேறு நூல்களிலும் காணப்படுகிறது. அதைத் தொடுகடல் என்று சொல்லியிருக்கிறார்கள்; "கரை பொரு தொடு கடல்" என்பர். அதற்குத் தோண்டிய கடல் என்பது பொருள். உரையாசிரியர், "சகரரால் தோண்டப்பட்ட சாகரம்" என்று எழுதுகிறார். இது புதிதாகத் தோண்டிய கடலாகி விடவே, மேற்கே உள்ள கடலாகிய அரபிக் கடல் "குடா அது தொன்றுமுதிர் பௌவம்" என்று பழம் பெருமையை யடைந்துவிட்டது. இந்த இரண்டு கடல்களையும் இப்படி வேறுபடுத்திச் சொல்வதற்கு ஆதாரமான நிகழ்ச்சி யொன்று மிகப் பழங்காலத்தில் நிகழ்ந்திருக்கக்கூடும். இமயமலையே புதி தாக உண்டானது என்று, முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளை ஆராயும் நிலவியல் நூல்வல் லார் சொல்கிறார்கள். அது வியப்பாகாமல் அறிவொடு பொருந்திய செய்தியானால், இந்தத் தொடுகடற் கதைக் கும் ஒரு தக்க காரணம் இருக்குமென்று கொள்வதும் பொருத்தமேயாகும்.

பாரத தேசத்துக்குள்ளே தமிழ்நாடு இருக்கிறது; இந்த நாட்டைத் தமிழகம் என்ற அருமைப் பெயரால் வழங்குவார்கள்.

"வையக வரைப்பிற் றமிழகம்"
"தண்டமிழ் வரைப்பகம்"

என்ற புறப்பாட்டுப் பகுதிகளில் இப்பெயரைக் காண லாம்.

இத் தமிழகத்தில் தலைமை பெற்ற நாடுகள் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்பன. காட்டு நாடு,

கர்ரி நாடு, கொங்கு நாடு, கோனாடு, நர்ஞ்சில் நர்டு, பறம்பு நாடு, பெண்ணை நாடு, முக்காவனாடு, வேங்கட நாடு என்னும் சிறு நர்டுகளைப் போன்ற பல இத் தமிழகத்தில் இருந்தன. இந்நாட்டுக்குள் கூற்றம் என் னும் சிறு பிரிவுகள் உண்டு.

அரசனுடைய தலைநகரங்களும், கடற்கரையில் வர்ணிகச் சிறப்புற்ற நகரங்களும், அரசர்களுடைய சமாதிகளையுடைய ஊர்களும், போர் நடைபெற்ற இடங் களும், புலவர்களைப் பெற்ற ஊர்களுமாகப் பல ஊர்கள் புறநானூற்றுப் பாடல்களில் விரவிக் கிடக்கின்றன. சோழனுடைய உறையூரும் பாண்டியனுடைய மதுரை யும் சேரனுடைய வஞ்சியும் பெரும் புகழ்பெற்றவை. தக்டூர், அரையம், மாவிலங்கை, முள்ளூர் முதலியன சிற்றரசர்களுக்குரிய நகரங்கள். ஆடுதுறை, ஆலங்குடி, இடைக்குன்றூர், எறிச்சிலூர், பிசிர் என்பன போன் றவை புலவர்களுக்குரிய ஊர்கள். இலவந்திகைப்பள்ளி, குராப்பள்ளி, குளமுற்றம், கோட்டம்பலம் முதலியன அரசர்கள் துஞ்சின இடங்கள். கோவலூர், தலையாலங் கானம், திருப்போர், வெண்ணி முதலிய இடங்கள் போர் நிகழ்ந்த ஊர்கள். காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, முசிறி என்பன கடற்கரைப் பட்டினங்கள்.

கரும்பும் நெல்லும் உடைய சோழ நாடுதான் நில வளம் சிறந்ததென்பதைப் பிற்கர்லக் கவிஞர் பலவாறு வருணித்திருக்கிறார்கள். மழையின்றிக் கோள்நிலை மாறு பட்டாலும் அந்தண் கர்விரி வந்து பல கர்ல்வர்யாக ஓடி ஊட்டும் சோழ நர்டுதர்ன் நர்டு என்று ஒரு பழம் புலவர் புறநானூற்றில் பாடுகிறார். ஆவூர் மூலங்கிழார் என் னும் அப்புலவர் சோழ நர்ட்டின் நிலவளத்தை ரசமாகச் சொல்கிறார். 'யானையைக் கட்டித் தீனிபோடுவது' என்று இப்போது ஒரு பழமொழி வழங்குகிறது, உங்க ளுக்குத் தெரியும். செல்வம் நிரம்பியவர்களே யானையை

வைத்துக் கொள்ளலாம். சோழ நாட்டில் ஒரு பெண் யானை படுத்துக்கொள்ளுமளவுக்குள்ள நிலத்தை வைத்துக்கொண்டு ஏழு ஆண் யானைகளுக்குத் தீனிபோடலாமாம்; அவ்வளவு வளச்செறிவுடைய பூமியாம்.

ஒருபிடி படியுஞ் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ வோயே

என்று பாராட்டுகிறார் புலவர்.

இப்படி நிலவளத்தால் ஒரு நாடு சிறந்திருந்தால் மட்டும் போதாது. அந்நாட்டில் வாழ்வோரும் சிறந்திருத்தல் வேண்டும். அது பள்ளமானாலுஞ் சரி, மேடானாலும் சரி; சான்றோர் எங்கே தங்குகிறார்களோ, அவ்விடந்தான் நல்ல இடம்.

எவ்வழி நல்லர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. (117)

நல்ல அரசன் இருக்கும் நாட்டில் நல்லவர்கள் சேருவார்கள்.

கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கி.

ஆகவே இயற்கை வளனும் செங்கோல் அரசனும் சேர்ந்த நாடுதான் தமிழரின் லட்சிய நாடென்று சொல்லலாம்.

சேரமான் பெருஞ்சோற் றுதியஞ் சேரலாதன் என்னும் அரசன் சோழ பாண்டிய நாடுகளைத் தன் அடிப்படுத்தி ஒரு தனி மன்னனாக ஆண்டிருந்தான் போலும். அவனுடைய நாடு கீழ்கடல் முதல் மேல்கடல் வரையில் பரந்திருந்தது. நமது பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பரப்பைச் சொல்லும்போது, "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியன் அஸ்தமிப்பதில்லை" என்று சதுர்படச் சொல்லுகிறார்களே, அந்த மாதிரி ஒரு புலவர் சேரனது நாட்டுப் பரப்பைச் சொல்கிறார்.

நின்கடற் பிறந்த ஞாயிறு பெயர்த்துநின்
வெண்டலைப் புணரிக் குடகடற் குளிக்கும்
யாணர் வைப்பின் நன்னாட்டுப் பொருந. (2)

நாடு காவல்

செங்கோல் திறம்பாத அரசனைக் குடிகள் புகழ்வர். "குடிபழி தூற்றும் கோல"னாதலை அரசர் விரும்பார். குழந்தையை வளர்ப்பவர்போல அன்பும் அருளும் உடையராகி நாட்டைப் பாதுகாப்பார். இல்லையாயின் நரகம் பெறுவர். செங்கோல் மன்னனுடைய நாட்டில் மழையின்றிப் பஞ்சம் நேர்தல் இல்லை என்று பழந் தமிழர் நம்பினர். நியாயம் வேண்டுமென்று குடிமக்கள் தன்பால் வந்தபொழுது எளிதில் நீதி கிடைக்கும்படி செய்யும் அரசனது நாட்டில் மழை தவறாமற் பெய்யும். மாரி பொய்த்தாலும், விளைவு குறைந்தாலும், இயற்கையில் நிகழாத உற்பாதங்கள் தோன்றினாலும், உலகத்தார் அரசனைப் பழிப்பார்கள். ஆதலின் குடிமக்களைக் காக்கும் திறமை மிக்கவனாக அரசன் இருக்கவேண்டும்.

மக்களுக்கு இயற்கைப் பகையாக இருப்பது பசி; செயற்கைப் பகையாக இருப்பது பிறரால் வரும் துன்பம். பசியைத் தீர்க்க நல்ல உணவு கிடைக்கும்படி செய்யவேண்டும். உணவு கிடைப்பதற்கு நிலத்தை வளம் படுத்த வேண்டும். வானோக்கி விளையும் புலன்களாக இருந்தாலும் ஏரி, குளங்கள் முதலிய நீர் நிலைகளைச் செப்பனிட்டுக் கரையை உயர்த்தி நீரைத் தேக்க வேண்டும். அப்பொழுது விளைவு குன்றாமல் இருக்கும். குடபுலவியனாரென்னும் புலவர் இந்த 'ஆக்க வேலைகளைப்' பற்றி மிக அழகாகப் பாண்டியன் நெடுஞ்செழியனுக்குச் சொல்கிறார்.

நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே

உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரி யோரீண்டு
உடம்பு முயிரும் படைத்திசி னேரே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோ ரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட் டள்ளா தோரே.

படைவலியால் பெரும் வெற்றிக்கும் காரணமாக நிற்பது உணவுதான். ஆதலின் அவ்வுணவை விளைக்குந் திறத்தில் வேண்டியன ஆற்றுதலன்றி, உழுதொழில் புரியும் குடிமக்களையும் பாதுகாத்தல் வேண்டும்; "பகடு புறந்தருநர்பாரம் ஓம்பிக், குடிபுறந் தருகுவையாயின், அடிபுறந் தருகுவ ரடங்கர்தோரே" என்று ஓரரசனுக்கு ஒரு புலவர் அறிவுறுத்துகிறார். அவ்வேளாளரிடம் கொள்ளுந்திறையை நெறியறிந்து கொள்ள வேண்டுவது அரசன் கடமை. அப்படியன்றிப் பேராசையினால் அளவுக்கு மிஞ்சிய வருவாயை அவர்களிடமிருந்து தண்டத் தொடங்கினால் அரசனுக்கும் குடிகளுக்கும் ஒருங்கே கேடு வரும்.

பாண்டியன் அறிவுடை நம்பி என்னும் அரசனிடம் சில துர்மந்திரிகள் இருந்தார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு அரசன் அதிக வரியை வாங்கலா மென்று யோசித்தான். பிசிராந்தையாரென்ற புலவர் இதை அறிந்தார். பாண்டியனிடம் போய் வேடிக்கை யாக ஒரு கதை சொல்பவரைப்போல ஆரம்பித்தார். "ஒரு யானை வயலில் முற்றி விளைந்த நெல்லை அதற்குக் கவளமாகக் கொடுத்தால், ஒருமா நிலத்துக்குக் குறை வாக இருந்தால்கூட, அந்த யானைக்குப் பல நாள் உணவுக்கு ஆகும். யானையை அதன் போக்கிலே அவிழ்த்து விட்டுவிட்டால் என்ன ஆகும்? நூறு செய்யாகத்தான்

இருக்கட்டுமே; அதன் வாய்க்குள்ளே போவதைக் காட்டிலும் அதன் காலாலே மிதிபட்டு வீணுகப் போவதுதான் அதிகமாக இருக்கும்." இந்த உபமானத்தைச் சொல்லிவிட்டு மெல்ல விஷயத்துக்கு வருகிறுர் புலவர்.

"அறிவுடை வேந்தன் முறைப்படி குடிமக்களிடம் வரியை வாங்கிஞல் நாடு ஆனுது கோடிப் பொருளைக் கொடுத்து மேலும் மேலும் தழைக்கும். அறிவில்லாதவன் ஆளப் புகுந்து, அவனுடன் தலையாட்டும் மந்திரிகளும் சேர்ந்து கொள்ளவே, அன்பின்றி மிகுந்த பணத்தை விரும்புவாஞனல் யானை புகுந்த வயலைப் போலத் தானும் உண்ணுன்; உலகமும் கெட்டுப் போகும்" (*184*) என்று தைரியமாகச் சொல்லிவிட்டார். கேட்டவன் பெயரளவில் அறிவுடை நம்பியாக இல்லாமல் செயலிலும் அப்படி ஆக வேண்டுமென்றுதான் அவர் எடுத்துரைத்தார். இதே விஷயத்தை ஓர் அரசனே வேறு விதமாகச் சொல்கிறுன். சோழன் நலங்கிள்ளி யென்பது அவ்வரசன் பெயர்.

ஒருவர் பின் ஒருவராகப் பெரியவர்களை யமதர்மராஜன் கொண்டு போய் விட்டான். ஏதோ நல்ல வினைப்பயன் இவனிடம் அரசுரிமையையும் அரசச் செல்வத்தையும் கொண்டுவந்து தள்ளியிருக்கிறது. இது தனக்குக் கிடைத்துவிடவே 'நமக்குப் பெரிய அதிகாரம் கிடைத்துவிட்டது' என்றெண்ணிக் குடிகளிடம் வரியை வேண்டி இரக்கின்றுனே, அந்த அரசன் சின்னத்தனம் உடையவன்' என்று அவன் சொல்கிறுன். புறநானூற்றுப் பாஷையில் 'கூரில் ஆண்மைச் சிறியோன்' என்று இருக்கிறது. 'மிகுதியில்லாத ஆண்மையையுடைய உள்ளஞ் சிறியோன்' என்று உரையாசிரியர் உரை எழுதுகிறுர்.

வேந்தன் தன்னலங் கருதாமல் குடிமக்களின் நலத்தைக் காக்க வேண்டியவன். "நீ வைத்திருக்கிற குடை உன்னுடைய உடம்பின்மேல் வெயில்படாமல் காப்பாற்றுதற்காக இருப்பதன்று. குடிமக்களுக்கெல்லாம் நிழலாகிப் பாதுகாப்பது" என்று குடையின் கருத்தை ஒரு புலவர் தெரிவிக்கிறார்.

பகைவர்களால் நாட்டிற்கு எவ்வகைத் துன்பமும் நேராமல் அரசன் பாதுகாப்பான். அவனுடைய அன்பும் ஆற்றலும் குடிமக்களுக்கு இன்பத்தை உண்டாக்கித் துன்பத்தைப் போக்கும். சோறுண்டாக்கும் தீயையன்றி அவன் நாட்டினர் பகைவர் வைக்குந் தீயை அறியார். சூரியனது வெம்மையையன்றி வேறு வெம்மையை அவர்கள் அறியார். வானவில்லையன்றி வேறு வில்லை அறியார். உழவுக்குரிய கலப்பையையன்றி வேறு படையை அவர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பில்லை. புலி தன் குட்டிகளைக் காப்பது போல அரசன் குடிகளைப் பாதுகாப்பான்.

முறை வழங்குதல்

அரசன் நீதி வழங்குவதில் நடுநிலை பிறழாமல் இருக்க வேண்டியவன். அரசின் பெருமையெல்லாம் அறநெறியை அடிப்படையாகக் கொண்டது. பிறர் கூறுவதைக் கேட்டு ஆராயாமல் முடிவு செய்தல் தவறு. "பிறர் பழி கூறுவோர் மொழியை" உண்மையென்று தெளிதல் கூடாது. தான் உண்மையாக ஒரு தீமையைக் கண்டால் அக்குற்றத்துக்கேற்ற தண்டனையை அளித்தலே முறை. நமரெனக் கோல்கோடாது, பிறரெனக் குணங்கொல்லாது நீதி வழங்க வேண்டும். இதன் பொருட்டுத் தமிழ் மன்னர்கள் அறங்கூறவையம் ஒன்றை நிறுவிக் குணநலஞ் சான்றோர்களை அவ்வவையத்தில் நாட்டி முறை வேண்டினர்க்கு முறை வழங்

கச் செய்தனர். உறையூரில் இருந்த அறங்கூறவையம் மிகப் புகழ்பெற்றது. அந்த அவையத்தில் தமக்கொரு குறையுடையா ரெல்லாம் வந்து முறையிடுவார்கள். சான்ருேர் அதனைக் கேட்டுத் தீர்ப்பர்.

சான்ருே ரிருந்த அவையத் துற்ருேர்
ஆசா கென்னும் பூசல் போல
வல்லே களைமதி (266)

என்று ஒரு புலவர் வழக்குடையோனது முறையீட்டை உவமையாகச் சொல்கிருர்.

பூதப் பாண்டியன் தன் பகைவரைத் தோல்வியுறச் செய்வதாகச் சொல்லும் வஞ்சினம் ஒன்றில்,

அறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக (71)

என்று கூறிக்கொள்கிருன். இதனுல் அறங்கூறவையத்தில் தக்க சான்ருேர் இருத்தலின் அவசியம் புலப்படும்.

புலவர்

பண்டைத் தமிழ் மன்னர் புகழெனின் உயிருங் கொடுக்கும் இயல்பினர். அப்புகழ் வீரத்தாலும் ஈகையாலும் கிடைக்கும். வீரத்தாற் கிடைக்கும் புகழிலும் ஈகையாற் பெறும் புகழே சிறந்ததென்று கருதினர். ஈகையைப்பெறும் இரவலர்கள் பலவகையினர். அந்தணர், புலவர், பாணர், விறலியர், கூத்தர் என்பவர்களையே பரிசிலரென்றும் இரவலரென்றும் வழங்குகின்றனர். வயிற்றுக்கில்லாமல் சோம்பிக் கிடக்கும் வறியவர்களாகிய பிச்சைக்காரர்களோ, நோயாளிகளோ இரவலரென்னும் பிரிவில் வருவதில்லை. நல்வளமுள்ள நாட்டில் பசியும் நோயும் பகையும் இன்மையின், அத்தகைய இரவலர் இல்லை போலும். புலவர் முதலியோர் தாம்

பெற்ற பொருள்களை உடனுக்குடன் பிறருக்கு அளித்து விடுதலின் மீட்டும் மீட்டும் உபகாரிகளை நோக்கிச் சென்று பாடியும், இசை பயின்றும் பொருள் பெற்றனர். ஆயினும் அவர்கள் பொருள் பெற்ற வரலாறுகளை ஆராய்ந்தால் அது யாசகமாகத் தோற்றாது. 'அரசராகிய உங்களைப் போன்ற தலைமையும் உடையது எங்கள் வாழ்க்கை' என்று கோவூர் கிழார் பாடுகிறார்.

தம்முடைய கலைத்திறத்தை உணர்ந்து பாராட்டும் உபகாரிகளிடத்திலேதான் அவர்கள் சென்றார்கள். வரிசையறிந்து நல்கும் திறமை யார்பால் உண்டோ அவர்களே புலவர்களுடைய புகழுக்கு உரியவர்கள். "வரிசைக்கு வருந்துமிப் பரிசில் வாழ்க்கை" என்று ஒரு புலவர் சொல்கிறார்.

ஒருதிசை ஒருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசை யறிதலோ அரிதே

என்று கபிலர் மலையமான் திருமுடிக்காரிக்குச் சொல்கிறார்.

வரிசையறிந்து அன்பு பாராட்டிக் கொடுப்பது சிறிதாயினும் புலவர் போற்றிக்கொள்வர். பெருஞ்சித்திரனார் என்ற புலவர் அதியமான் நெடுமான் அஞ்சியைப் பார்க்கப் போயிருந்தார். அவன் ஏதோ வேலையாக இருந்தமையினால் ஓர் அதிகாரி மூலமாய்ப் பரிசிலைக் கொடுத்தனுப்பினான். புலவருக்குக் கோபம் வந்துவிட்டது: "இந்த அரசன் நான் இதற்காகத்தான் வந்திருக்கிறேனென்று எப்படி அறிந்தானோ! அவன் என்னை நேரில் பாராமல் அனுப்பிய இந்தப் பரிசிலைக் கண்டு, நமக்கு வேண்டியது இதுதான் என்று வாங்கிக்கொண்டு போவதற்கு நான் ஓர் வாணிகப் பரிசிலன் அல்லேன். வரிசையறிந்து அன்புடன் கொடுப்பதானால் தினையளவு

வானாலும் இனிதாக இருக்கும்" என்று பாடிப் புறப் பட்டுவிட்டார். அவரே குமணனைப் பார்த்து,

உயர்ந்தேந்து மருப்பிற் கொல்களிறு பெறினும்
தவிர்ந்துவிடு பரிசில் கொள்ளலென் உவந்துநீ
இன்புற விடுதி யாயிற் சிறிது
குன்றியுங் கொள்வல்

என்று சொல்கிறார்.

இத்தகைய பெருமிதமுடைய புலவர்களோடு பழகு வதைப் பெரிய இன்பமாகக் கொண்டனர் அரசர். புலவர் பாடும் புகழுடையோர் சுவர்க்க பதவியை அடைவரென் பது அவர்கள் கொள்கை. நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறுகையில், "என்பகைவர்களை நான் புறங்காணு விட்டால்,

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை

என்று சபதம் செய்கிறான். புலவர் பாடாதொழிதலை அவன் எவ்வளவு இழிவாகக் கருதுகிறானென்பதை இந்தச் சொற்கள் தெரிவிக்கும். கழாத்தலையை இகழ்ந்த ஓர் அரசனது ஊராகிய அரையம் கெட்டது. பழியை யுடைய நன்னனென்னும் அரசனையும் அவன் வழி வந்தோரையும் புலவர் பாடாமல் வெறுத்து ஒதுக்கினர்.

புலவருக்கு அஞ்சியொழுகும் ஒழுக்கம் மன்னர்களி டத்தில் இருந்தது. அவர்கள் அறிவுரை மிகவும் கடுமை யாக இருந்தாலும் மன்னர் ஏற்றுக்கொண்டனர். கோவூர் கிழார் என்னும் புலவர் பெருமான் நலங்கிள்ளி நெடுங்கிள்ளி என்னும் இரண்டு தாயத்தினர்க்கிடையே நின்று சமாதானம் செய்தார். கிள்ளிவளவன் மலையமான்

மக்களை யானைக் காலின்கீழ் இடறப்புக்கபோதும், இளந் தத்தனென்னும் புலவனை ஒரு சோழன் பகையரச னுடைய ஒற்றனென்று கருதிக் கொலைத் தண்டனை விதித்த போதும் கோவூர் கிழாரின் அறிவுரையினால் அவர்களின் உயிர்கள் காலன் வாயினின்றும் மீண்டன. அரசன் ஆணையை அடக்கும் ஆற்றல் பெற்றன புலவர் வாய் மொழி.

புலவர்களுக்கு எல்லோரும் இன்புற்று வாழவேண்டு மென்பதே நோக்கம். அதனால் மனம் வேறுபட்டவர்களை எல்லாம் தம்மாலானவரை முயன்று சமாதானம் செய் வித்து ஒன்றுபடுத்துவர். கோப்பெருஞ் சோழனுக்கும் அவன் மக்களுக்கும் இடையே போர்மூண்டபொழுது புல்லாற்றூர் எயிற்றியனாரென்ற புலவர் அச்சோழ னுக்கு நல்லுரை கூறிச் சமாதானம் செய்வித்தனர். எழு வள்ளல்களில் ஒருவனாகிய பேகனென்பவன் தன் மனைவி யாகிய கண்ணகியை அகன்று வாழ்ந்தானாக, கபிலர், அரிசில்கிழார் முதலிய புலவர்கள் அவனிடம் சென்று இரந்து மனைவியையும் கணவனையும் ஒன்றுபடுத்தினர்.

ஒற்றுமை கண்டவிடத்து மனமகிழ்ந்து இன்புற்று மேன்மேலும் அது வலிபெறும்படி செய்வதில் புலவர் கள் கண்ணும் கருத்தும் உடையவர்கள். சோழன் பாண் டியன் என்னும் இருவரும் ஒன்று சேர்வதென்பது மிகவும் அரிய காரியம். ஒருவரை ஒருவர் பகைவராக எண்ணுவதுதான் வழிவழிவந்த சம்பிரதாயம். எப் போதாவது இந்தப் பகை நீங்கி ஒன்றுபட்டுவிடப் போகிறார்களென்றெண்ணிய சில புண்ணியவான்கள் அங்கங்கே பகைக்கொள்ளியையிட்டு மூட்டிவிடுவார்கள். இந்த நிலையில் அவர்கள் ஒன்றுபடுவது எங்கே?

ஒன்றுபட்டார்கள்; இந்த அதிசயத்தை ஒரு புலவர் கண்ணாரக் கண்டார். சோழன் பெருந்திருமாவளவனும்

பாண்டியன் பெருவழுதியும் ஒருங்கிருந்தாரைக் காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் பார்த்தார்; ஆச்சரியத்தால் ஒரு பாட்டைப் பாடிவிட்டார்.

"பலராமனும் கண்ணபிரானும் ஒன்றாகச் சேர்ந்து நிற்பது போல எவ்வளவு அழகாக ஒன்றுபட்டு இருக்கிறீர்கள்! இதைக்காட்டிலும் இனிய காட்சியும் உண்டோ? நும் இசை வாழ்க! என்றும் இப்படியே நீங்கள் இருக்கவேண்டும். ஒருவர் ஒருவருக்கு உதவி செய்யுங்கள். இருவரும் சேர்ந்திருந்தால் இந்த உலகம் உங்கள் கையில் அகப்படுவது நிச்சயம். அன்புடன் இருக்கும் உங்களுக்கிடையே சில பேர் வருவார்கள்; மிகவும் நல்ல வார்த்தைகளைப் போல நயமாகச் சொல்வார்கள்; தொல்லோர் சென்ற நெறியென்று பேசுவார்கள். அந்தப் பேச்சை நம்பாதீர்கள். உங்களிடையிலே அவை பிளவை உண்டுபண்ணி விடும். அவர்களுடைய வார்த்தைகளைக் கொள்ளாதீர்கள். இன்றே போல்க நும் புணர்ச்சி" என்று வாயார வாழ்த்துகிறார்.

இதைவிடப் பெரிய அதிசயத்தைத் தமிழ்ப் பாட்டி ஔவையார் கண்டார். சேர சோழ பாண்டியர் மூவரும் ஒருங்கிருந்த புதுமையைக் கண்டு ஒரு செய்யுளால் வாழ்த்தினார். "நீங்கள் வாழ்க! உங்களைப் பார்த்தால் அந்தணர் வளர்க்கும் மூன்று அக்கினிகளைப்போல இருக்கிறீர்கள். வானத்து, வயங்கித் தோன்றும் மீனினும் இம்மென, இயங்கும் மாமழை உறையினும், உயர்ந்துமேந் தோன்றிப் பொலிக நும் நாளே" (367) என்று மூவரையும் ஆசீர்வதிக்கிறார்.

பாணன் முதலிய பரிசிலர்

புலவர்களின் நிலை இங்ஙனம் ஆக, பாணன், விறலி முதலிய கலைஞர்களும் அரசனுடைய ஆதரவை முற்றும் பெற்றனர். பாணன் தன் இசையாலும், விறலி தன்

இசையாலும் கூத்தாலும் மன்னனை மகிழ்விப்பர். புலவர், பாணர் முதலியவர்களுக்குப் பலவகைப் பொருளும், அருங்கலங்களும், யானை முதலியனவும் பரிசிலாக அரசர் தருவது வழக்கம். சிறப்பாகப் பாணர்களுக்குப் பொன்னாலாகிய தாமரைப்பூவையும், விறலியர் அணிந்து கொள்ள இழையையும் தருவர்.

போர்

போர்க்கலையில் அரசர்கள் திறம்பெற நின்றதைப் புறநானூறு நன்கு விளக்குகிறது. புறப்பொருள் துறைகளில் பெரும்பாலன போர் சம்பந்தமான செய்திகளை உடையனவே. தமிழர் போர் முறையைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் அது மிக மிக விரியும்.

அவர்களுடைய போரை "அறத்தாறு நுவலும் பூட்கை மறம்" என்று பாராட்டுகின்றனர். மதிலைப் பொருதலும், ஊரை முற்றுகையிட்டு உணவு வெளியிலிருந்து செல்லாமல் தடுத்தலும், மதிற் கதவுகளை யானையைக் கொண்டு உடைத்தலும், நால்வகைப் படைகளொடு போர்புரிதலும் பிறவுமாகிய போர்வகை பல கடலில் நாவாய் செலுத்திக் கடற்போர் செய்தலும் தமிழருக்குப் புதிதன்று.

மறவர்களின் வீரமும், படைத் தலைவர்களாகிய ஏனாதிகளின் சிறப்பும், இளைப்புற்ற மன்னர்களைத் தாங்கும் துணையாக உதவும் தேர்வண் மலையனைப் போன்ற வீரர்களின் பெருமையும், மறக்குடிப்பிறந்த பெண்டிரின் வீர உணர்ச்சியும் இன்னதன்மைய என்று புலப்படுத்தும் பாடல்கள் பல.

அரசர் தம் பகையரசர்களை வென்று களங்கொள்ளுதலும், அவர்களுடைய முரசு முதலியவற்றை அகப்படுத்தலும், கடிமரத்தை வெட்டுதலும், ஊரை எரித்

தும், நீர் நிலைகளை உடைத்தும், வயல்களில் எரிபரப்பியும், பகைவர் நாட்டைப் பாழாக்குதலும் அஞ்சுதகு செய்திகளாம். பகைவர்பாற் பெற்ற கலங்களைப் பரிசிலர்க்கு ஈந்தும், பகைவர்களின் முடிப்பொன்னால் கழல் செய்து தாம் அணிந்தும், அவர்களுடைய யானையின் ஓடைப் பொன் கொண்டு பொற்றாமரைப் பூச்செய்து பாணர்க்குதவியும் அரசர் தம் வெற்றியைக் கொண்டாடுவர்.

களவேள்வி, இராஜசூயம் முதலிய வேள்விகளைச் செய்த அரசர் சிலர் உண்டு. போர்க்களத்து மடிந்த வீரர்களுக்கும், வேந்தர்களுக்கும் வீரக்கல் நட்டுப் போற்றுவது தமிழர் மரபு. வலியச் சாவை எதிர்கொண்டழைக்கும் வீரர்களைப்போல் வடக்கிருத்தலென்னும் விரதத்தை மேற்கொண்டு "முழூஉ வள்ளூரம் உணக்கும்" மன்னர்களாக உயிர் நீத்த பெருவீரர்களாகிய கோப்பெருஞ் சோழன் முதலியவர்களும் நடுகல்லாயினர்.

இங்ஙனம் ஈகையாலும், முறை செய்தலாலும், வீரத்தாலும் புகழ்பெற்ற மன்னர்களும் பிறரும் தமிழ்நாட்டை நல்ல நிலமாக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய சரித்திரத்தைப் புலப்படுத்தும் மூலபண்டாரமாகப் புறநானூறு விளங்குகின்றது.

3. சமயம்

மக்களினத்தின் சிறப்பியல்களுள் ஒரு முக்கிய அங்கமாக அமைந்துள்ளது சமயம். சமயக் கோட்பாடு இல்லாத மக்களினமே இல்லை என்று சொல்லலாம். கொள்கைகளிலே எத்தனையோ பேதங்கள் காணப்படலாம். பழக்க வழக்கங்களிலே எத்தனையோ மாறுதல்கள் இருக்கலாம். ஆனால் எல்லோரும் தெய்வக் கொள்கையிலே ஒரு தன்மையராகக் காணப்படுகின்றனர். எல்லோரும் தெய்வம் ஒன்று உண்டு என்று நம்புகிறார்கள். தெய்வமே இல்லை என்பவர்களும் அதன் நிலையில் இயற்கைச் சக்திகளை ஒப்புக் கொள்ளுகின்றனர். இத் தெய்வக் கொள்கை எக்காலத்துத் தோன்றியது என்று வரையறுத்தல் இயலாது. பல வகையில் ஆராய்ந்து பார்ப்பினும் சமயவுணர்ச்சி அநாதியாகவே தோன்றி இன்று வரையிலும் பயின்று வந்திருப்பது சரித உண்மை. இன்னும் மக்களினம் உள்ள வரையிலும் சமயமும் இருப்பது நிச்சயம். இவ்வுணர்ச்சி மக்களினத்திற்கே உயிர் போன்றது. இதன் வாயிலாகத் தோன்றிய சமயபேதங்கள் பல.

ஒவ்வொரு சமயமும் சில மூலக் கொள்கைகளை மேற்கொண்டு காலத்திற்கேற்றபடித் தோன்றிச் சமூகத்திற்குப் பெரும்பயன் அளித்திருக்கின்றது. உதாரணமாகப் புத்த, சமண சமயங்களைச் சொல்லலாம். இவை உயிர்க் கொலை செய்து ஊன் உண்டலைத் தடுத்து ஜீவ காருணியத்தைப் புகட்ட வந்தன. அவ் விஷயத்தில் அம் மதங்கள் வெற்றியும் பெற்றன. அவை அக்காலத்திற்கு மிகவும் ஏற்றனவாகவும் இருந்தன. இம்முறையில்தான் மதபேதங்கள் ஏற்பட்டன. அந்நிய தேசத்துப்

பிறந்த சமயங்களும் நம் இந்திய நாட்டில் வந்து நிலை பெற்றன. சிற்சில காலங்களில் மதம் காரணமாகப் பூசல்களும் ஏற்பட்டன. அதனால் ஒரு மதம் மேலோங்கவும் மற்றொரு மதம் தாழ்வடையவும் நேர்ந்ததுண்டு. இப்பொழுது காணப்படும் சமயபேதங்கள் பலவெனினும், யாவரும் நோக்கும் பொருள் ஒன்றுதான்.

முற்காலத்துச் சமயக் கொள்கைகளுக்கும் பிற்காலக் கொள்கைகளுக்கும் நிரம்ப வேற்றுமை உண்டு. பிற்காலத்திலே சமயத்திற்கு வாழ்க்கையில் நிரம்ப இடம் கொடுத்தனர். வாழ்க்கையே சமயத்தின்பொருட்டு என்ற எண்ணமும் ஒரு காலத்து இருந்தது. இதனால் விளைந்த பயன் சமயப் பூசல்களே. சங்க காலத்திலே சமயத்திற்கும் ஓரிடம் கொடுத்தனர். அவர்தம் வாழ்க்கை முற்றும் சமயமாய் மாறிவிடவில்லை. மக்களுக்குத் தொண்டு செய்வதிலும் உலகம் நல்ல நிலையில் வாழ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்திலும் அவர்கள் உள்ளம் பதிந்திருந்தது. அறத்தைப் பெரிதாகப் போற்றினர். போர் புரிவதிலும் அறத்தைக் கையாண்டனர். அறத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் போர் செய்தனர். இவைகளெல்லாம் நாம் பழந்தமிழ் நூல்களிலிருந்து கண்ணாடிபோலக் காணலாம். அத்தகைய தமிழ் நூல்களுள்ளும் மிகப் பழமையானது என்று கருதத் தக்கது புறநானூறு. இந்நூலிற் காணும் சமயங்களைப் பற்றி ஆய்வதன் முன் இப்பொழுதுள்ள நூல்களுக்கெல்லாம் முற்படத் தோன்றியது எனப்படும் தொல்காப்பியர் நூலில் கூறப்பட்ட சமயத்தை அறிவதும் மிக அவசியம். இது சமய வளர்ச்சியைக் காட்டுவதற்கு ஒரு முக்கியமான அம்சமாகும்.

புறநானூற்றுக்குமுன் சமய நிலை

தொல்காப்பியர் நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்கு கூறுபடுத்து அவற்றிற்கு முறையே திருமால், முருகன், இந்திரன், வருணன் இவரைத் தெய்வமாகக் கூறியுள்ளார். பூவைநிலை பற்றிப் பேசுமிடத்து மாயோனைக் குறிப்பிட்டுள்ளார். வேலன் வெறியாடலும் குறிக்கப்படுகிறது. சிறு தெய்வங்களாக எண்ணப்படுகின்ற கொற்றவை முதலியோரைப் பற்றிய நிகழ்ச்சியும் காணப்படுகின்றது. இறந்த வீரனைத் தெய்வமாக எண்ணி அவன் பொருட்டுக் கல்நட்டு வழிபடும் வழக்கமும் தெரிய வருகின்றது. இறந்த வீரன் ஒருவனைத் தெய்வமாக எண்ணி வழிபடும் அக்கால மக்கள் மனப்பான்மையிலிருந்து அவர்களுடைய தெய்வ வழிபாட்டு முறையை ஊகிக்கலாம். தெய்வத்திற்கு அவர் கோயில் இயற்றி உருவம் சமைத்து வழிபட்டுப் பழகி வந்த மனப்பான்மையே ஓர் வீரனுக்குக் கல்நட்டு வழிபடும் எண்ணத்தை உண்டாக்கி யிருக்கவேண்டும். தெய்வத் திருக்கோயில் முதலிய அற நிலையங்களைப் பாதுகாத்தற்கு அரசன் தலைவியைப் பிரிந்து சேறலுண்டு என்று பிரிவுபற்றிக் கூறுமிடத்துக் காணப்படுகிறது.

மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த வொண்பொருள் முடியவும் பிரிவே.

(தொல்-அகத். 30)

இச் சூத்திர உரையில் 'நால்வகை நிலத்தினும் மேவிய சிறப்பினையுடைய மக்களை யல்லாத தேவரது பூசையும் விழாவும் முதலாயினவும்...மக்கள் முறைதப்பிய வழித் தப்பாது அறம் நிறுத்தல் காரணமாகவும்...

பிரிவு உள்தாம்' எனக்காண்கிறது. இதனையே அறப் புறங்காவல் எனப் பின்னூல்கள் கூறும். படிமைய என் பதற்குத் தேவரது படிமையவாகிய பொருள்கள் என்று விளக்கம் கூறுவர் இளம்பூரணர். இத்தொடரிலிருந்து கோயிலில் திருவுருவம் வைத்து வழிபட்டமை தெரிய வரும்.

கடவுள் வாழ்த்தொடு கொடிநிலை கந்தழி வள்ளி என்ற மூன்றும் வாழ்த்தப்படும் என்றலின் இம்மூன்றும் கடவுளைப்போல வணங்கப்பட்டன என்று எண்ணலாம். இவை பற்றி விளக்கியவர்கள் இளம்பூரணர் தொடக்க மாக இன்று வரையிலும் எத்தனையோ பேதமான அபிப் பிராயங்கள் சொல்லியுள்ளார்கள். கடவுளைப் போன்றே "அமரர் கண் முடியும் அறுவகை" (தொல். புறத். 21) என்ற பகுதியும் கொள்ளத்தக்கது. இவற்றைத் தெய் வத் தன்மைப்படுத்தி வாழ்த்தினர். சொல்லதிகாரத்தில் 'காலம் உலகம்' (57) என்ற சூத்திரத்துச் சேனவரையர் சிலவற்றைத் தெய்வம் என்று குறிப்பிடுகின்றார். 'காலம் என்றது காலக்கடவுளை; பால்வரை தெய்வம் என்றது எல்லார்க்கும் இன்பத் துன்பத்திற்குக் காரணமாகிய இருவினையும் வகுப்பது; வினையென்பது அறத்தெய்வம்; சொல் என்பது நாமகளாகிய தெய்வம்' என்பன அவர் கூறும் தொடர்கள். இப்பகுதியில் சில தெய்வப் பெயர் களை நாம் காண்கிறோம்.

மேற்குறித்த கடவுளரைத் தவிர, மற்றைய தெய்வங் களைப் பற்றிய பேச்சு தொல்காப்பியத்துள் இல்லை. ஒரு சிலர், உரைகாரர்களுக்கும் வழங்கிவந்த பாட முறைக் கும் மாறாக, சில பாடங்களைக் கற்பித்துக்கொண்டு தங்கள் கொள்கைகளையும் தொல்காப்பியத்து நிலைநாட்ட முயல்கின்றனர். இம்முயற்சியில் 'மாயோன மேய காடுறையுலகம்' (தொல். அகத். 5) என்றவிடத்து

'மாயோள்' என்று திருத்தி, சக்தியைத் தொல்காப்பியத்துப் புகுத்தினர் ஒரு சிலர். இவ்வாறாகக் கூறும் கூற்றுக்கள் எல்லாம் ஆசிரியர் கருத்தல்ல என்பது நோக்குவார்க்குப் புலனாம்.

தொல்காப்பியரை 'பல்புகழ் நிறுத்தபடிமையோன்' எனப் பனம்பாரனார் சிறப்பித்துரைப்பர். தவத்தினர்க்குப் படிமையோன் என்று கூறும் வழக்குச் சைன நூல்களில் மட்டும் பயின்று வருவது ஒன்று என்றும், மரபியலிற் தொல்காப்பியர் ஓரறிவு முதலாக ஆறறிவு ஈறாக உயிர்களைப் பகுத்துக் காட்டியதும் சைனநூல் வழக்கென்றும் இவற்றால் தொல்காப்பியர் சமயம் சமணமாயிருக்கலாம் என்றும் சில கருத்துக்கள் செந்தமிழ்ப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதனை நோக்கின் சமணமதமும் அவர் காலத்திலிருந்தது எனத் துணிய இடமுண்டு. பல்வகை நிலையாமைகளை வற்புறுத்திக் கூறும் காஞ்சித்திணைப் பகுதியும் சமணமதச் சம்பந்தம் பெரிதும் உடையது. நிலையாமையை மிகவும் வற்புறுத்தித் துறவறத்தைப் பெரிதும் போற்றும் மதம் அதுவே.

மூன்று காலச் செய்திகளையும் நன்கு அறிந்து கூற வல்ல அறிவர் எனப்படும் பெரியவர்கள் மக்களுக்கு நல்லறிவு புகட்டினர். காஞ்சித்திணையில் காட்டிய 'மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமை, கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமை' (தொல்-புறத். 19) முதலியவும் இவர் கூறும் உபதேசங்களைக் குறிப்பனவாதல் வேண்டும். நூலும் மணியும் கரகமும் கைக்கொண்டு திரியும் அந்தணர்களும் காணப்படுகின்றனர். தவத்தின் இயல்பு பற்றியும் கூறுகின்றார். அவர் காலத்துத் துறவறங்காத்த முறையை,

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனுங் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே
(தொல். கற்பு 51)

என்ற சூத்திரம் நன்கு விளக்கும். இங்ஙனம் பல விஷயங்கள் சமய சம்பந்தமாக அவர் நூலிலிருந்து நாம் அறியலாம்.

வேத வேள்வி

புறநானூற்றிலே வேதநெறி பத்திநெறி என்று பிற்காலத்தில் மிகவும் விரிவாகப் பேசப்பட்ட இரண்டும் பயின்று வந்திருத்தல் காணலாம். அங்கம் ஆறினல் உணரப்பட்ட வேதம் நான்கும் பழைய நூல் என்றும் நீண்ட சடையினையுடைய முதிய இறைவனுகிய சிவபெருமான் வாக்கைவிட்டு அது நீங்காதது என்றும் குறிக்கப்படுகிறது. வேதத்தை அந்தணர்கள் நன்கு பயின்றார்கள். அதனல் மறை நவிலந்தணர், நான்மறை முதல்வர் என்று சிறப்பிக்கப் பெற்றனர். அறுவகைத் தொழில்களை இவர் செய்துவந்தமையால் அறு தொழில் அந்தணர் எனவும் கூறப்பெற்றனர். வேள்வியைப் பற்றித் தருமநூல்களும் நால்வேதமும் சிறப்பாக எடுத்துரைத்தன. அரசர்கள் இந்த நான்மறை முதல்வர்களைச் சுற்றமாகக் கொண்டு பெருவேள்வி செய்தனர்.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவனைச் சிறப்பிக்க வந்த புலவர்,

அறுதொழில் அந்தணர் அறம்புரிந் தெடுத்த
தீயொடு விளங்கும் நாடன் (397)

என்று அவன் நாட்டில் எங்கும் வேள்வி வேட்டதைக் குறிப்பிடுகின்றார். மற்றொரு பாண்டிய அரசன் பல யாக சாலைகள் அமைத்து வேள்வியைப் போற்றினன்.

இதனால் இவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று பெயர் பெற்றான். இவனைப் பாடிய புலவர்,

வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி
யூபம் நட்ட வியன்களம் பலகொல் (15)

என்று பாடுகின்றார். இதிலிருந்து அவன் பல யாகம் செய்தமை நமக்கு நன்கு புலனாகிறது. சோழன் கரிகால் பெருவளத்தானும் வேள்வி செய்தான் என்று தெரிகிறது. அவன் இறந்த பின் அவனை நினைந்து பாடும் கையறுநிலைச் செய்யுளில் அவன் செய்த பல காரியங்களுள் இவ் வேள்வியையும் ஒன்றாக் வைத்துக் கருங்குழலாதனார்,

அறமறக் கண்ட நெறிமா ணவையத்து
முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
பரிதி யுருவிற் பல்படைப் புரிசை
எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழில் முடித்ததூ உம் (224)

என்று இரங்கிப் பாடுகின்றார். மற்றொரு சோழன் இராசசூயம் என்னும் யாகம் செய்து, இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற பெரும்பெயர் பெற்றான்.

புறநானூறு 169-ஆம் செய்யுளில் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் செய்த வேள்வியைச் சிறப்பித்து ஆவூர் மூலங்கிழார் பாடுகின்றார். இப்பாட்டில் வேள்வி செய்யும் முறைகள் நன்கு விரிவாகக் கூறப்படுகின்றன. அவன் தன் மனைவியரோடு கூடி வேள்வினைக்கு வேண்டி அணியும் தோலை யணிந்து அம்மகளிர் இவனுக்குத் துணைபுரிய வேள்வி செய்தான். அவ்வேள்வியில் நீர் நாணும்படி நெய் சொரிந்தான். வேள்வி முடிவில் பெருவிருந்து

செய்தான். இவ்வாறு இவன் செய்த வேள்வி எண்ணி லடங்குவனவல்ல; பல. ஆதலின் புலவர்,

> எண்ணுணப் பலவேட்டும்
> மண்ணுணப் புகழ்பரப்பியும் (166)

என்று குறிப்பிட்டார். பதிற்றுப் பத்தில் பெருஞ்சேர லிரும்பொறை என்ற சேர மன்னன் தன் கற்பிற் கரசி யோடு வேள்வி செய்தமையால், அவள் வயிற்றிலிருந்த குழந்தை கருவிலேயே நல்லறிவு முதிர்ந்து பிறந்தபின்பு சிறந்து விளங்கினுன் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இங்ஙனமர்க வைதிக நெறியில் நின்று செய்யும் வேள் வியை அரசரும் மேற்கொண்டு செய்தனர் என்பது தெளிவாகிறது. இதனுல் வேள்வி செய்து வழிபடும் ஓர் முறை அக்காலத்தில் மிகவும் பயின்றிருந்தது என்று எண்ணலாம்.

தெய்வங்கள்

பக்தி நெறியிலே தெய்வக் கோயில்கள், தெய்வ வழி பாடு, அத்தெய்வங்களுக்கு மக்கள் எடுத்த விழாக்கள் முதலியவற்றையும் பக்தியைப் பெருக்கும் கதைகளையும் குறிப்பிடலாம். அக்கால மக்கள் வழிபட்ட தெய்வங்களை நாம் ஆராய்ந்தால் அவர்களிடையே பரவியிருந்த மத பேதங்களை நாம் உணர்ந்து கொள்ளலாம். அவர்கள் தெய்வங்களை வழிபட்டு வந்த முறை, மற்றும் அவர்தம் வாழ்க்கைக் குறிப்புக்கள் சில: இவைகளிலிருந்து அவர் தம் சமய வாழ்க்கையை நாம் தெள்ளத் தெளியலாம்.

புறநானூற்றில் குறிக்கப்பட்ட தெய்வங்கள் பல. சிறு தெய்வங்களும் அப்படியே. பிற்காலத்து நூல்களி லிருந்து நாம் தெரிந்து கொள்ளும் தெய்வங்களில் பலர் இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளார்கள். சிறப்பாகச் சிவன்,

திருமால், முருகன், இந்திரன், பலதேவன், பிரமன் முதலியோரைச் சொல்லலாம். இத் தெய்வங்களுக்குக் கோயிலமைத்தும் அக்கால மக்கள் வழிபட்டனர். நால்வர் கோயில்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. அவை சிவன் கோயில், முருகன் கோயில், இந்திரன் கோயில், தேவி கோயில் என்பன. இக்கோயில்கள் முக்கட்செல்வன் நகர், முருகன் கோட்டம், வச்சிரத் தடக்கை நெடியோன் கோயில், அணங்குடைத்தேவி முன்றில் என்ற தொடர்களால் இந்நூலகத்துக் குறிக்கப்படுகின்றன. கோயிலில் தத்தம் தெய்வவுருச் சமைத்தும் வணங்கினர். உரு அமைத்து வழிபடும் வழக்குத் தொல்காப்பியர் காலத்துக்கு முன்னேயே உண்டென்பது முன்னர்க் கூறப்பட்டது. புலவர்தம் செஞ்சொற்களால் தெய்வங்களின் திருவுருவை நம் மனக்கண் முன் காட்டுகின்றனர். அவர் காட்டும் தெய்வத் திருவுருவைப் பார்ப்போம்.

சிவபெருமான்

சிவபெருமான் திருவுருவைப் பல இடங்களில் புலவர்கள் போற்றியுரைத்துள்ளார்கள். முக்கியமாக, இந்நூலுக்குக் காப்பாகப் பெருந்தேவனார் பாடிய செய்யுள் சிவபெருமானது செவ்விய உருவை நன்கு விளக்குகிறது. கடவுள்தான் யோகியாயிருந்து மக்களுக்கு யோகத்தையும் போகியாயிருந்து போகத்தையும் உணர்த்துகிருன் என்று சைவ நூல்கள் பாராட்டிக் கூறும் உண்மை இவர் பாடலில் பொருந்தியிருக்கிறது. நீரறுத கமண்டலத்தோடும் தாழ்ந்த சடையோடும் விளங்கும் அரிய தவசி என்று குறிப்பிடுகின்ருர் சிவபெருமானை. அவர் தம் உருவைச் சொல்லுமிடத்துப் 'பெண்ணுரு ஒரு திறனுகின்று' என்று உமாதேவியாருடன் கூடியிருக்கும் மங்கள ரூபத்தையும் உடன் கூட்டிச் சொல்லுகின்ருர்.

சிவபெருமான் கொன்றைக் குறுங்கண்ணி சூடி மார்பில் கொன்றை மாலை தாங்கி நிற்கின்றான். இடபத்தை ஊர்தியாக உடையவன்; கொடியாகவும் அவ்விடபத்தை உயர்த்தியிருக்கிறான். பிறைச் சந்திரன் நுதலுக்கு வண்ணமாக அமைந்திருக்கின்றது. அவன் உண்ட நஞ்சு அவன் கண்டத்திற்கு ஓர் தனியான அழகைத்தரு கின்றது. நஞ்சும், பிறையும் அவன் அடியார் திறத்துச் செய்த கருணையைக் காட்டிக் கொண்டிருக்கின்றன. இவற்றைக் கண்ணுற்ற அந்தணர்களும் தேவர்களும் அவன் கருணையை நினைந்து அவ்விரண்டனையும் புகழ் கின்றார்கள். இம்மாதிரியான ஒரு சொற் சித்திரம் பெருந் தேவனார் நமக்குத் தீட்டித் தந்திருக்கிறார்.

மற்றும் புறநானூற்றுப் புலவர்கள் பல இடங்களில் சிவபெருமான் உருவத்தைப் போற்றி உரைத்திருக்கின் றனர். முக்கட் செல்வன் என்ற ஒரு பெயர் சிவனுக்குக் குறிக்கப்படுகிறது. இது பெருந்தேவனார் பாட்டில் இல்லை. ஓரிடத்து அவனுடைய நுதற்கண்ணை ஓர் அரசனுக்கு ஒப்பிடுகின்றார் ஒரு புலவர். பெருந்தேவனார் பாட்டில் கூறப்பெற்ற செய்திகளும் வந்துள்ளன. பாலொத்த பிறையைச் சென்னியிலுடையான்; ஆனேற்றுக் கொடியை வலப்பக்கம உயர்த்தியவன். நஞ்சுண்ட கறை யினால் நீல மிடற்றான் மணிமிடற்றான் என்று புகழப்படு கின்றான். நீண்ட சடையையுடையான்; மழுப்படையேந் திய கையுடையான். மற்றோரிடத்தில் ஆலமர் கடவுள் என்ற தொடர் குறிக்கப்படுகிறது. இத்தொடர் தக்ஷிண மூர்த்தியைக் குறித்ததாகல் வேண்டும். இவ்வாறு சிவ பெருமான் திருவுருவம் வருணிக்கப்படுகிறது: வேதம் அருளிய நாதன்; திரிபுர அசுரர்களை ஒடுக்கி அமரர் களுக்கு வென்றி தந்தவன். தேவர் பொருட்டு நஞ்சம் உண்டவன்; எல்லாவுயிர்க்கும் பாதுகாவலானவன்

என்று இன்னோரன்ன புகழ்மொழிகளைக் கவிஞர்கள் சிவபெருமானுக்குச் சூட்டியிருக்கின்றார்கள்.

திருமால்

இனித் திருமாலின் உருவத்தைப் பார்ப்போம். நீலமணியை ஒத்த திருமேனியை யுடையான். அஞ்சன மேனியன் என்றும் புகழ்ந்து கூறுவர். கருடப்புட் கொடியை உயர்த்தியவன். புகழிற்கும் செல்வத்திற்கும் திருமாலையே புலவர்கள் ஒப்பிடுகின்றனர். சக்கரப்படை கொண்டு நேமியான் என்னும் பெயர்பெற்றான். பஞ்சாயுதங்களைப் படைத்திருப்பவன் என்பது 'தாலி களைந் தன்றுமிலன்' (77) என்ற தொடரிலிருந்து நாம் ஊகிக்க இடந்தருகின்றது; தாலி என்பதற்கு ஐம்படைத்தாலி என்று ஆன்றோர் பொருள் கூறலின். ஒருங்கிருந்த இரு வேந்தரை

பானிற வுருவிற் பனைக்கொடி யோனும்
நீனிற வுருவி னேமி யோனுமென்று
இருபெருந் தெய்வ முடனின் றாஅங்கு
உருகெழு தோற்றமோ டுட்குவர விளங்கி (58)

என்று புகழ்கின்றார் காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார். இங்குப் பலதேவரோடு நேமியான் என்று குறித்தது கண்ணனைக் குறித்ததாதல் வேண்டும்.

பலதேவர்

கண்ணன் உடன் பிறந்தவரான பலதேவர் கடற் சங்கு போன்ற நிறமுடையவர். அதனால் வாலியோன் என்ற பெயரடைந்தார். இவருக்கும் கோயில் கட்டி வணங்கினர் என்பது சிலப்பதிகாரத்தால் தெளிவாகத் தெரிகிறது. ஆனால் பிற்காலத்தில் இவர்தம் கோயில்கள் காணமற் போயின. இவர் பனைக்கொடியுடையார்;

நாஞ்சிற்படை யுடையர். வலிமையிற் சிறந்தவர். 'வலி யொத்தியே வாலியோனை' (56) என்று புகழ்ந்தார். ஒரு புலவர்.

பிரமன்

பலதேவருடைய கோயில் இல்லாமை போலவே பிரமதேவன் கோயிலும் இக்காலத்தில்லை. பிரமதேவன் படைப்புக் கடவுள் என்று சொல்லவேண்டியதில்லை. அவன் படைப்பில் எத்தனையோ விசித்திரங்கள், எத்தனையோ இன்பங்கள்; அதனோடு எத்தனையோ துன்பங்கள் கலந்திருக்கின்றன. இன்பத்துடன் துன்பத்தையும் உடன்படுத்து உலகத்தில் இன்னாமையை மிகுவிப்பதைக் கண்ட ஒரு புலவர் 'படைத்தோன் மன்றவப் பண்பிலாளன்' (194) என்று பிரமனுக்கு ஒரு பழி சூட்டுகிறார்.

முருகன்

பழந்தமிழ் நூல்களில் பல இடங்களில் புகழப்படும் தெய்வங்களுள் முருகனை முக்கியமாகக் கூறவேண்டும். மயில் ஊர்தியில் மயிற்கொடி ஏந்தி இலங்குகின்றான். கார்காலத்துப் பூக்கும் கடப்பமாலையை அணிந்திருக்கின்றான். சூரனை வென்ற வீரன்; எண்ணியதை முடிக்கும் ஆற்றலான். அரசர்களின் வீரத்திற்குப் பல புலவர்களும் முருகனை ஒப்பிடுகின்றார்கள். இவன் கோயில் கொண்டிலங்கும் பதிகளிலொன்றாகிய செந்திலம்பதி சிறப்பித்துக் கூறப்படுகிறது. (55). முருகன் பொருட்டு வெறியாடல், முருகன் மக்கள்மேல் ஆவேசமாதல் முதலியனவும் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இந்திரன்

இந்திரன் 'வச்சிரத்தடக்கை நெடியோன்' (241) என்று புகழப்பட்டிருக்கின்றான். பலதேவன், இந்திரன், பிரமன் முதலியோர் கோயில்கள் இன்று நாம் காணக் கூடவில்லை. சங்க காலத்திற்குப்பிற்பட்ட சிலப்பதி காரத்தில் இவர் கோயில்களைக் காண்கிறோம். முக்கிய மாக், சிவன், திருமால், முருகன் இவரைப்பற்றிய செய்தி கள்தாம் சங்க நூல்களில் விரிவாகக் காணக்கிடக் கின்றன.

தேவி

தேவியின் முற்றம் புறம் 247-ல் சிறப்பிக்கப்படு கிறது. காய்ந்த விறகுகளை யானைகள் கொண்டுவந்து வேடுவர்களுக்குக் கொடுக்கின்றன. அதனைப்பெற்று அவர்கள் அதனால் தீ மூட்டினர். அவ்விளக்கொளியில் மடப்பம் பொருந்திய மான்கள் தூங்குகின்றன. மந்திகள் அம்முன்றிலைச் சீத்துச் சுத்தம் செய்கின்றன. இத்த கைய காட்சியுடன் கூடியது தேவியின் முன்றில் என் கிறார். தேவி வணக்கம் சிலப்பதிகாரத்தில் ஒரு பகுதி யையே மேற்கொண்டுவிட்டது. வேட்டுவவரி முழுவதும் தேவியின் புகழ்தான் பேசப்பட்டிருக்கின்றது. தேவியின் முன்றிற் சிறப்பை மிக அழகாக இளங் கோவடிகள் அங்கே கூறியிருக்கின்றார்.

தெய்வங்களின் பெயர்களை மக்களுக்கு இடும் வழக்க மும் அக்காலத்தே தொடங்கிவிட்டது. கருவூர்ப் பெருஞ் சதுக்கத்துப் பூத நாதனார், சோழன் நல்லுருத்திரன், நல்லிறையனார், மதுரைத் தமிழக் கூத்தனார், மதுரைப் பேராலவாயர், உறையூர் மருத்துவன் தாமோதரனார், தாமப்பல் கண்ணனார், பிரமனார், பெரும்பதுமனார், ஒக் கூர் மாசாத்தியார், சீத்தலைச் சாத்தனார், பாண்டியன்

கீரஞ்சாத்தன் முதலியன அப்பெயர்களில் சில. சாத்தனார் என்ற பெயர் வழக்கால் ஐயனார் எனப்படும் சாத்தனார் வணக்கமும் இருந்தது என்று எண்ண இடமுண்டு.

சிறு தெய்வங்கள்

சிறு தெய்வ வழிபாடும் அக்காலத்திருந்தது. மலையிலும், நீரிலும், மரங்களிலும் தெய்வம் உறைவதாக மக்கள் நம்பி வந்தனர். மலையைச் சிறப்பிக்குமிடத்து அணங்குடை நெடுங்கோடு, அணங்குசால் அடுக்கம், அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமையம் என்றிவ்வாறு அது கூறப்பட்டிருக்கின்றது. தெய்வம் உறைந்த ஓர் ஆலமரத்திற்கு கடவுள் ஆலம் (199) என்று ஒரு புலவர் பெயர் சூட்டுகின்றார். புறம் 260-ல் கள்ளிநிழலில் உள்ள ஓர் தெய்வத்தைப் பாணன் தொழுது வருவதாக அவனைச் சிறப்பிக்கின்றார். கள்ளிநிழல் முதலியவற்றில் உள்ள தெய்வங்கள் என்றது நடுகல்லைக் குறித்ததாக இருக்கலாம்.

சிறந்த வீரனுக்குக் கல்நட்டுச் சிறப்புச் செய்யும் ஒரு பெரு வழக்கு புறத்தில் மிகுதியும் பயின்றுள்ளது. நடுகற்பற்றி,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தல்
(தொல். புறத். 5)

என ஆறு செய்திகள் உரைத்தார் தொல்காப்பியர். இச்செய்திகள் அனைத்தும் இந்நூலில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சாதாரணமாகப் போரிற் சென்று இறந்தவர்களுக்கெல்லாம் கல்நட்டனர் என்று சொல்லமுடியாது. கல்நாட்டுதற்குரிய வீரனுடைய வீரமே ஒரு தனியான

வீரம். பெரும் போரிலே தன்னுடன் நின்று பொருதவர்கள் போய்விடுகின்றனர். அப்பொழுது, தான் ஒருவனாய் நின்று அஞ்சாது பொருது உயிர் துறக்கின்றான். இத்தகையோருக்கே கல்நட்டனர்.

கல்லா இளையர் நீங்க நீங்கான்
வில்லுமிழ் கடுங்கணை மூழ்கக்
கொல்புனற் சிறையின் விலங்கியோன் கல்லே (263)

என்ற அடிகள் நடுகற்குரிய வீரன் சிறப்பை விளக்கிக் காட்டுகின்றன. கல்லில் மயிற்பீலி சூட்டிக் கள்ளினைப் படைத்து வாழ்த்துவர். கல்லிற்குச் சிறு பந்தரும் இட்டிருப்பர். வேங்கைப்பூ முதலிய பூக்களும் கல்லிற்கு அணிதல் உண்டு. நடுகல்லையும் தெய்வமாகவே வழிபட்டனர். ஓர் இரவலனை, நடுகல்லைத் தொழுது செல், இவ்வழி மழை பொழியும். அதனால் நாடு செழித்து மேம்படும் என்று சொல்லியனுப்புகிறார் ஒரு புலவர் (263).

நீர்த்தெய்வம் பற்றிய குறிப்பும் புறத்தில் பயின்றுள்ளது. முந்நீர் விழவின் நெடியோன் (9) என்ற அடியின் உரையில் உரையாசிரியர் கடல் தெய்வத்திற்குச் செய்த விழவு என்று உரை வகுப்பர். சிலப்பதிகாரத்திலே கடற்றெய்வம் பற்றிய குறிப்புச் சில விடங்களில் காணப்படுகின்றமையின் இவ்வடியில் கடல் தெய்வம் குறிக்கப்பட்டது என்பது தெளிவாகின்றது.

சிறு தெய்வங்களிலே பேய் ஒரு பெருங் கூட்டம். இவை இறந்த வீரர் புண்ணைக் குடைந்து அவர்களுக்கு ஊறு விளைக்கும். பேய் அணுகாமல் காப்பதற்கும் மக்கள் சில சடங்குகளைக் கையாண்டனர். இரவு, வேம்பு இம் மரங்களின் தழையை வீட்டின் இறப்பில் செருகிவைத்தல், யாழ் முதலிய இன்னிசைக் கருவிகளால் இசை பாடல், மையிடல், வெண்சிறுகடுகு சிதறுதல், மணி

அடித்தல், காஞ்சிப்பண் பாடல் முதலியன அவர் பேய் வாராமற் காத்தற்குச் செய்த சில முறைகள். பூதங்களும் போர்க்களத்தில் இறந்த வீரர்களைத் துன்புறுத்தும் என்று மற்றோரிடத்தில் காணப்படுகிறது. பூதங்களைக் கூளிச் சுற்றம் என்றும் சொல்வதுண்டு.

பதினெண் கணத்தேவர்கள், பிதிரர், யமன், ஞாயிறு, திங்கள், விண்மீன் முதலியனவும் சிறு தெய்வ வகையுள் அடங்கும். இவற்றைப் பற்றிப் பல இடங்களில் ஆங்காங்கே பல புலவர்கள் விரித்துரைத்துள்ளார்கள்.

வழிபாடு

மழை வேண்டிக் குறவர் தெய்வத்தை வழிபட்டமை ஓரிடத்துக் குறிக்கப்பட்டிருக்கிறது. மலையில் மழை பெய்யக் கடவுளை வேண்டினர்கள். விடாது மழை பெய்தது. பின் மழை மாறி மேகம் மேலே போகவேண்டும் என்று வேண்டுகிறார்கள் குறவர்கள். கடவுட்கு உயர்ந்த பலியைத் தூவி வணங்கினர். நெல், பூ முதலியவற்றைச் சொரிந்து வழிபடுதல் உண்டு என்று தெரிகின்றது. 'நெல்லுகுத்துப் பரவுங் கடவுளும்' (335) என்ற தொடரிலிருந்து நாம் இதனை ஊகிக்கலாம். நடுகல் முதலிய சிறு தெய்வங்களுக்குக் கள் முதலியன வைத்து வழிபடும் முறை முன்னமே குறிக்கப்பட்டது.

விழா

தெய்வத்தின் பொருட்டுச் சிறப்பான திருவிழாக்களும் செய்தனர். விழவு என்பதனைச் சாறு என்றும் வழங்கினர். அரசர்கள் வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்தல்; தாம் பிறந்த நாளைக் கொண்டாடுதல் என்ற இவற்றையும் பெருவிழாப் போலவே கொண்டாடினார்கள். சோலைகளிலே சென்று மக்கள் குதூகலமாய்ச் சிறு

சோறு சமைத்து உண்டு மகிழ்ந்து ஆடுவர். இது சிறு சோற்று விழவு எனக் குறிக்கப்படுகிறது. தெய்வத்திற்கு அடிக்கடி எப்பொழுதும் விழா நடக்கும். மக்கள் யாவரும் அக்காலத்து மகிழ்ச்சியுடன் சென்று காண்பர். விழவில் பல மக்கட்கு உணவு அளிப்பர். 'விழவின்றாயினும் படுபதம் பிழையாது' (96) என்ற அடி இதற்குச் சான்று. 'சென்மோ பெரும எம் விழவுடை நாட்டென' (381) 'விழவும், அகலுளாங்கண் சீறூர் மறப்ப' (65) என்ற தொடர்கள் நமக்கு ஊர்களிலே மக்கள் செய்து வந்த விழவினைக் குறிக்கின்றன. புறம் 9-ல் முந்நீர் விழவு என ஒன்று மேலே குறிக்கப்பட்டது. இதற்கு உரைகாரர், கடல் தெய்வத்திற்குச் செய்த திருவிழாவைக் குறித்தது என்பர். கடல் தெய்வம், மலைத் தெய்வம், நடுகல் தெய்வம் முதலிய சிறு தெய்வங்களுக்கும் விழவு எடுத்தனர். அரசர்கள், தங்கள் பிறந்த நாளினையும், வெற்றியையுமே விழாவாகக் கொண்டாடினர் என்று தெரிவதால், சிவபெருமான் முதலிய தெய்வங்களுக்கும் விழவு செய்து வந்திருக்கவேண்டும். அகநானூற்றில் உறையூர் முதலிய சில நகரங்களில் நடந்த விழாக்கள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. மற்றைய சங்க நூல்களையும் இங்குக் கூறியவற்றோடு ஒப்பிட்டு நோக்கின் அக்கால மக்கள் தெய்வங்களுக்கு எடுத்த விழாவினைச் சிறப்பாக உணரலாம்.

கதைகள்

பக்தி நெறியை மக்களுக்கு ஊட்டுவன தெய்வங்களைப் பற்றிய கதைகள். கதைகள் மூலம் எத்தனையோ விஷயங்களை எளிதில் விளக்கலாம். புறநானூற்றுக் காலத்திற்கு முன் தமிழ் நாட்டில் வழங்கிய கதைகள் பல. அவற்றுள், பாரத இராமாயணக் கதை இரண்டும்

மிகப் பழங் கதை. பாரதம் பாடிய பெருந்தேவனூர் என்ற ஒரு புலவர் புறத்தில் குறிக்கப்படுகின்றார். இவர் முற்காலத்தில் தமிழில் பாரதம் செய்த சிறப்பால் இச் சிறப்புப் பெயர் இவருக்குக் கிடைத்தது. சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் என்ற சேர மன்னன் பாரதப் போரில் இருதிறத்தார் படைக்கும் பெரும் சோறு வழங்கினான் என்பது ஒரு வரலாறு. அக்காரணத்தால் அச் செயல் அவனுக்கு விருதாயிற்று. 366-ம் செய்யுள் தருமபுத்திரனைக் கோதமனார் பாடியது என்று காணப்படுகின்றது. தருமபுத்திரனை 'அறவோன் மகனே' என்று குறிப்பிடுகின்றார். இது பாரதத்தில் வரும் பெயரை நினைவூட்டுகிறது.

இராமாயணக் கதை ஒரு பாட்டில்தான் குறிக்கப் படுகிறது. இப் பாட்டில் குறிப்பிட்ட செய்தி இராமாயண நூல்களில் இல்லாத ஒரு புதுச் செய்தி. கிஷ்கிந்தையிலே சீதாதேவியின் அணியைக் குரங்குகள் அணிந்த செய்தியைக் கூறுகின்றார். இச்செய்தி தவிர வேறொன்றும் இந்நூலில் இல்லை. ஆயினும் கதை முழுவதும் அவருக்குத் தெரியாது என்று சொல்லுவதற்கு இல்லை. பாரதம், இராமாயணம் இரண்டும் சங்க காலத்திலிருந்தே மிகுதியாகப் போற்றப்பட்ட கதைகள் என்பது தெளிவு.

திருமால் செய்த திருவிளையாடல்களிலே மற்ற நூல்களில் காணப்பெறாத செய்தி ஒன்று இந்நூலில் உளது. அசுரர்கள் சூரியனை எடுத்து மறைத்துவிடுகின்றார்கள். உலகம் இருண்டுவிடுகிறது. அஞ்சன உருவனான திருமால் சூரியனைத் திரும்பக் கொணர்ந்து உலகத் துன்பம் தீர்த்தான் என்பது இங்குக் குறித்த வரலாறு. திருமால் ஆலிலையில் பொருந்திய வரலாறு புறம் 198-ல் காணப் படுகிறது. சிவபெருமான் திரிபுரம் எரித்த வரலாறும்

விளக்கமாகவே ஒரு பாட்டில் கூறியிருக்கிறார். ஓங்கிய பெருமலையிலே பாம்புநாணைக் கொளுவி ஒரு கணையால் மூன்று மதிலையும் அழித்து அமரர்க்கு வென்றி தந்தார் என்று திரிபுரம் எரித்த வரலாறு கூறப்படுகிறது. சிவ பெருமான் திருமால் முதலியோரைப் பற்றிப் பல கதைகள் அக்காலத்தில் வழங்கியிருக்கவேண்டும். அக் கடவுளரை வருணிக்கும் வருணனைத் தொடரிலிருந்தும் நாம் சில கதைகளை ஊகிக்கலாம். முருகன் சூரனைவென்ற செய்தியும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறாகப் பல கதைகள் பக்தி நெறிக்கு ஏதுவாய் அக்காலத்து வழங்கின. இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் பிற்காலத்தில் புராணக் கதைகளிலே தெய்வத் திருவிளையாடல்களைக் கூறிப் பக்தியைப் பெருக்கினர். பிற்காலத்தில் விரிவாகக் காணப்பெறும் பல செய்திகளுக்கு மூலம் சங்க நூல்களில் காணலாம்.

புத்தம்—சமணம்

இதுவரையில் வேத நெறிப்பட்ட வேள்வியும், சிவ பெருமான் முதலிய தெய்வ வழிபாடும் சிறுதெய்வக் கொண்டாட்டமும், அத் தெய்வங்களைப்பற்றிய கதைகளையும் பார்த்தோம். இனி அக் காலத்தில் மிகப் பயின்ற புத்தம், சமணம் ஆகிய இரண்டு சமயங்களைப் பற்றிய குறிப்புக்களை ஆராய்வோம். புத்தம், சமணம் பற்றி வெளிப்படையாக ஒன்றுமில்லை.

முதுமுதல்வன் வாய்போகாது
ஒன்றுபுரிந்த ஈரிரண்டின்
ஆறுணர்ந்த வொருமுதுநால்
இகல்கண்டோர் மிகல்சாய்மார் (166)

என்ற அடிகள் புறம் 166-ல் உள்ளன. இவற்றில் இகல் கண்டோர் மிகல் சாய்மார் என்பதற்கு 'வேதத்திற்கு மாறுபட்ட நூல்களைக் கண்டோராகிய புத்தர் முதலிய புறச் சமயத்தோர் மிகுதியைச் சாய்க்கவேண்டி என்று

உரை வகுக்கப்பட்டிருக்கின்றது. உயிர்க்கொலை செய்து வேட்கும் வேள்வியை மறுத்து ஜீவகாருணியத்தை நிலை நாட்டியவர் புத்தரும் சமணருமேயாவர். இவர்களுடைய பெருக்கமும், வேள்வி செய்து வழிபடுவோருக்கும் இவருக்கும் இருந்த பகைமையும் இங்குப் புலனாகிறது. புறப்பாட்டுப் பாடியவருள் உலோச்சனார் என்பவரும் ஒருவர். உலோச்சு என்பது சைனர்கள் செய்துகொள்ளும் ஒரு கிரியை என்றும், அதனால் இவர் சைனரென்று கொள்ளுதற்கு இடமுண்டு என்றும் புறநானூற்றில் பாடினோர் வரலாறு (புறநா. 3-ம் பதிப்பு, பக். 7) கூறுமிடத்து உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் குறித்துள்ளார்கள். கொல்லாமை, நிலையாமை, துறவு முதலியனவற்றை மிகவும் வற்புறுத்தும் மதம் சமண பௌத்த மதங்களே. இவற்றைப் பல இடங்களில் புலவர்கள் வற்புறுத்தியிருக்கின்றார்கள்.

நிலையாமை

நிலையாமையை உணரும் உணர்ச்சியே துறவு, அறநெறி என்றிவற்றை உண்டாக்கவல்லது. திருநாவுக்கரசர் நிலையாமையை உணர்ந்ததனால் உடனே துறவும் அறநெறியும் உண்டாயிற்று என்று சரிதம் கூறுகிறது. 'நில்லாத உலகியல்பு கண்டு நிலையா வாழ்க்கையல்லேனென் றறத் துறந்து' (நாவுக்-37) 'தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்' (நாவுக்-35) என்று பெரிய புராண ஆசிரியர் குறிப்பிடுகின்றார். உலகம் செல்வம் முதலியன மன்னாதன. ஆடும் கூத்தர்போல் தோன்றி மறைவன. உலகம் ஒரு பகுதி இன்பமும் ஒரு பகுதி துன்பமும் கலந்தது. சுடுகாட்டைப் பார்த்ததும் ஒரு புலவருக்கு நிலையாமை உணர்ச்சி பிறக்கிறது. ஆகா, இந்தக் காடு உயிர்த்தொகுதிகள் எல்லாவற்றையும் ஏற்றுத் தான்மாத்திரம் அழிவின்றி எவ்வாறு மக்களுக்கு

நிலையாமையை உணர்த்துகிறது என்று எண்ணுகிறார். அவ்வெண்ணம்,

எல்லார் புறனுந் தான்கண் டுலகத்து
மன்பதைக் கெல்லாந் தானாய்த்
தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே. (356)

என்ற பாட்டு வடிவில் வெளிவருகிறது மற்றொரு புலவர் சந்திரன் கல்வியறிவற்ற மடவோர்களுக்குக்கூட நிலையாமை முதலிய செய்திகளைப் பிரத்தியட்சமாகக் காட்டி அறிவுறுத்துகின்றது என்கிறார் :

தேய்த லுண்மையும் பெருக லுண்மையும்
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும்
அறியா தோரையும் அறியக் காட்டித்
திங்கட் புத்தேள் திரிதரும் உலகம் (27)

என்பது அவர் வாக்கு.

துறவு

நிலையாமை கண்டார்க்குத் துறவு எண்ணம் தோன்றுகின்றது. இத்தகைய எண்ணம் இளமையிலேயே தோன்றிற்று என்று எண்ண இடம் இல்லை. உலக வாழ்வைப் பற்றி நின்றவர்களுக்கே அதன் துன்பமும் நிலையாமையும் நன்கு தெரியும். தொடித்தலை விழுத்தண்டினார் என்ற புலவர் தம் இளமை நினைந்து இரங்குகின்றார். இது அவர் தம் வாழ்க்கையைப் புனிதப்படுத்தும் எண்ணம். புறம் 251, 252-ம் செய்யுட்கள் தவம் செய்யும் ஒருவர் தன்மையைக் கூறுகின்றன. தவம் செய்வோன் இளமையில் இருந்த நிலையையும் அப் புலவர் குறிப்பிடுகின்றார். அப்பாடலில்

பாவை யன்ன குறுந்தொடி மகளிர்
இழைநிலை நெகிழ்த்த மள்ளன் (251)
இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன். (252)

என்று புலவர் அவனது இளமைப் பருவத்தை நமக்குக் காட்டுகின்றார். இவ்வாறு மங்கையருடன் வாழ்ந்து நில்லாத உலகியல்பு கண்டு துறவெண்ணம் தோன்றுகின்றது. அவ்வெண்ணத்திற்குத் தடையாயிருப்பது சுற்றம்.

ஓடி யுய்தலுங் கூடுமன்
ஒக்கல் வாழ்க்கை தட்குமா காலே (193)

என்கிறார் ஓரேருழவர் என்ற புலவர். இத்தடையை நீக்கித் துறந்தவர்கள் மூங்கில் வளர்ந்த மலைச்சாரலிலே சென்று அருவிநீரிலே ஆடுகின்றனர். இத்தகைய தவசிகளுக்கு யானைகள் விறகு கொண்டுவந்து கொடுக்கின்றன. அதனால் தீ வேட்டுப் புரிந்த சடையைப் புலர்த்தித் துறவிகள் வாழ்கின்றார்கள் என்று தெரிகிறது. இச்செய்யுட்களில் கூறப்பட்ட துறவு தொல்காப்பியர் கூறிய துறவு நெறியை ஒத்திருக்கிறது. குழவியிடத்தே துறக்க என்பது பிற்காலத்து ஏற்பட்ட கொள்கை போலும்.

சான்றோர்

மெய்யுணர்வு பெற்ற பெரியார் மக்கட்கு நல்லறிவு புகட்டினர். இப்பெரியார் குற்றமற்ற நூற்கேள்வியையுடையவர். அறங்கோடா நாப் படைத்தவர். கல்வி, நற்குணம் இவற்றால் நிறைந்து எல்லோரிடத்தும் பணிவுடையராய் ஐம்புலனும் அடங்கிய கோட்பாட்டினையுடையவர் என்று ஓரிடத்துச் சான்றோரிலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. இதனை ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் (191) என்ற வரிகள் நமக்கு விளக்குகின்றன. சான்றோர் சான்றோர்களை நாடியிருப்பர். இவர்கள் பொருந்தியிருக்கும் நிலமே நல்ல நிலம் என்று ஔவையார் கருதுகின்றார். இவர்கள் மக்களுக்கு அறநெறியைப் போதித்து நல்வழியிற் செலுத்துபவர்.

அறத்தாறு

அறத்தாற்றை மக்களுக்கு இவர் பலதிறத்தில் விளக்கினர். உலகம் செல்வம் இவற்றின் நிலையாமையைக் காட்டியும் அறிவுறுத்துகின்றனர். செல்வத்துப் பயன் ஈதல் (189) என்றும் உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் (18) என்றும் பரோபகாரத்தைப்பற்றிப் பலவாறு கூறியுள்ளார்கள். உயர்ந்த எண்ணங்களிலே மனத்தை நிலைக்கச் செய்து உண்மை நெறியிலே நடக்க வேண்டும் என்பது இவர்கள் நோக்கம். இப்பெரியோர்களின் உபதேசம் திறவோர் காட்சி (192) என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

நன்மை தீமை இவற்றிற்கு ஏற்ற பலனுண்டு. இதனை அறியாதவரோடு கூடலே தீது என்பது பெரியார் எண்ணம்.

நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை யென்போர்க் கினனா கிலியர் (29)

என்கிறார் ஒரு புலவர். நல்வினை தான் துன்பக்காலத்தில் துணையாவது. இதனால் நல்வினையை 'அறத்துறை யம்பி' (381) என்றனர் நன்னூர். ஔவையார்,

வாழச் செய்த நல்வினை யல்ல
தாழுங் காலைப் புணைபிறி தில்லை (367)

என்று அறிவுறுத்துகின்றார். நல்வினை செய்வோர் மேலுலகத்து இன்பமுறுவர்:

ஈண்டுச்செய் நல்வினை ஆண்டுச் சென்றுணீஇயர்
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் (174)

என்பது மாறோக்கத்து நப்பசலையார் வாக்கு. புலவர் பாடும் புகழ் படைத்தவர் மேலுலகத்துச் சிறந்த நன்மை எய்துவர் என்று போதித்தனர்,

புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவ னேவா வானவூர்தி எய்துப (27)

என்பது உறையூர் முதுகண்ணன் சாத்தனாின் போதனை. அருளையும் அன்பையும் துறந்து பாவம் செய்தவர் நரகம் புகுவர் என்று 5-ம் பாடலில்,

அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவர் (5)

என்ற தொடரில் குறிக்கப்பட்டிருக்கின்றது. மேற்கூறியவற்றிலிருந்து சுவர்க்க நரகங்களைப் பற்றிய எண்ணங்களும் மக்களிடையே நன்கு பதிந்திருந்தன என்று தெரிகிறது.

நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் (192)

என்பது ஒரு புலவர் வாக்கு.

வினையையும் ஊழையும் காட்டி வற்புறுத்தியது போலவே பல இடங்களில் கூற்றுவன் உண்மையைத் தெரிவித்தும் அறத்தை உபதேசிக்கின்றனர். அரசர்கள் நெறி தவறிச் செல்லுமிடத்துப் புலவர் இடித்துரைத்து அறவழிப் படுத்தினர். சான்றோர்கள் நோக்கமெல்லாம் மக்களைத் தீவழி நீக்கி நல்வழிப்படுத்துதலிலேயே பதிந்திருந்தது. பலர் நல்லது செய்தலை வற்புறுத்த, ஒரு புலவர், 'நல்லது செய்யவேண்டாம். அல்லது செய்தலைமட்டும் ஒழித்தால் போதும்' என்கிறார்.

நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின் (195)

என்பது அவர்தம் வாக்கு. ஒவ்வொருவரும் அறம் செய்ய இயலாவிடினும் இவர் கூறுவது போன்று அல்லவை செய்தலை ஒழிப்பின் உலகம் எவ்வளவு நன்றாயிருக்கும். இச் செய்கை ஒருவனை நல்வழிச் செலுத்துவது, மக்கள் எல்லோரும் உவப்பது என்பது அவர்தம் எண்ணம்.

சமரச வுணர்ச்சி

உலகில் பகைமை இன்றி எல்லோரும் ஒற்றுமையாய் இன்பவாழ்க்கை நடத்தவேண்டும். ஒற்றுமை உண்டாக வேண்டுமாயின் பகைமை ஒழியவேண்டும்;

அன்பு வளர வேண்டும். மெய்யுணர்வு வேண்டும். மக்களுக்குள்ளே வேற்றுமை எல்லாம் தொழிலால்தான் பிறப்பால் அல்ல.

பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான் (குறள்-972)

என்று வள்ளுவர் பறை சாற்றுகின்றார். நக்கீரரும் புறத்திலே, எத்தகையோருக்கும்

உண்பது நாழி உடுப்பவை யிரண்டே
பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே
செல்வத்துப் பயனே ஈதல்
துய்ப்பே மெனினே தப்புந பலவே (189)

என்றறிவித்திருக்கின்றார். இம்மாதிரியான உணர்வு வந்தால் தான் ஒற்றுமை உண்டாகும். சமரச வுணர்ச்சி ஏற்படும். சமரச வுணர்ச்சியைப் புலவர்கள் நன்கு விளக்கி யிருக்கிறார்கள். இவ்வுணர்ச்சி ஏற்படின் 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' (192) என்றெடுத்துச் சமரச வுணர்ச்சியைப் போதித்த கணியன் பூங்குன்றன் வாக்குக்கு இலக்கியமாவர். உண்மையை, காய்தல் உவத்தல் இன்றி நோக்கும் பொது நோக்கே உணர்த்தவல்லது. மொழி விஷயத்திலும் உண்மை காண நமக்குப் பொது நோக்கு ஏற்பட வேண்டும். சமரச வுணர்ச்சியை இக்காலத்தில் அனுபவம் முதிர்ந்த பல பெரியார்கள் வற்புறுத்தி வருகின்றனர். ஒவ்வொருவரும் உண்மை காண வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒற்றுமையாக உழைத்தால் தமிழ்த்தாய் எவ்வளவு சிறப்புடன் இலங்குவாள்! அத்தகைய ஓர் காலத்தை நாம் அனைவரும் காண விழைவோமாக.

சமயத்தின் குறிக்கோள் இச்சமரச வுணர்ச்சியன்றி வேறு யாது?

---

4. தமிழர் பண்பாடு

பழங்காலத் தமிழருடைய நாகரிகத்தைக் குறித்துப் புறநானூறு என்ன கூறுகிறது என்பதை இங்கு ஆராய்வோம். நாகரிகம் என்ற சொல்லானது நகரத்தோடொட்டிய பழக்க வழக்கங்கள் என்பதாகப் பொருள்படும். பண்டைக் காலத்திலே, அரசர் முதலியோர் வாழ்ந்த இடங்கள் நாட்டுக்குத் தலைநகராயிருந்தன. அவர்களைச் சுற்றியே அறிஞரும், புலவரும், வீரர் முதலியோரும் வாழ்ந்து வந்தனர். இவர்களுடைய வாழ்க்கையும் செயல்களும் ஒழுக்கமும் நாகரிகத்துக்கு எடுத்துக் காட்டாக இருந்தன. தமிழ் மன்னர்கள் அக்காலத்தில் உயர்ந்த நோக்கங்களைக்கொண்டு வாழ்ந்தமையாலும், அவர்களையொட்டி, வீரம், கொடை, கல்வி, நல்லொழுக்கம் போன்ற அரிய மக்களியல்புகள் வளர்ந்தமையாலும், நாகரிகம் என்பதற்கு அன்று சிறந்த பொருள் இருந்தது. புறத்திலேயுள்ள வெறும் பழக்க வழக்கங்கள் மட்டுமன்றி, உள்ளப் பண்பின் உயர்வுக்கே நாகரிகம் என்ற சொல் வழங்கிற்று.

பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர், நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்

என்று திருவள்ளுவர் கூறும்போது, இத்தகைய சிறப்பான உள்ளப்பண்பை யுடையவர்களையே 'நாகரிகம் வேண்டுபவர்' என்ற சொற்களால் குறிப்பிடுகிறார்.

காலப்போக்கினால் சொற்பொருள்கள் மாறுபடுகின்றன. நாகரிகம் என்ற சொல்லின் பொருளும் எவ்வளவோ மாறுபட்டிருக்கிறது. இன்று பேச்சு வழக்கிலே, அச்சொல்லானது, நகர வாசத்தை யொட்டிய போலி

வாழ்க்கை, கேடான பழக்க வழக்கங்கள், சிறப்பில்லாத
மக்கட் பண்புகள், வீண் ஆடம்பரம் ஆகியவற்றைக்
குறிக்கும் ஏளனச் சொல்லாக இருக்கிறது. வாழ்க்கை
யின் செம்மையையோ ஒழுக்கத்தின் சீலத்தையோ உள்
ளப் பண்புகளின் சிறப்பையோ சுட்டுவதற்கு நாகரிகம்
என்ற சொல் இன்று பொருத்தமாகாது. எனவே,
பண்டை மக்களின் சிறப்பியல்புகளை எடுத்துக் காட்டு
வதற்கும் இச்சொல் இன்று பொருந்தாது. அவர்
களுடைய கருத்துக்களையும் உள்ளப்பண்பையும் ஒழுக்
கத்தையும் 'பண்பாடு' என்ற ஒரு சொல்லால் குறிப்
பிடலாம். வள்ளுவர் போன்றோர் நாகரிகம் என்ற சொல்
லுக்கு என்ன பொருள் கொள்ளுகிறார்களோ அதே
பொருள்தான் பண்பாடு என்ற சொல்லுக்கும் உரியது.

தமிழருடைய வாழ்க்கை லட்சியங்கள் அனைத்தை
யும் இளம் பெருவழுதி என்ற அரசன் ஒரே ஒரு பாட்டில்
தொகுத்துக் கூறுகிறான். 'உலகமானது தன் நிலையில்
திரியாது ஒரே விதமாக இயங்கிக்கொண்டு வருகிறதே,
இது எதனால்?' என்ற கேள்வியை எழுப்புகிறான். உல
கம் எத்தனையோ மக்கட் சமூகங்கள் சேர்ந்த ஒரு மக்கள்
தொகுதி. ஒவ்வொரு சமூகத்திலும் மக்கள் எத்தனையோ
பேர். அவரவர் தம்தம் வேலையைக் கவனித்து வந்தால்
மட்டும் உலகம் என்று பொதுவாக மக்களினத்தை
ஒன்றாய்க் கருத நேராது. மக்களினம் முழுதும் நலம்
பெற வேண்டும்; அனைவரும் இன்புற்று வாழவேண்டும்
என்ற உயர்ந்த நோக்கமே மேன்மக்களுக்கு இருந்தது.
அவர்களுடைய இயல்பு என்ன?

மேன்மக்கள், என்றும், எல்லா நாட்டிலும் இருந்
திருக்கிறார்கள். தமக்கென்று ஒரு பொருள் அவர்கள்
விரும்பார். எல்லோரும் வாழவேண்டும் என்ற கொள்கை
யுடையவர்களுக்கு வெறுப்பேது? அவர்களுக்கு அச்ச

மும் இல்லை. தங்கள் நோக்கம் ஒன்றுதான் அவர்களுக்குக் குறியேயன்றி, வேறு எதையும் அவர்கள் நாடுபவர்களல்லர். நாமார்க்கும் குடியல்லோம் என்ற இறுமாப்பு அவர்களுக்குண்டு. உண்மையை நிலை நாட்டுவதற்காக எதையும் தியாகம் செய்வார்கள். உயிரைக் கொடுத்தேனும், பொய்ம்மையைக் கடிவார்கள். இவ்வாறு உலகுக்காக உழைத்தலில் சிறிதேனும் அயர்வில்லாதவர்கள்.

இத்தகைய சீரிய உள்ளம் படைத்த பெருமக்கள் வாழ்க்கையே லட்சிய வாழ்க்கை, இத்தகையோர் சிலரேனும் வாழ்தலினாலேதான் உலகம் இன்று நிலைபெற்றிருக்கிறது என்று அப்பாண்டி மன்னன் கூறுகிறான்:

உண்டா லம்ம, இவ் வுலகம் ! இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும், இனிதெனத்
தமியர் உண்டலு மிலரே; முனிவிலர்;
துஞ்சலு மிலர்பிறர் அஞ்சுவ தஞ்சி;
புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே ! (182)

இவ்வித வாழ்க்கை ஓர் உயர்ந்த நெறி.

பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயிலும்போது, அகத்துறையிலே 'பரத்தையிற் பிரிவு' என்ற ஒரு செய்தியை அடிக்கடி நாம் காண்போம். தனக்கேற்ற காதலியை மணம் செய்து கொண்டு வாழ்கிற தலைமகன், எப்படியோ, ஒரு பரத்தையினிடம் ஈடுபடுகிறான்; இது காரணமாகத் தன் நாயகியைப் பிரிந்து பரத்தையோடேயே கூடி ஒழுகுகிறான்; இது, நாயகிக்கும் அவளைச் சேர்ந்தோர்க்கும் எவ்வளவோ துயரத்தை

விளைவிக்கிறது என்பதே பழைய நூல்களிற் கண்ட பொருள். பின்வந்த இலக்கணங்களும் கோவை முதலிய அகத்துறை இலக்கியங்களும் இச் செய்தியையே பல பட விரித்துரைக்கின்றன.

பெருங்காப்பியமாகிய சிலப்பதிகாரமானது இப் பரத்தை யொழுக்கத்தையே அடிப்படையாக வைத்துக் கதையை நடத்திச் செல்கிறது. மாதவி, காதல் மாதவி யாகலாம். ஆயினும், தான் கொண்ட மனைவியைக் கோவலன் பிரிந்து மாதவியோடு கூடி வாழ்ந்ததன் விளைவே துயரம் மிகுந்த அக்காப்பியக் கதை.

ஒழுக்க நெறி பற்றி இன்று நாம் கொண்டுள்ள கருத்துக்களை வைத்து இப்பழைய செய்திகளைப் பார்க்கும் போது, அவை நமக்கு இழிவாய்த் தோன்றுகின்றன. காதல் துறையிலாகட்டும், காப்பியத்திலாகட்டும், பண்டைத் தமிழர் பரத்தையர்பால் படர்தலை நெறியாகக் கொண்டார்களென்றே நாம் எண்ணும்படி யிருக்கிறது. பிறன்மனை நோக்காத பேராண்மை அவர்களிடமில்லை என்று எண்ணுவோம். பரத்தையரைப் பற்றி மிகுதியாகக் கூறியிருப்பது நமக்கு ஓரளவுக்கு அருவருப்பை யுண்டு பண்ணுகிறது. தமிழர் வாழ்க்கை இவ்வளவுதானா என்றுகூட எண்ணும்படி யிருக்கிறது.

ஆனால், இது உண்மைதானா என்பதை நாம் சிறிது ஆராய வேண்டும். புறநானூற்றின் துணைகொண்டு ஆராய்ந்தால், பண்டைத் தமிழர், உண்மைக் காதல் வாழ்க்கையை, அதாவது, இல்லற வாழ்க்கையையே உயர்வாகப் போற்றினர் என்பதும்,பரத்தையோடு கூடி வாழும் வாழ்க்கையை இழிவென்றே கருதினர் என்பதும் புலனாகும். சில உதாரணங்களால் இதை அறியலாம்.

ஊரிலே திருவிழாத் தொடங்குகிறது. ஏழைத் தொழிலாளி யொருவன் விழாவுக்குச் சென்று வேலை

செய்து சம்பாதிக்க எண்ணுகிருன். அதே சமயத்தில், அவனுடைய மனைவி, கருப்பந்தரித்தவள், குழந்தை பெறும் பருவத்திலிருக்கிருள். அன்று, பொழுதோ ஆகிவிட்டது. மழை வேறு, பெய்கிறது. தரையெல்லாம் ஈரமாயிருத்தலால், தன் மனைவி படுத்திருப்பதற்காக அவன் கட்டில் பின்னுகிருன். மிக்க வேகமாய்ப் பின்னுகிருன். பின்னுகிற வேகத்தாலேயே, மனைவியிடத்து அவனுக்குள்ள பரிவை நாம் உணர முடிகிறது:

சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற் றுற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண் டூசியின் விரைந்தன்று மாதோ ! (82)

ஓர் இழிசினன் அன்பை அவன் செயலிலே வைத்து இப்பாடல் காட்டுகிறது. ஓர் அரசனது அன்பு எப்படியிருக்கிறதென்று இனிப் பார்க்கலாம்.

மாக்கோதை என்ற சேரமன்னன் ஒருவன். அவனுடைய காதல் மனைவி இறந்து விட்டாள். சேரன் எவ்வளவோ துயரப்படுகிருன். பட்டு என்ன? இறந்த மனைவியை ஈமத்துக்குக் கொண்டுபோய்க் கட்டையடுக்கி, அதிலே அவள் உடலைக் கிடத்தித் தீ மூட்ட, உடல் வெந்து சாம்பலாகி விட்டது. அவள் பிரிந்து மேலுலகம் போய்விட்டாள். இவ்வளவையும் அவன் அருகிலிருந்து பார்த்துக் கொண்டிருக்கிருன். அப்போது, அவன் மனத்திலுள்ள துயரம் புதிய வேகத்தோடு வந்து தாக்குகிறது. 'எவ்வளவோ கொடியது தான், என்னுடைய துயரம். ஆயினும் என்ன? அதனுல் என் உயிர் இன்னும் போய்விடவில்லையே! மனைவி இறந்த பின்னும், நான் இன்னும் உயிர் வாழ்கிறேனே!' என்று தன் நிலையைக் குறித்து இரங்குகிருன்.

மனைவியினிடத்துக் கணவன் கொண்ட அன்பைக் குறிக்கும் இதை யொத்த செய்தியை இலக்கியத்திலே வேறெங்கும் காண முடியாது.

பூதப் பாண்டியன் என்ற மன்னன் போருக்கு வந்த பகைவர் மீது எதிர்த்துக் கிளம்புகிறான். பகைவரைப் போரில் தொலைக்கா விட்டால், தான் என்ன ஆவது என்று வஞ்சினம் கூறுகிறான்.

என்னொடு பொருதும் என்ப: அவரை
ஆரமர் அலறத் தாக்கித் தேரொடு
அவர்ப்புறங் காணே னாயின், சிறந்த
பேரமர் உண்கண் இவளினும் பிரிக ! .(71)

என்கிறான். பகைவரைத் தான் புறமுதுகிட்டு ஓடச் செய்யாவிட்டால், தன் மனைவியை விட்டுத் தான் பிரிபவனாக என்கிறான். கொடுமைக் கெல்லாம் கொடுமை மனைவியைப் பிரிதல்; இக்கொடுமை தனக்கு நேர்வதாக என்று மிக்க ஆத்திரத்தோடு கூறுகிறான்.

இதனினும் இழிவானது மற்றொன்றிருக்கிறது. நலங்கிள்ளி என்ற சோழ மன்னன் அதைச் சொல்லுகிறான். பகைவரைத் தான் வெல்லாவிட்டால், காதல் என்பதையே அறியாத பொதுமகளிரோடு கூடுகின்ற பொருந்தாத இழி நிலை தனக்கு வருவதாக என்கிறான்.

தீதில் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென் தாரே ! (73)

எனவே, பொது மகளிர் முயக்கத்தை எவ்வளவு கீழாக இவ்வரசன் கருதினான் என்பதை நாம் காண்கிறோம்.

ஆகவே, பரத்தையர் கூட்டுறவு என்பது பண்டை இலக்கியங்களில் அடிக்கடி நாம் கண்ட போதிலும், அது தமிழர் பண்பாட்டுக்கு ஒத்ததன்று என்பதையும்,

அவ்வுறவு மிக்க இழிவு தருவது என்றே அறிவுடைய பெருமக்கள் கருதினர்கள் என்பதையும் புறநானூறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

அக்கால மக்கள் வாழ்க்கையில் சிறப்பாய்ச் சொல்லத்தக்க இரண்டு பண்புகள், வீரம், கொடை என்பன. வீரத்தை விளக்கிக் காட்டும் பல வரலாறுகளைப் புறநானூற்று வாயிலாக நாம் அறிவோம். பொதுவாக அவர்களுடைய போர்த்திறம் எத்தகையது என்பதை மட்டும் நாம் இங்கே காணலாம்.

இன்றையப் போர் எவ்வளவு இரக்கமற்றது என்பதைப் பத்திரிகை வாயிலாகவும் நம் நாட்டிற் சில இடங்களில் உள்ள பஞ்சத்தின் வாயிலாகவும் உணர்கிறோம். பண்டைத் தமிழ் மன்னருடைய போர் முறையை நாம் ஆராயும்போது, அப்போரிலும் அவர்களுக்கு இரக்கவுணர்ச்சியே மேம்பட்டிருக்கக் காண்கிறோம். குழந்தையையும் பெண்டிரையும் ஒருங்கே கொன்று குவிக்கும் இக்காலத்து 'நாகரிகப்' போரை அவர்கள் அறியார். போர் தொடுக்கு முன்னே, பகைவன் நாட்டிலுள்ள பசு நிரையும், அந்தணரும், பெண்டிரும், பிணியாளரும், புதல்வ னில்லாதோரும் அகன்று செல்லுமாறு ஒரு பாண்டியன் பறையறைவித்தான் என்று ஒரு பாடல் கூறுகிறது. இப்படி அறிவிப்பதே போருக்குரிய அறமாம்:

ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடை யிரும், பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறுஅ தீரும்,—
எம்மம்பு கடிவிடுதும்,—நும்மரண் சேர்மின்என
அறத்தாறு நுவலும் பூட்கை. (9)

போரிலே வெற்றி தோல்வி என்பது மாறி மாறி வருவது. ஆனல், வீரருக்குத் தோல்வி என்பது கிடையாது. புறங்காட்டுவதனினும் பார்க்க உயிர் விடுதலே

மேலானது, எளியது என்று தமிழ்வீரர் எண்ணி வந்தார்கள். மார்பிலே வேல் தைக்கலாம், புண்படலாம், அது வீரத்தின் அடையாளம்; ஆனால் புறத்திலே வேல் தைத்துப் புண் உண்டாயிற்றென்றால், அது, இவ்வீரன், புறங்காட்டி ஓடியதால் ஏற்பட்டது என்றுதானே ஆகும்? இதனால் புறப்புண் படுவதை மிக்க இழிவாய்க் கருதி வந்தார்கள். கரிகால் வளவனோடு பெருஞ்சேரலாதன் என்ற சேரன் பொருதான்; போரிலே சோழன் எறிந்த வேலானது சேரன் மார்பில் தைத்து உருவி முதுகுப் புறமாக வெளிவந்துவிட்டது. இதைக் கண்ட போது அம்மன்னனுக்கு அவமானம் பொறுக்க முடியவில்லை. எப்படியும் புறப்புண் புறப்புண்தானே என்று வருந்தி உயிரைவிட்டுத் துணிந்து விட்டானாம்.

புறநானூறு நமக்கு உணர்த்துகின்ற தமிழர் இயல்புகளிலே, வீரத்துக்கு அடுத்த முதன்மையுடையது கொடைத்திறம். பண்டைத் தமிழ் மன்னரும் வள்ளல்களும், கொடுப்பதையே ஓர் அருங்கலையாகப் போற்றி வந்திருக்கிறார்கள். 'ஈ யென இரத்தல் மிக்க இழிவானது; ஈயேன் என்னல் அதனினும் இழிவானது' என்று கழை தின்யானையார் என்ற புலவர் கூறுகிறார். (204). 'கொடுத்தல் உயர்ந்ததுதான். சந்தேகமில்லை. ஆனால், கொடுத்ததைக் கொள்ளேன் என்று மறுக்கும் உளப்பாங்கு வருமானால் அது எவ்வளவோ மேலானது' என்றும் கூறுகிறார்.

பாண்டியன் நெடுஞ்செழியனோடு பொருதற்காக அவனுடைய பகைவர் திரண்டு வருகிறார்கள். அவனும் போருக்குப் புறப்படுகிறான். புறப்படும்போது, எதிர்த்த பகைவரைத் தான் வெல்லாதுபோனால், எப்படிப்பட்ட இழிநிலை தனக்கு வரும் என்பதை அவன் கூறுகிறான். பல இழிநிலைகளைக் கூறிவிட்டு, இறுதியாகக் கூறுகிறான்: "என் சுற்றத்தார் போன்றார் மிக்க துயரமுறும்

படியாகவும், என்னிடம் வந்து இரப்போருக்கு இல்லை யென்று சொல்லும்படியாகவுமுள்ள இழிந்த வறுமை நிலையை நான் அடைவேனாக" என்று வஞ்சினம் கூறி முடிக்கிறான்:

புரப்போர் புன்கண் கூர,
இரப்போர்க் கீயா இன்மையான் உறவே (12)

எனவே, கொடுக்கவியலாத நிலையே மிக்க இழிவானது என்று நம் மக்கள் எண்ணி வந்தார்கள் என அறிகிறோம். பசியோடு வந்த ஒரு வேடனுக்கு உணவாக வேண்டும் என்ற எண்ணத்துடன், இரண்டு பறவைகள், தங்கள் உடலை யுண்டு அவன் பசியாறட்டும் என்று எண்ணி, நெருப்பில் வீழ்ந்து உயிர் துறந்தன என்பது பழங்கதை. குமணன் என்ற வள்ளல் புலவருடைய வறுமையைக் களைய எண்ணித் தன் தலையையே வெட்டிப் பரிசில் வேண்டிய புலவரிடம் தந்தான் என்று புறநானூறு கூறுகின்றது.

இச் சிறப்புக்களெல்லாம் பெற்ற கொடைத்திறமே உயர்வானது என்ற நோக்கம் பண்டைத் தமிழருக்கு எவ்வாறு விளைந்தது? தானம் செய்வது சிறந்த புண்ணியம், அதுகாரணமாக மறுமையிலே நல்ல நிலை பெற்றுச் சுகமடையலாம் என்ற கருத்தா கொடைக்கு இவ்வளவு பெருமையைத் தந்தது? அன்று என்கிறார் உறையூர் முடமோசியார் என்ற புலவர். கொடையை, அதாவது அறத்தை, மறுமையிலே பலன் பெறுதல் வேண்டும் என்ற நோக்கத்தோடு இம்மையிலே விற்கும் வணிகனல்லன், ஆய் என்ற வள்ளல் என்று அவர் கூறுகிறார். சான்றோருடைய நெறி அறநெறி; ஆகவே, அந்த நெறியைப்பற்றி ஒழுகுகின்றான், ஆய்:

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம்எனும்
அறவிலை வணிகன் ஆய் அலன் ; பிறரும்

சான்ரோர் சென்ற நெறியென,
ஆங்குப் பட்டன்று அவன்கை வண்மையே. (134)

'மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று' என வள்ளுவர் கூறியதை நாம் இங்கே நினைவு கூரலாம். கொர்டை வழங்குவதாகிய நெறியைச் சான்ரோர் ஏன் மேற்கொள்ளவேண்டும் என்ற கேள்வி அடுத்து எழுகின்றது. ஈவதிலே என்ன இருக்கிறது? எதற்காக ஈதல் வேண்டும் என்று நாம் நிச்சயமாய்க் கேட்போம். இக்கேள்விக்குத் திருவள்ளுவர் தம் அனுபவத்தில் கண்ட அரிய விடையை அழகாக உரைக்கிருர். செல்வமானது யாரிடத்திலும் நிலைத்திருப்பதன்று. தானே வைத்திருக்கலாம் என்று ஒருவன் நினைத்தால், நிச்சயம் அவனை விட்டுச் செல்வம் சென்றுவிடும் தன்மை பெற்றிருக்கிறது. ஆகவே, செல்வத்தால் இன்பம் பெற வேண்டுமென்றுல், அதைத்தானே ஒருவன் மனமாரக் கொடுத்துவிடுவதுதான் தக்கது; வைத்திருக்க எண்ணிஞல் இழக்கப் போவது நிச்சயமல்லவா?

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல்? தாமுடைமை
வைத்திழக்கும் வன்கண வர்!

கொடுப்பதனுல் விளையும் இன்பத்தை அறியாதோரே அதை வைத்திருக்க எண்ணிப் பின் இழந்து துன்புறும் அறிவில்லா மக்கள் என்கிருர் திருவள்ளுவர்.

பண்டைத் தமிழ் மக்கள் ஈத்துவக்கும் இன்பம் அறிந்தவர்கள். வைத்திழக்கும் வன்கண்மை அவர்களிடம் இல்லை. இந்த இயல்பை நக்கீரர் கூறுகிருர்.

செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே. (189)

என்ருர் அவர். செல்வத்தை ஈவதே இன்பம் என்பது மட்டுமின்றி, இவர் இன்னும் மேற்சென்று, செல்வம் பெற்றதே ஈவதற்காகத்தான் என்று வலியுறுத்திக்

காட்டுகிறார். எல்லாம் எனக்கு எனக்கு என்று ஒவ்வொன்றையும் வலிந்து பற்ற முயலும் மக்கள் வாழும் இன்றைய உலகிலே இதனினும் சிறந்த உள்ளப்பண்பை நாம் சுட்டிக் காட்டுவதற்கில்லை.

'செல்வத்துப் பயனே ஈதல்' என்பதைச் சொல்லுதல் எளிது, உணர்ந்து நடத்தல் அரிது என நாம் எண்ணலாம். உண்மைதான். ஆனால், அவ்வுண்மையையுணர்ந்து அதன் வழி ஒழுகினோரும் அக்காலத்து இருந்தார்கள் என்பதையும் புறநானூறே நமக்கு உணர்த்துகிறது.

வானத்திலே வெண்மேகத்தைப் பார்க்கிறோம். அது மழை பொழிகிறதா? பொழிவதில்லை. ஆனால், சற்று நேரத்துக்கெல்லாம் அது கடலுக்குச் சென்று கொஞ்சம் நீரை உண்டு கரு நிறம் பெற்று வருகிறது. நிறையச் செல்வம் பெற்றவுடனே அது என்ன செய்கிறது? தான் முகந்து வந்த நீராகிய செல்வமனைத்தையும் நிலத்துக்கு வழங்கிவிட்டு முன்போல் வெறுங்கையோடு அப்பாற் சென்றுவிடுகிறது. பெற்ற செல்வத்தைக் கொடுத்து விடவேண்டும் என்ற தருமத்தை அப்படியே கடைப் பிடிக்கிறது. வயலென்றும் மலையென்றும் பாலை என்றுமா அது பார்க்கிறது? இல்லை. அறு குளத்து உகுக்கிறது. அகல் வயலில் பொழிகிறது. உறுமிடத்து உதவாத உவர் நில மூட்டுகிறது. எவ்வகையிலும் வரையாமல் பெய்கிறது.

உத்தமமான ஈகையின் இயல்பும் இதுவேதான். பாத்திரமறிந்து பிச்சையிடு என்பதெல்லாம், பலனைக் கருதிச் செய்யும் அறம். உள்ளத்திலிருந்து தானே விளைவதன்று; இது, புறநானூறு காட்டும் தமிழர் பண்பாட்டுக்கு மாறுபட்டதாகும். ஈவதிலே இன்பம் காண்பவன், தன் கொடையை யார் பெறுகிறார் என்றுபதிலே ஏன்

கருத்தைச் செலுத்துகிறான்? அவனுடைய உள்ளம் நெகிழவேண்டும்; அவ்வளவுதான். கைகள் தாமாகக் கொடை வழங்குகின்றன.

பாரி ஒருநாள் காட்டிலே வேட்டையாடித் திரும்பினான். வழியிலே ஒரு மெல்லிய முல்லைக் கொடி படர்வதற்குக் கொம்பில்லாமல் காற்றிலே தளர்ந்து ஆடிக்கொண்டிருக்கக் கண்டான். கொடியின் பசுமையும் இளமையும் தனிமையும் அவனுள்ளத்தை நெகிழ்வித்தன. அப்படியே தேரைவிட்டுக் குதித்தான். கொடி படரும் படி தேரை அதனருகே விட்டுவிட்டுத் தன் ஊர் திரும்பி விட்டான்.

பாரிக்கு ஆளில்லையா? அவர்களை அழைத்து முல்லை படர்வதற்கேற்ற பந்தர் போடச் சொன்னால் போடமாட்டார்களா? இந்த முறையிலே நாம் நினைப்போம். ஆனால் பாரியின் பண்பட்ட உள்ளம் இப்படி நிதானமாக எண்ணவில்லை. முல்லையின் துன்பத்தை அது கண்டது, உடனே துன்பத்தை நீக்க வழி தேடிற்று. தேரை நிறுத்தி அப்பால் வந்த மறுகணமே அவன் முல்லையையும் தேரையும் மறந்தே போயிருப்பான்.

கார்காலம். வானத்திலே மேகம் வரக் கண்டு, மயிலானது ஆனந்தமாகத் தன் தோகையை விரித்து ஆடிக்கொண்டிருக்கிறது. பேகன் அவ்வழியே வருகிறான்; அவனுடம்பே குளிரில் நடுக்குகிறது. பொன்னும் பட்டும் இழைத்த கலிங்கம் (போர்வை) போர்த்திருக்கிறான். வழியிலே மயிலைக் காண்கிறான். 'அடடா, நானே இந்தக் குளிரில் இவ்வளவு நடுங்குகிறேன். ஒரு போர்வையும் இல்லாத இம் மெல்லிய மயில் என்ன செய்யும்!' என்ற இரக்கம் அவனுக்கு உண்டாகிறது. அந்தக் கணமே, தான் அணிந்திருந்த போர்வையை அம்மயிலின் மீது போர்க்குமாறு வீசி எறிந்துவிட்டு வீடு திரும்புகிறான்.

புத்தர்பிரான் பிறர் துக்கங்காணச் சகியாராய், பிறர் துக்கங் களைய வழியென்ன என்று காண்பதற் காகத் தம் மனைவியையும், மகனையும் அரச வாழ்வையும் துறந்து சென்றார். பிறர் துக்கம் காணச் சகியாத இயல்பு தமிழர் பண்பாட்டில் ஒரு சிறந்த அம்சம் என்பதை இவ் வரலாறுகள் தெளிவாக உணர்த்துகின்றன.

மற்றோரம்சமும் இவ்வரலாறுகளிலே புலனாகின்றது; அதாவது, இயற்கையழகைக் கண்டு அனுபவிக்கவல்ல ஓர் அழகுணர்ச்சி பண்டைத் தமிழ் மக்களிடத்து இருக் கக் காண்கிறோம். ஒரு முல்லைக் கொடியின் அழகிலும் ஒரு மயிலின் அழகிலும் இருவர் தம் உள்ளத்தைப் பறி கொடுத்ததன் பயனாக அல்லவா இத்தகைய அரிய கொடை அளிக்க நேர்ந்தார்கள்? எனவே, அவர்களிடம் வீரமும் கொடையும் சிறப்பாக அமைந்தமை போலவே, நுட்பமான கலை யுணர்ச்சியும் கருணையும் பொருந்தி யிருந்தன.

முல்லைக் கொடியானது பாரியினுடைய கருணை யைத் தூண்டிவிடக் காரணமாயிருந்ததென்பதை மேலே பார்த்தோம். அதே கொடி ஒரு கவிஞர் இதயத்திலே எத்தகைய சோகத்தைத்தான் தோற்றுவிக்கிறது! முல்லை அழகாகப் பூத்திருக்கிறது. அவ்வழியே கீரத் தனார் என்ற புலவர் வருகிறார். அவருடைய நண்பனும் அந்நாட்டுக் குரியவனுமான சாத்தன் என்பவன் இறந்து போய்விட்டான். அவன் இறந்த துக்கத்தில் மூழ்கிய புலவருக்கு முல்லையினிடத்து இரக்கமுண்டாகிறது. பூத்தமுல்லையை அனுபவித்தற்கு மக்கள் இல்லை. எல்லோரும் சாத்தன் இறந்த துயரத்தில் மூழ்கிக்கிடக் கிறார்கள். முல்லை மலர்ந்தால் யாது பயன் என்று கேட்கிறார்.

இளையோர் சூடார், வளையோர் கொய்யார்,
நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான், பாடினி அணியாள்,
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை,
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே?

முல்லையின் அழகிலே பண்டைத் தமிழ் மக்கள் ஈடுபட்டிருந்ததை இவ்வரலாறுகள் காட்டுகின்றன. அழகிலே ஈடுபட்ட அம் மக்களுக்குக் கலையுள்ளம் அமைவது இயற்கை. பலதிறப்பட்ட கலைகளிலும் அவர்கள் வல்லவர்களாயிருந்தார்கள். இதுபற்றிய ஒரு செய்தியை மட்டும் இங்கே குறிப்பிடலாம். இசைபற்றிய கிளர்ச்சிகள் மலிந்த இக்காலத்தில் இது சுவையுடையதாயிருக்கும்.

இசை நுட்பங்களை யெல்லாம் தமிழர் எவ்வளவோ பழங்காலமாகக் கண்டு பாடிவந்திருக்கிறார்கள். இசையை எவ்வளவோ வளர்த்தும் வந்திருக்கிறார்கள். நாயன்மார் காலத்துக்கு முன்னமே தொடங்கித் தமிழ்ப் பண்கள் தமிழக மெங்கும் ஒலித்து வந்திருக்கின்றன. சோலையிலுள்ள வண்டுகளெல்லாம் அருமையாகப் பண் பாடுகின்றன என்று நம் கவிஞர் சொல்வார்கள்.

சேறுடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்த வண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலை யாமே!

என்று ஞானசம்பந்தர் பாடுகிறார்.

மலகரி குறிஞ்சி தேசி பைரவி சுரும்பு பாடும்
வயலருணை மங்கை பாகரே!

என்கிறார் மற்றொருவர்.

இவ்வாறாக, வண்டுகளும் பண்பாடின என்று சொல்லத்தக்க அளவுக்கு இசை வளர்ந்திருந்தது. புறநானூற்றின் காலத்திலே இவ்வளர்ச்சியைக் காண்கிறோம். வெவ்வேறு பண்களுக்கு வெவ்வேறு உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் இயல்பு உண்டு. இவ்வியல்புகளையொட்டி, இன்ன இன்ன பொழுதிலே இந்த இந்தப் பண்ணைத்தான் பாடலாம் என்ற வரையறையும் ஏற்பட்டிருந்தது. காலையிலே மருதம் பாடுவதும் மாலையிலே செவ்வழி பாடுவதும் மரபு; நள்ளி என்ற ஒரு வள்ளலைப் பாராட்டும்போது, ஒரு புலவர் இவ்வியல்பை மிக்க நயமாகக் குறிப்பிடுகிறார்.

பாணர்களெல்லாம் தங்கள் ஏழ்மை காரணமாகத் தலைவனையடுத்துச் சென்று பாடும்போது, முறையாக அவ்வவ் வேளைக்குரிய இராகத்திலே பாடல்களை அழகாகப் பாடுவது மரபாயிருந்தது. ஆனால், இந்த நள்ளி கொடுத்த கொடையின் மிகுதியினாலே, பாணர்கள் பாடிப் பிழைக்கவேண்டிய அவசியம் இல்லாது போய் விட்டது. செல்வச் செருக்கு அவர்களிடம் மிகுதியாக்வே, இசை மரபையும் கைவிட்டார்கள். காலைக்குரிய மருதப் பண்ணை மாலையில் பாடுகிறார்கள், மாலைக்குரிய செவ்வழிப் பண்ணைக் காலையில் பாடுகிறார்கள். 'நள்ளியின் வண்மையால் இவர்கள் இப்படிக் கெட்டுப் போய்விட்டார்களே' என்று புலவர் நகைச்சுவை பொருந்தக் கூறுகிறார்:

நள்ளி வாழியோ நள்ளி! நள்ளென்
மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கிற் செவ்வழிபண்ணி
வரவெமர் மறந்தனர்: அது நீ
புரவுக் கடன்பூண்ட வண்மை யானே. (149)

இத்தகைய அருங்கலைச் சிறப்புக்களெல்லாம் பண்டைத் தமிழரிடம் பொருந்தியிருந்தன வென்பதைப் புறநானூறு தெரிவிக்கிறது.

கொடிய அரக்கத்தனமான போர் நடக்கும் உலகத்திலே போருக்கு மத்தியில் நாம் வாழ்கிறோம். வல்லரசு என்ற கொடிய சொற்றொடரொன்று புதிதாக ஏற்பட்டிருக்கிறது. அரசு என்றாலே, கொடுமை செய்தால் போதும், செங்கோல் வேண்டாம் என்றே இத்தொடர் தெரிவிக்கிறது. ஓர் அரசுக்கு வலி மிகுதியாயிருந்தால் பிறரைத் துன்புறுத்துவதே அதன் தொழில் என்பதையும் இன்று காண்கிறோம். இந்த நினைவுகளோடு புறநானூற்றை நாம் பார்க்கும்போது, அங்குள்ள போர்களும் வீரமும் பிறவும், நமக்குத் தவறான எண்ணத்தை உண்டாக்கிவிடுதலுங் கூடும். அக்காலத்து மக்கள் போரையும் கொடுமையையுமே சிறந்த குறிக்கோளாகக் கொண்டிருந்தார்களோ என்று நாம் ஐயுறுதலுங்கூடும்.

இவ்வையம் பொருந்தாது. உலகத்திலே பொய்யே மலிந்து போயிருக்கிறது; இதனால் மக்கள் பொய் பேசுவதே லட்சியமாகக் கொண்டார்கள் என்று கருதமுடியுமா? மெய்ம்மைதான் மக்களுடைய லட்சியம். இதே போல, போர்கள் எவ்வளவோ மலிந்திருந்தபோதிலும் அன்பும் அறமுமே குறிக்கோளாயிருந்தன. மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற சேரனது ஆட்சிச் சிறப்பை ஒரு புலவர் கூறுகிறார். அவன் போர்வலி மிக்கவன் என்பது உண்மை. ஆனால் அவன் போரிட்டது கிடையாது. அவனுடைய வாள் உறைக்குள்ளேதான் இருக்கும்; அம்பு தூணிக்குள்ளேதான் இருக்கும். தூணியை விட்டு வெளிவராத அம்பே அவனுடைய நாட்டுக்குப் பெரிய அரணாக இருந்தது. மக்கள் எவ்விதப் பயமுமின்றிச் சுகமாக வாழ்ந்தார்கள்; அறநெறி வாழ்க்கை எங்கும் பொருந்தியிருந்தது.

அம்பு துஞ்சுங் கடியரணால்
அறந் துஞ்சுஞ் செங்கோலையே !

என்றார் புலவர். அறத்தை நிலைநாட்டுவதற்கே அவனுடைய அம்பு பயன்பட்டதாம். கொலைக்கும் கொள்ளைக்குமென்றே படை பெருக்குகின்ற இக்காலத்தில், புலவர் கருத்தை உணர்வதும் கடினமல்லவா? எத்தனை நகரங்கள் அழிவதையும் எரிவதையும் இன்று பத்திரிகை வாயிலாக நாம் அறிகிறோம்! எத்தனைக் கப்பல்கள் எரிகின்றன! தீ யூட்டுவதற்கென்றே எத்தனை விதமான கருவிகள், முயற்சிகள்! பண்டைத் தமிழ் மக்களும் இருவகைத் தீயின் கொடுமையை உணர்ந்திருந்தார்களாம். ஒன்று, சோற்றை ஆக்கும் தீ; மற்றொன்று, சூரியனுடைய வெப்பமாகிய தீ! தென்னிந்தியாவில் அமைந்த தமிழ்நாடு சூரியனுடைய வெப்பத்தினின்றும் தப்ப முடியாதல்லவா?

சோறு படுக்குந் தீயோடு
செஞ்ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெற லறியார்நின் நிழல்வாழ் வோரே!

அம்புதுஞ்சுங் கடியரணும் அறந்துஞ்சுஞ் செங்கோலுமுடைய மாந்தரஞ்சேரல் நாட்டில் வாழ்ந்தோர் சோறாக்கி உண்டு வாழ்தலல்லது என்ன கொடுமையை அறியப் போகிறார்கள் என்கிறார் புலவர்.

இனி, அந்த மக்களுக்குப் படை உண்டா? ஆம், உண்டு: வேல், வாள், ஈட்டி, கேடயம், வில், அம்பு, கணிச்சி, குந்தம் என்று நாம் வரிசையாகச் சொல்ல எண்ணுவோம். இப்படைகள் இருந்தமை உண்மை, இவற்றைக் கொண்டு அவர்கள் போரிட்டதும் உண்மை தான். ஆனால், இவைகளே முடிவென்று கொண்டு மக்கள் வாழவில்லை. படைக்கலம் ஏந்தி வாழ்வதையே அம்மக்கள் லட்சிய வாழ்வாகக் கொள்ளவில்லை. பின் எதைக் கொண்டார்கள்? புலவர் சொல்லுகிறார்:

நாஞ்சில் அல்லது படையும் அறியார்!

கலப்பையாகிய ஒரே படைதான் அவர்கள் அறிவார்கள்: பூமியைத் திருத்தி நாட்டுக்குச் செல்வத்தைத் தரவல்ல உழுபடையொன்றே அவர்களறிந்த படை.

இக்காலத்து அரசியல் நூல், பொருளாதார நூல், சமுதாய நூல் ஆகிய யாவும் செல்வத்தைப் பற்றி ஒரு முகமாக ஒரே முடிவைத்தான் கூறுகின்றன. நாட்டுக்கு உண்மையான செல்வத்தைத் தருபவன் யார்? உத்தியோகஸ்தனா? வியாபாரியா? கப்பலோட்டியா? போர் வீரனா? இவர்கள் யாவரும் அல்லர்.

வெறும் நிலத்தைத் திருத்தி நீர்பாய்ச்சி அதிலே ஒரு பிடி விதையை விதைத்து நூறு பிடியாக அறுவடை செய்கிறானே உழவன், அவனொருவன்தான் நாட்டின் செல்வத்தை விளைவிக்கிறான் என்று அனைவரும் ஒத்துச் சொல்கிறார்கள். பொன்னும் வெள்ளியும் ஈட்டினால் மட்டும் செல்வமாகிவிடாது. ஒன்றும் இல்லாத இடத்திலே புதிதாகச் சில உணவுப் பொருளைத் தோன்றச் செய்பவனே செல்வத்தைத் தோன்றச் செய்கிறான். செல்வத்தைச் சிருஷ்டிக்கிறான். இந்த அரிய உண்மையையும் தமிழர் கண்டார்கள் என்பதை, 'நாஞ்சில் அல்லது படையும் அறியார்' என்று பாடிய நம் புலவர் எடுத்துக்காட்டுகிறார்.

உண்மையான செல்வம், பசியைப் போக்கவல்ல உணவுப் பொருளைத் தரும் பயிர்த்தொழிலே என்று கண்ட தமிழ் மக்கள், பசியைப் போக்குவதே சிறந்த அறமாகக் கருதினார்கள் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை. பஞ்சத்திலடிபட்ட இன்றைய உலகத்திலே 'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்' என்ற முழக்கம் ஓங்கி வருகிறது. மக்கள் தொகை பெருகி வருகிறது. அதற்கேற்ப அழித்தல் வேலையும் கொடுமையும் பெருகி வருகின்றனவேயொழிய,

பயிர்த்தொழில் போன்ற ஆக்கல் வேலை பெருகவில்லை. எனவே, "சோறு வேண்டும்" என்ற கூக்குரல் மிகுதி யாகிறது. பயிர்த் தொழிலே மிகுதியாயுள்ள நாட்டில் மக்கள் உணவின்றிச் சாகிறார்களென்பதைவிடக் கொடுமை வேறு உண்டா?

தனி யொருவனுக்குணவில்லை என்ற நிலைக்குத் தமிழர் சரித்திரத்தில் இடங்கிடையாது; அது தமிழர் மரபும் அன்று. 'ஒருவேளை கூட ஒருவனுக்கு உணவு இல்லை என்றால் அந்த நிலையை என்னால் தாங்கமுடியாது' என்கிறார் ஔவையார்:

ஒருநாள்
ஒருபொழு தொருவன் ஊணொழியப் பார்க்கும்
நேர்நிறை நில்லா தென்னுமென் மனனே
நேர்நிறை நில்லா தென்னும் மனனே!

என்பது தனிப்பாடல். மருதன் இளநாகனார் ஒரு பாண்டியனை வாழ்த்தும்போது, இதே கருத்தில், "உனது நாட்டில், இல்லாதோர் இல்லையென்று போம்படியாக நீ நெடுநாள் அரசுபுரிவாயாக!" என்று வாழ்த்துகிறார்.

இல்லோர் கையற,
நீ நீடு வாழிய நெடுந்தகை!

தனியொருவனுக்குணவில்லை என்று சொல்லும் இழிந்த நிலை நேராதபடி எல்லோரும் சுகமே வாழவேண்டும் என்ற குறிக்கோளை இதிலே காண்கிறோம்.

இவ்விதமாக, புறநானூற்றின் மூலமாய்த் தமிழர் பண்பாட்டின் இயல்புகளான வீரம், கொடை, காதல், கருணை, அழகுணர்ச்சி, கலையுணர்ச்சி முதலியவற்றைப் பார்த்தோம். இறுதியாக, தமிழருடைய இதயம் எங்கே இருக்கிறதென்ற வினாவுக்கும் ஒரு பாடல் விடை தருகிறது. விரிந்த சமநோக்குடைய உள்ளத்துக்கு, மக்களனைவரும் சகோதரர். ஊர்களனைத்தும் சொந்த ஊர்

போல, நன்மை தீமை இரண்டும் ஒருவன் தானே படைத்துக் கொள்கிறானே யன்றி, பிறரால் வரத்தக்கனவல்ல. எனவே, அவனுக்கு யாரிடத்தும் விருப்போ வெறுப்போ இல்லை. சாவைக்குறித்த அச்சமும் அவனுக்கு இல்லை. பிறந்த நாள் தொடங்கியே சாவென்பது உண்டு. ஆகவே, மரணம் இனிப் புதிதாக வரப்போவது என்ற நினைவே இல்லை. உலகிலே நம்முடைய புலன்களுக்கு எட்டாத ஒரு நியதி இருக்கிறது. மக்களுயிர் அந்நியதியின் வழியே இயங்குகிறது. நீரிலே மிதக்கும் ஒரு பொருள், நீர் போம் வழியே போகவேண்டியிருப்பது போல, உயிரும் தன் செயலொன்றின்றியே தொழிற்படுகிறது. இதனால், வாழ்க்கை வேண்டுமென்று விரும்புவதற்கு என்ன இருக்கிறது? அல்லது வேண்டாமென்று ஒதுக்குவதற்குத்தான் என்ன இருக்கிறது? நன்மை மிக்கவர்களைப் பார்த்து மதிப்பதற்குத்தான் இடமுண்டா? அல்லது சிறியோரைக் கண்டு இகழ்தல் தான் கூடுமா?

யாதும் ஊரே; யாவரும் கேளிர்,
தீதும் நன்றும் பிறர்தர வாரா,
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன.
சாதலும் புதுவ தன்றே, உளது.
வாழ்தல்,
இனிதென மகிழ்ந்தன்று மிலமே; முனிவின்
இன்னா தென்றலு மிலமே; மின்னொடு
வானந் தண்துளி தலைஇ, ஆனாது
கல்பொரு திரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின், மாட்சியிற்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.

இதுவே பழந்தமிழரது உண்மைப் பண்பாடு.

இந்த நூல்

•

இலக்கியப் பண்பு — தமிழர் சரித்திரம்

தமிழர் சமயம் — தமிழர் பண்பாடு

என்ற தலைப்புக்களில் புறநானூற்று விழாவில் சென்னைச் சர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறை (முன்னைய) தலைவர் ச. வையாபுரிப் பிள்ளை அவர்கள் தலைமையில் நால்வர் நிகழ்த்திய சொற்பொழிவுகளும், தலைமையுரையும் கொண்டது.

இது சக்தி வெளியீடு